# மின்நிலா

நவம்பர் 9 2020

## தீபாவளி சிறப்பிதழ்






தேம்ஸ் நதி படங்கள் (வல்லி சிம்ஹறன்)

எங்கள் வாசகர்கள், தொடர்ந்து ஆதரவு தந்து வரும் பதிவர்கள், எங்கள் ப்ளாக், மின்நிலா ரசிகர்கள்
எல்லோருடைய குடும்ப உறுப்பினர்களுக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்.

தீமைகள் மறைந்து நன்மைகள் பெருக நம்மைப் படைத்த இறைவன் நமக்கு அருளட்டும்.



# : பொருளடக்கம் :

ஏன் கொண்டாடுகிறோம்?........................................................................................2
சூடக் கொடுத்தாளோ சுடர்க்கொடி - மாலா மாதவன்.................................... 5
கவிதை :: துரை செல்வராஜூ.......................................................................12
கவிதைக்குப் பொய் அழகு - ஜீவி...................................................................13
ஊட்டி பற்றிய கட்டுரை :: கே ஜி விசுவேஸ்வரன்..........................................18
என்ன கோபம் - சிறுகதை :: ரஞ்சனி நாராயணன்..........................................25
மண் கொண்ட மாண்புகள் கவிதை :: துரை செல்வராஜூ..........................30
ஒரு கேள்வி; பல பதில்கள்...............................................................................32
பெண் பார்க்கச் சென்ற அனுபவங்கள் !..........................................................64
வாட்ஸ் அப் கலக்கல்கள் (compiled by kgg)..................................................67
வாகனத்தின் பின் நோக்கிக் கண்ணாடியில் தெரிந்த சூரியன்.................80
படமும் கவிதையும் :: மாலா மாதவன்.............................................................82
எங்கள் ஆசிரியர் KGY ராமன் எழுதிய ஒரு கவிதை......................................83
Benzaiten :: நெல்லைத்தமிழன்..........................................................................84
தங்கம் படுத்திய பாடு :: சுபஸ்ரீ ஸ்ரீராம்............................................................85
அயல்நாட்டுச் சிறுகதை - ‘போரடிப்பவன்’ ! எழுதியவர் : ஏகாந்தன்......87
குழந்தைகள் தின சிறப்புப் பக்கங்கள்..............................................................93
எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள் ...................................................99
கடப்பா - பானுமதி வெங்கடேஸ்வரன் ரெஸிப்பி.......................................... 101
கேள்வி பதில்கள்................................................................................................107
சரவணா ஸ்டோர்ஸில் சற்று நேரம்... ஸ்ரீராம்............................................ 116
கதம்பம் :: ஸ்ரீராம்..............................................................................................120
கனவினில் வந்தது கவிதைகள் தந்தது... ஸ்ரீராம்........................................ 126
ஏழை மாணவிக்கு வீடு கட்டிக்கொடுத்த தலைமை ஆசிரியர்................128
மாய நோட்டு நெடுங்கதை :: ஜீவி.................................................................. 131

## ஏன் கொண்டாடுகிறோம்?

தீபாவளி பண்டிகை வடமாநிலங்களில் லக்ஷ்மி பூஜையாக கருதப்படுகின்றது. வியாபாரிகள் மற்றும் தொழில் நிறுவனங்கள் அந்த ஆண்டின் புதுக்கணக்கை 'தீபாவளி' பண்டிகையின்போதுதான் ஆரம்பிப்பது வழக்கம்.

நரகாசுரன் கொல்லப்பட்ட தினத்தையே தீபாவளிப்பண்டிகையாகக் கொண்டாடுவதாகப் புராணங்கள் விளக்குகின்றன. அதனால், இத்தினத்தை, நரக சதுர்த்தி என்றும் அழைப்பார்கள்.

கிருபானந்த வாரியார், ''பார்வதி தேவியர் கேதார கௌரி விரதம் இருந்து, சிவபெருமானின் இடப்பக்கத்தில் இடம்பெற்ற திருநாளே தீப விழாவாகக் கொண்டாடப் படுகிறது'' என்றுரைக்கிறார்.

தீபாவளித் திருநாளில், திருக்கயிலாயத்தில், சிவனும், பார்வதியும் சொக்கட்டான் விளையாட்டு ஆடியதாக ஒரு புராணக் குறிப்பு உண்டு. இதை நினைவூட்டும் விதத்தில் குஜராத்தில் தீபாவளி தினத்தில் இந்து மக்கள் சொக்கட்டான் விளையாட்டு ஆடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

கானக வாழ்வு முடிந்து அரக்கன் இராவணனை அழித்து, சீதையை மீட்ட இராமபிரான், வெற்றித் திருமகனாக அயோத்தி திரும்பிய திருநாளில், மக்கள் தங்கள் இல்லங்கள் தோறும் தீபங்களை ஏற்றிவைத்து மகிழ்ச்சிப் பெருவிழாவாகக் கொண்டாடினார்களாம். அதுவே தீபத் திருநாளாக மாறியது என்று உரைக்கும் சான்றோரும் உண்டு.

இப்படி பலவிதமான காரணங்கள் கொண்டு தீபாவளித் திருநாள் கொண்டாடப்பட்டாலும், அத்திருநாள் நமக்கு உணர்த்தும் பாடம் ஒன்றே ஒன்றுதான்.'தீமைகள் என்னும் இருள் அகன்று, உலகம் முழுவதும் பக்திப் பேரொளியைப் பெற வேண்டும்' என்பதே அது. எனவே, தீபாவளித் திருநாளில், பெரியவர்கள் வகுத்துத் தந்த வழியில், முறையாக இறைவனைப் பூஜித்து அவனது அருள் பெற வேண்டும்.

(நன்றி : webduniya )



**மின்நிலா 025 தீபாவளி சிறப்பிதழ்**

இந்த தீபாவளி திருநாள் சமயத்தில், நீங்களும் ஆதரவற்றோர் முகங்களில் புன்னகை பூக்க உதவலாம்.

நீங்கள் விருப்பப்பட்ட தொகையை ஆதரவற்ற குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக நீங்கள் இணையம் மூலம் அனுப்பலாம்.

அந்தக் குழந்தைகளின் மகிழ்ச்சி உங்கள் தலைமுறைகளை நன்றாக வாழ வைக்கும்.

**You can make a donation in Indian Rupees through NEFT/RTGS/IMPS [even via PayTM, Google Pay, PhonePe, BHIM, Amazon Pay etc ] to our account below:**

**Bank Name: Indian Bank**
**Account Number: 407057376**
**Account Name: Sivananda Saraswathi Sevashram**
**Account Type: SB (Savings Bank) account**
**Bank Branch name: Tambaram East**
**IFSC Code: IDIB000T004**




**LINK : >>>> DONATE**

# சூடக் கொடுத்தாளோ சுடர்க்கொடி

## மாலா மாதவன்

### சூடக் கொடுத்தாளோ சுடர்க்கொடி - மாலா மாதவன்

"தந்தையே!"

அழைக்குமொலி கேட்டதும் அதிர்ந்தார் துளசிங்காச்சாரி.

மும்முரமாகத் தன் கையில் இருக்கும் திருவுருவுக்குத் திலகம் இட்டுக் கொண்டிருந்தவர்..

" யார் என்னைக் கூப்பிட்டது?பிள்ளையில்லாக் குறையைத் தீர்க்கும் அந்த அழைப்பு என் காதில் பஞ்சாமிர்தத் தேனாய் நுழைந்ததுவே! கனவா? கடும் தவப் பலனா?"



அழைப்பு தொனி மாறாது மீண்டும் ஒலிக்க உள்ளிருந்து துளசிங்கத்தின் பத்தினி மங்கை நாச்சியாரும் குடுகுடுவென ஓடி வந்து தன் மணாளன் பக்கத்தில் நின்று கொண்டாள்.

" யாருன்னா? யார் உங்களை அழைப்பது? இந்த ஜன்மத்தில் நம்மை தாயாய், தந்தையாய் அழைக்கும் பாக்கியம் பெற்று விட்டோமா? நீங்கள் தந்தை என்றால் நான் தாயல்லவா? என்னை அம்மா என்றழைக்கும் குரல் ஏன் எனக்கு எட்ட வில்லை?"

கண்ணீர் ப்ரவாகமாய் ஓட தன் மேல்தலைப்பால் துடைத்தபடி நின்றாள் மங்கை.

மீண்டும் குரல்..

" தந்தையே! எம் தாயின் கண்ணீரைத் துடையுங்கள்!"

விதிர்த்து நிமிர்ந்தவர் பார்த்தார்.. அதிர்ந்தார்..

அவர் கையிலிருந்த ஆண்டாள் பேசிக் கொண்டிருந்தாள்.



பச்சை வண்ணப் பட்டுடுத்தி , பந்து போல் கொண்டையிட்டு, நிலை மாலை அணிந்து, நீள்விழி மையிட்டு, முத்து நகை அசைய முறுவல் பூத்து அமர்ந்திருந்தாள்.

" தாயே! நீ .. என் தாய்..! நீ என் தாய்!"

நாக்கு குழறியது துளசிங்கத்துக்கு. மங்கையும் கண் நிலைகுத்த விட்டால் விழுந்து விடுவாள் போல அமர்ந்திருந்தாள். அவளின் விழிமொழி..

" என் மலட்டுத் தன்மையைப் போக்கி மடி நிரப்ப வந்தாயோடி தங்கமே! " என்றது.

" எல்லோரும் தத்தம் குழந்தைகளை தம் தாய் , தகப்பனாகத் தான் பாவிப்பர் தந்தையே! தாங்கள் சொல்வது சரி தான்!"



" நான் பெரியாழ்வார் அல்லம்மா! நான் நான் துளசிங்கம். உன்னையே துதித்து, உன் பெயர் பாடி உனக்காகவே வாழும் சாதாரணன். பொம்மைகள் பண்ணத் தெரியும். பொம்மை மட்டுமே பண்ணத் தெரியும். "

கை கூப்பித் தொழுதார் அவர்.

'" பொம்மைகள் பண்ணத் தெரியும். பொம்மை மட்டுமே பண்ணத் தெரியும். அதிலும் ஆண்டாள் மட்டுமே பண்ணத் தெரியுமோ? என்ன தந்தையே ! எங்கெங்கு காணினும் என் உருவ பொம்மைகளே செய்து இருக்கிறீர்கள்."



"குழந்தையில்லாக் குறை அம்மா! " பிரமையில் இருந்து விடுபட்ட மங்கை அரற்றினாள்.

"அடேயப்பா! காணும் பொருளில் யாவும் கண்ணன் என்று நானிருந்தேன். தாங்கள் இருவரும் காணும் திசை யாவும் கண்கவரும் ஆண்டாளென என்னை வைத்திருக்கிறீர்கள்..எண்ணினேன்! எண்ணினேன் ! எண்ண முடியவில்லை. கண்ணனின் லீலை போல எண்ணிக்கைக்கு அடங்காதது இங்கிருக்கும் என்னுரு"

கலகலவென்று சிரித்தாள் ஆண்டாள்.

மெய்மறந்து அமர்ந்த துளசிங்கத்தையும், மங்கையையும் பார்த்த ஆண்டாள்..

"படைத்தவர், படைப்பிக்கின்றவர் தந்தையாகிறார். தந்தை பத்தினி எனக்குத் தாயாகிறாள். நான் உங்கள் குழந்தையாகிறேன். குழந்தைக்கு அமுது செய்விக்க இன்னும் வேளை வரவில்லையோ?" குறும்பாகக் கேட்டாள் கோதை.

"தாயே! கோவில் விட்டு இங்கு குடிபுகுந்தாயோ? என் இல்லம் கோவிலானதம்மா. இதோ ஒரு நொடியில் சர்க்கரைப் பொங்கல், பாயாசம் எல்லாம் பண்ணி விடுகிறோம். என்ன பிடிக்கும் சொல் உனக்கு!"

" அக்கார அடிசிலில் அடிகை நுழைந்தாலும் தப்பாது நெய்யும் தளரக் கிடைக்கணும். அதுவும் இப்பவே!"

குழந்தையாய் அடம்பிடித்தாள் கோதை.

அப்படியே ஓடி ஓடிச் செய்தாள் மங்கை. அன்றைக்கு மட்டுமல்ல அதிலிருந்து நாட்கணக்கில் அப்படியே தான் அவர்களோடு விளையாடி ஆடிப் பாடினாள் கோதை.

அன்றைக்கு அப்படித்தான் துளசிங்கமும், மங்கையும் ஆண்டாளோடு விளையாடிக் கொண்டிருந்த பொழுது வாசல் கதவு தட்டப் பட்டது.

கோதை குறும்பை நிறுத்தி சாதாரணமாய் மேஜை மீது வீற்றிருக்க..

உள்நுழைந்தார் துளசிங்கத்தின் ஷட்டகர் நித்யபூரணர்.

" என்ன ஓய்! ரங்கனைச் சேவிக்கக் கோவிலுக்கு வருவீர்? அதுவும் இல்லை.. அட! கடை வீதிக்காவது வருவீர்! அதையும் காணோம். மங்கையம்மாவும் காணோம். என்ன ஆச்சு? உடம்பு ஒண்ணுமில்லாது இருக்கேளா?"

இருவரும் கிட்டத்தட்ட ஒருவயது தான் ஆதலால் பெயரிட்டே அழைத்துக் கொள்வார்கள். ஆசையாய் பூரணரே! என்பார் துளசிங்கம்.

" பூரணரே! ரங்கனைக் கூட மறந்து விட்டேன். பூரித்துக் கிடக்கிறேன் ஐயா!"

" அது தான் தெரிகிறதே! பூரிப்பில் பொலிவு கூடி கிடக்கிறது துளசி! உன் முகமும், மங்கை முகமும் எனக்கு பல சேதிகளைக் சொல்கிறது. மங்கை தாயாகப் போகிறாளா?"

கண்கள் பளபளக்கக் கேட்டார் நித்யபூரணர்.

" தாயாகி விட்டேன் அண்ணா!" மங்கை தழுதழுத்தாள்.

பெண்மனம் சந்தோஷமோ, துக்கமோ தன்னையறியாது வெளிக்காட்டி விடும். எதையும் மறைத்து வைக்கத் தெரியாது. ஒரு சிறு அன்பின் தளும்பலில்.. அத்தனையும் பாலாய் அபிஷேகம் ஆகி விடும். அப்படி ஒரு நிலையில் இருந்தாள் மங்கை.

துளசிங்கம் கண் ஆண்டாளைப் பார்க்க, ஆண்டாளோ மௌனமாய் சிலையாய் நிற்க , அவளுக்குத் தன்னை வெளிக்காட்ட விருப்பமில்லை என்றுணர்ந்து..

"பூரணரே! இதோ பாருங்கள்! இத்தனை பெண்கள் எனக்கு. இத்தனை பேருக்கும் தாயாய், தகப்பனாய் நாங்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் ஒயிலாய் நிற்கிறார்கள் பாரும்! இவர்களுக்குத் தோதான மாப்பிள்ளை பார்த்துத் திருமணம் முடித்து.. எத்தனை வேலைகள் எங்கள் சிந்தனையில் ஏறிக் கிடக்கிறது" ..என அத்தனை ஆண்டாள் பொம்மைகளையும் காண்பித்துச் சிரிக்கிறார் கண்ணில் நீர்வழிய.

"இன்னும் உங்களுக்கு வேளை வரலை .. வந்தா தன்னால நடக்கும். கவலைப் படாதே மங்கை. அப்புறம் துளசி! ரங்கனைப் பார்க்கத் தவறாது நீ வந்துடுவியே.. காணோமேன்னு வந்தேன். நாளைக்கு சாயரட்சை ஆண்டாள் திருக்கல்யாணம் கோவில்ல நடத்தறா. அதுக்காவது வந்துடு. நான் அப்போ கிளம்பறேன்.. என்ன?"

விடிந்ததும், ஆண்டாள் எழுந்தாள்.

" தந்தையே! நானும் வரவா!"

" எங்கேயம்மா? நான் ஆண்டாள் திருக்கல்யாணம் பார்க்கச் செல்கிறேன். இனி உன்னைத் தனியா விடுவேனா? மங்கை இங்கு உன்னுடன் இருப்பாள்."

"தாயே! எல்லோரும் போகலாம். என் கல்யாணத்துக்கு நானே போகாமல் எப்படி?" தலையைச் சாய்த்து சிரித்தவள்

பன்னிரு நாமம் தரித்து பஞ்சகச்சத்துடன் தேஜஸாய் இருந்த துளசிங்கத்தின் கையை ஒன்பது கஜம் மடிசார் பட்டுடன் பாந்தமாய் நின்ற மங்கை கையைக் கோத்துவிட்டு "என்னைக் இக்கையில் ஏந்திக் கொள்ளுங்கள் தந்தையே" என்றாள்.

அப்படி அவர்கள் கிளம்பி கோவில் வாசல் வரும் போது மேளம் ஒலிக்க ஆரம்பித்தது.

சன்னிதி வரவும், தந்தையின் காதில் மெதுவாகச் சொன்னாள்.

" தந்தையே! ஆண்டாளாய் நான் அங்கிருக்க வேண்டும். அருகிருந்து மணம் செய்யப் பெற்றோராய் தாங்கள் சீர்செய்ய வேண்டும்"

திடீரென்று அவள் சொல்ல பிரமித்தனர் துளசிங்கமும், மங்கையும்

அதற்குள் நித்யபூரணர் வர, அவர் தான் அந்தக் கோவிலின் பரம்பரை தர்மகர்த்தா என்பதால், துளசிங்கம் தானும் தன் கையில் இருக்கும் ஆண்டாளுக்கு இங்கேயே கல்யாணம் செய்விக்க இருப்பதாய் வேண்டிக் கொள்ள அவர் ஆசைப்படி அந்த ஊஞ்சல் பலகையிலேயே வைக்கச் சொல்லி அனுமதி கொடுத்தார் அவர்.

உடனடியாக சீர்தட்டுகள் ஏற்பாடு செய்யப் பட்டு, புத்தம் புது திருமாங்கல்யம் வாங்கி வரப் பட்டு துளசிங்கமும், மங்கையும் கன்யாதானம் செய்யும் பெற்றோராய்.. பார்க்கிறவர்கள் கண் எல்லாம் நிறைய..

"என்ன ஓய்! நேத்து தான் பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்க்கணும்னீர்! இன்றைக்கு கல்யாணமே முடிஞ்சுடுத்தே!"

" பூரணரே ! எல்லாம் அவள் அருள்!" என்று ஆண்டாளைப் பார்த்துக் கைகாட்ட..

ஆண்டாள் அசையாது புன்முறுவல் பூத்தாள். அந்தப் புன்னகைக்கு அர்த்தம்..

" என்ன துளசி! மாப்பிள்ளை வந்தாரா?" என்று கல்யாண விசாரிப்பாய் ஒருவர் கேட்க..

கண்ணில் நீருடன் தலையாட்டிய துளசி மெல்ல ஆண்டாள் அருகே அமர்ந்து அவள் தலையை வருடி விட, மங்கையும் பக்கத்தில் வந்து ஆண்டாளைத் தொட்டசைத்தாள்.

மங்கையின் காதில் மெல்லச் சொன்னாள் ஆண்டாள்.

" வீட்டிற்குச் செல் அம்மா! இன்றிலிருந்து பத்தாம் மாதம் உன் வயிற்றில் நான் பிறப்பேன்! அதுவரை என் ரங்கனுடன் இங்கே தான்!"

பேசியதறியாமல் பொம்மைச் சிலையாய் நின்றாள் கோதை.



# கார்முகிலே கண்டாயோ ?

## கவிதை :: துரை செல்வராஜூ

கவிதை ஒன்றைக் காணவில்லை
கார்முகிலே கண்டாயோ
கைப் பிரதி எழுதுதற்கு
கரு மையைத் தாராயோ!..

கார்குழலில் பூ முடித்த
கருங்குவளைக் கவிதை..
கண் கொண்டு கண்டிருந்தால்
பூத்து வரும் கவிதை...

கண்டால் நீ சொல்லிவிடு..
கவிதை இதைத் தந்து விடு
கவி மொழியாள் நடந்து வர
கார்முகிலே பந்தல் இடு!.



# கவிதைக்குப் பொய் அழகு - ஜீவி



பிரபஞ்ச ராஜ வீதி
இருவருக்குமே ஒன்று தான்
நேரம் தான் வெவ்வேறே!
யாரு போட்டுக் கொடுத்த
பணிக்கால அட்டவணையோ
தெரியவில்லை

ஒருவனுக்குப் பகலென்றென்றால்
மற்றவனுக்கு இரவு!
ஒருவன் வெம்மையென்றால்
இன்னொருவன் குளுமை--இதில்
முன்னவனின் ஒளி நிழலே
பின்னவன் என்றில்
தகிக்கும் வெப்ப தீக்கதிரே
தண்ணொளிர் பிம்பமெனில்
நம்புவதெப்படி, நானிலத்தீர்?..



**மின்நிலா 025 தீபாவளி சிறப்பிதழ்**

இதுவாவது போகட்டும்
இந்தப் பகல் பையன்
பையப்பைய வருவதற்கு
வழிமேல் விழிவைத்து
பட்டாடை விரித்தது போல்
பழிகிடக்கும் பாருங்கள்
பூவையர் கூட்டம்!...
மேனியெங்கும் அவன் சூடுபட



மல்லாந்திருக்கும் சுந்தரிகள் கூட்டம்!
மலையிடுக்கில் இந்த மன்மதனின்
தலை தெரிந்தால் போதும்
களைகட்டி விடும் இந்த
தளுக்கிகளின் தளிராட்டம்!..
ஒருத்தி பெயர் ரோஜாவாம்
இன்னொருத்தி ஜவந்தியாம்
மற்றொருத்தி மல்லிகையாம்
குமரியிவள் கும்மென்ற வாசனையொடு
குமரனுக்குக் காத்திருக்கிறாள்!..
மந்தகாச சிரிப்பு மற்றொருத்திக்கு
ஆரிவள் என்று அறியும் ஆசையில்
பேர் கேட்டால் பெரிதாகச் சிரிக்கிறாள்;
புரியவில்லையே என்றால்
புதிர் போட்டுச் சொல்கிறாள்;
புருஷன் பெயர் முன்னாடி என்று
சூரியகாந்தி நானென்கிறாள்!
எத்தனை காதலிகளடா இந்த
ஜித்தனுக்கு?.. கலிகாலமடா...

ஒருவனின் கதை இதுவென்றால்
இன்னொருவன் கதையே வேறு
குமுதத்தோடு மட்டும் அவன்
குடும்பம் நடத்துகிறான்
அல்லியென்றும் அவளை அழைப்பர்..
கள்ளியவள் காமக்கனலொடு
தடாக நீர்ப்பரப்பில் சிறுக்கி
தனியாகக் காத்திருப்பாள்!
இரவு தான் இவள் காதலனுக்கு
இந்திரபுரி!.. சல்லாப காலம்!




ஊரெல்லாம் உறங்கிய பின்
மாரெல்லாம் சந்தனக் கலவையொடு
மதியழகன் மேக ஆடை நீக்கி
அதியழகாய் தன் முகம் காட்ட
மதிமயங்கி முறுவலிப்பாள்
சதிராடுவாள், குதிபோடுவாள்
தனக்கு மட்டுமே இவனென்று
தாபத்தில் தாகசாந்தி கொள்வாள்!

நிலா அவன் பெண்பித்தனாம் !..
சாத்திரம் சொல்கிறது!
ஆயிரமாயிரம் மனைவிகளாம் அவனுக்கு;
அபாண்டம்... அபாண்டம்...
அல்லியோடு மட்டும் தானே
சல்லாபிக்கிறான், நிலவழகன்?

குமுதத்தோடு மட்டும் தானே
குலாவுகிறான் அவன்?..
சாத்திரம் பொய்சொல்லுமோ?
சந்தேகம் தான்!..
ஒருவேளை இப்படியிருக்குமோ?.
இரவுக்கு ஒரு அல்லி
பகலுக்குப் பல்லாயிரமென்று...
ஆங்!.. இவனே, அவனென்றால்..
அவனே, இவனென்றால்?..

ஒருவனேதான் பகலெல்லாம்
பல்லிளித்து பசப்பிப் பளீரிட்டுப்பின்
மாலையில் மலையில் மறைந்து




மாறுவேடமணிந்தது மயக்குகிறானோ?
இந்தப் பகல் - இரவு நாடகம் அறியாமல்
அசமந்த அல்லி, ஏமாந்து
இறுமாந்திருக்கிறாளோ?..
சாத்திரம், சரியோ?..

ஒன்று மட்டும் நிச்சயம்!
இவன் இருக்கும் போது
அவனில்லை. அதேமாதிரி
அவன் இருக்கும் போது
இவனில்லை என்பதால்
இருவரும் ஒருவரோ?..

இது இரட்டைவேட
சாகச சல்லாபமோ?
ஆம்!..பகல் வேஷம் கலைந்தது
சாத்திரம், சரிதான்!..
ஊராரே, உலகத்தீரே



உண்மை தெரிந்து கொள்ளுங்கள்!..
ஞாயிறும் அவன்தான்;
திங்களும் அவனேதான்!..

# ஊட்டியின் மாற்றங்கள்

## அமரர் கே ஜி விசுவேஸ்வரன்.

## ஊட்டி பற்றிய கட்டுரை :: கே ஜி விசுவேஸ்வரன்

நேற்றுதான் கோபாலன் சார் முகநூலில் நீலகிரி ஹிஸ்டரி குழுவில் இந்த" சேரிங் கிராஸ் " பற்றி ஒரு நேர்த்தியான பதிவு போட்டிருந்தார் , ஒரு நகரை பலருக்கும் அடையாளப்படுத்துகிறவிதமாய் சில இடங்கள் அசத்தலாக அமைந்து விடும். .இந்த அடையாளங்கள் கொஞ்சம் குறைய அப்படியே இருக்க அதைச் சுற்றிலும்தான் மாற்றங்கள் அமைகின்றன..



# மின்நிலா 025 தீபாவளி சிறப்பிதழ்

உதகையைப் பொறுத்தவரை நகரத்தின் துவக்கத்தில் உள்ள சேரிங் கிராஸ் என்கிற முக்கோண சதுக்கப் பகுதியை இப்படிச் சொல்லமுடியும், இங்கு அமைந்துள்ள விதவிதமான சிலைவடிவங்களும் அவைகளில் வரும், ஒழுகும் நீர்த்தாரைகளும் வெகு அழகானவை , 170 வருடங்களுக்கு மேலும் ரசிப்பவர்களுக்கு ஆச்சர்யம் தருபவை , இதைப் போலவே இங்கிலாந்திலும் உள்ள சேரிங் கிராஸ் பகுதியிலும் உண்டு என்பது இன்னொரு சுவாரசியம். இந்த முக்கோண பகுதியைச் சுற்றி உள்ள தடுப்புகளும் , சுற்றி உள்ளவைகளும் காலத்துக்கு ஏற்றவிதமாய் மாறிக் கொண்டிருக்கிறது.




Charimg cross 1945

உதகையின் உயிர் நாடியான பிரதான கம்மர்ஷியல் சாலை இங்கிருந்து தான் துவங்குகிறது எனலாம் .நகருக்குள் போகிற பாதையும் , அரசினர் பூங்காவிற்கு போகிற பாதையும் கோத்தகிரி குன்னூரிலிருந்து வருகிற ,பாதைகளும் இங்குதான் சந்திக்கின்றன. மாறாதது இந்த முக்கோணமெனில் இதைச் சுற்றி உள்ள எல்லாமே. மாறிப் போனதுதான் காலத்தின் கட்டாயமாக இருக்கலாம் ..குறிப்பாக கடந்த ஐம்பது ஆண்டுகளில் அபரிதமான மாற்றங்கள் , சொல்லப் போனால் இந்தப் பதிவில் உள்ள அந்த நாளின் புகைப் படத்தை இப்போது கவனித்தால் , . சுற்றிலும் தெரிகிறவைகள் உங்களுக்கு இப்பொழுது உள்ள பகுதிகள் தானா இவைகளென வியந்து போகலாம் ...




அந்த நாட்களில் எங்கள் வீடு இருந்த புது அக்ராஹாரம் பகுதியிலிருந்து ஐந்து நிமிடங்களில் இந்த கம்மர்ஷியல் சாலைக்கு வந்துவிட முடியும் . ஒரு நீண்ட மரத்திலிருந்து புறப்படுகிற சிறிதும் பெரிதுமான கிளைகள் போல இந்த சாலையிலிருந்து தான் தான் சிறிதும் பெரிதுமான பாதைகள் மேலும், கீழும், நீண்டும், பிரிந்தும் , திரும்பியும் .போகின்றன .உதகையின் நகர்ப்புறமெங்கும். ஐம்பது வருடங்களுக்கும் மேலாக நாங்கள் எப்போதும் நடந்து கொண்டிருக்கும் இந்த பிரதான சாலையின் மாற்றங்கள் யோசிக்கையில் வியப்புதான் .

இந்த முக்கோணத்தின் வலதுபுறம் தெரிகிற கட்டிடத்தில்தான் ஒரு சிறிய ஹோட்டல் இருந்தது . பள்ளி நாட்களில் இந்தப் பகுதியை கடக்கும் பொழுதெல்லாம் அங்குதான் பலரும் டீ , டிப ன் சாப்பிடுவது வழக்கம் .பலபடிகள் மேலேறிப் போக வேண்டும் , பல தடவைகளில் டீ அருந்திக் கொண்டிருக்கும் பொழுது இந்த சேரிங் கிராஸ் சதுக்கம் கண்களுக்குள் நிறைந்திருக்கும் .அந்த கட்டிடத்தின் கீழாக ஒரு அச்சகம் இருந்தது .இன்னொரு பகுதியில் கீழிருந்து மேலேறுகிற மரப்படிக்கட்டுகளுடன் ஒரு ஸ்டுடியோ இருந்தது.




அதன் உரிமையாளர் அப்பாவிற்கு .நண்பர் என்பதால் எங்களின் முதல் குடும்பப் போட்டோவை அங்குதான் எடுத்தோம் .

அருகிலிருக்கும் பள்ளம் போன்ற பகுதியில்  வெஸ்லி சர்ச் உட்புறமாக இருக்கும் அதைத் தாண்டி கேக் பிரியர்களின் விருப்பத்திற்கு கிங்ஸ்டார் .பேக்கரி...பின் அதே வரிசையில் மாடர்ன் ஸ்டோர்ஸ் , இரானி கஃபே , பின் நாங்கள் எப்போதும் அந்த நாட்களில் வேடிக்கை மட்டும் பார்க்கும் நீண்ட செல்லாராம்ஸ்.

இந்த வரிசை எல்லாம் என் நினைவு வரிசையிலிருந்து மாத்திரமே. இதில் செல்லாராம்ஸ் தவிர இன்றைய நாட்களில் மற்றவைகள் கால சுழற்சியில் காணாமல் போயின ..வெஸ்லி சர்ச் அந்த நாட்களில் பள்ளத்திலிருந்தது இன்று சற்று மேலேறி வந்திருக்கிறது



மாற்றங்களின் அபரிதம் கமர்ஷியல் சாலைக்கு அப்புறம் தான் ,அந்த நாட்களில் அந்தப் பகுதி அங்கங்கு மரங்கள் சோம்பறித்தனமாய் நிற்கும் வெறும் புல் மேடாகவும் நடுவில் தலை காட்டியிருக்கும் சில பாறைகளுமாகவே இருந்தது. நெடுக சேரிங் கிராஸ் வரை .பிறகுதான் அங்கு பெரிய சூப்பர் மார்க்கெட் வருவதாகச் சொன்னார்கள்.

அந்த சரிவான பகுதியில் எப்படி என்னவிதமாய் கட்டப் போகிறார்களென நண்பர்களெல்லாம் பேசிக் கொண்டிருந்தது நினைவிலிருக்கிறது .கட்டத் துவங்கிய பிறகும் கூட எப்படி அது அமையுமென்பது ஒரு புதிரைப் போலிருந்தது . யார் இந்த வடிவமைப்பு செய்தார்களென்று தெரியவில்லை , ஆனால் வெகு வித்தியாசமான ஒரு மாபெரும் கட்டிடமாய் அந்த சூப்பர் மார்க்கெட் எழும்பி நின்றது . ஒருவகையில் அந்த நாட்களின் முதல் 'மால் 'என்று என்று சொல்லலாம்

.முப்பதுக்கும் மேற்பட்ட கடைகள் ஒரே கட்டிடத்தில் என்பது எங்களுக்கு சொல்லி முடியாத ஆச்சர்யம் .உள் போகத் தயக்கமாய் வெளியில் காட்சிப் படுத்தப் பட்டிருக்கிறவைகளை வேடிக்கை மட்டும் பார்த்து போகிற செல்லாராம்ஸ்ன் மவுசு இந்த புது கட்டிடத்தால் குறைந்து போனதென்று சொல்லலாம்.முதல் தடவையாக எதையும் வாங்காமல் இந்த சூப்பர் மார்க்கெட்டிற்குள் நுழைந்து மாடியில் உள்ள

கடைகளை சுற்றிப் பார்ப்பது எங்களில் பலருக்கு வாடிக்கையானது .இந்தக் கடைகளால் பலரின் புது நட்புகளும் , பலருக்கு காதல்களுமே துளிர்த்தன என்பது இன்னொரு சுவாரசியம்.

அதீத மாற்றம் கண்ட இன்னொரு பகுதி .கம்மர்ஷியல் சாலையிலிருந்த அந்நாள் வெங்கடேஸ்வரா ஓட்டலிருந்து (இன்றைய கனரா வங்கி ) நகராட்சிப் உயர்நிலைப் பள்ளி வரை ( இன்றைய அரசினர் மேல்நிலைப் பள்ளி )வரை உள்ள பகுதி வெறும் புல் வெளியாக இருந்தது .இந்தப் பகுதியில்தான் உதகை சீசன் சமயங்களில் சின்ன கூடாரங்கள் போட்டு குட்டி கண்காட்சிகள் ( நாக கன்னி , பொம்மலாட்டங்கள் இப்படி பலவைகள் ) களை காட்டும் .ஜே ஜே என்று தளும்புகிற சீசன் கூட்டங்களில் பொடியன்களாகிய நாங்களும் தெரிந்திருக்கிறோம்.

அக்டோபர் நவம்பர்களில் பட்டாசுக் கடைகள் வரிசையாய் .மழை நாட்களில் சேறும் சகதியுமாக அங்கு விளையாடப் போகிற பசங்களின் புகலிடமாய் இருக்கும்.

இன்று இங்கு சொல்லப்பட்டதின் எவ்வித சுவடுகளுமின்றி கட்டிடங்கள் நெடுக ஆக்கிரமித்து விட்டன.

இங்கு சொல்லப்பட்ட மாற்றங்கள் முழுமையானதல்ல , சொல்லப் போனால் அது இன்னும் பெரிய கட்டுரையாக மாறிவிடுகிற அபாயம் இருக்கிறது .ஆக என் மனதில் உணர்ந்த பெரிய மாற்றங்களை குறிப்பாக நகரத்தின் வளர்ச்சியில் காலத்திற்குள் முழுகிப் போனவைகள் சிலதை மட்டுமே பதிந்திருக்கிறேன் .

நண்பன் ஒருவன் ஒருமுறை சொன்னது நினைவில் வருகிறது ." ஊட்டிலே இந்த ஒரு ரோட்டை விட்டா ஒண்ணுமே இல்லை " என்றான் .ஆனாலும் எங்கள் மக்களுக்கு இந்த பிரதான சாலை சலித்ததாகத் தெரிய வில்லை . இது எனக்குமே வியப்புதான்.

ஊட்டியை விட்டுப் போய் தலை முறைகள் கழித்து வந்தவர்களும் இந்த சாலையில் மாறிபோனவைகளைக் கண்டு வியந்தோ சலித்தோ போய்க் கொண்டு தங்கள் மனதுள் பதிந்திருந்த அந்த சாலையின் அந்நாள் கட்டிடங்களை நினைத்துக் கொள்வதை அறிந்தி தெரியும் ருக்கிறேன்.

இந்த காணாமல் போன உயிரற்ற கட்டிடங்களின் மீதான ஈர்ப்பும் பிரியமும் ஒரு புரியா முரண்தான் ,இன்னும் இரானிஸ் கஃபே க்காக பெருமூச்சு விடுபவர்கள் இன்னும் ஏராளம் .சூப்பர் மார்க்கெட்டின் பல கைதிகள் உண்டு . உதகையில் வங்கி வேலையில் தன் வாழ்வினைத் துவங்கின என் அண்ணாவின் நண்பர் ஒய்வு பெற்ற பின்பும் இன்னும் ஊட்டி வந்து சேரிங் கிராஸில் இறங்கி இந்த சாலையில் காலாற நடந்து பின் பஸ் பிடித்து கோவை போய்விடுவாராம். மாற்றங்களைப் பார்த்துக் கொண்டு . மாறிப்

போனவைகளை மனதுள் நினைத்துக் கொண்டு பெரு மூச்சுடன் , அல்லது தளும்பும் நினைவுகளோடு அவர் போவாரோ என்று தோணுகிறது .இன்னும் கிங்ஸ் ஸ்டார் கேக்குகளை ஏக்கத்துடன் பேசும் பலரைத் தெரியுமெனக்கு .

என்றாலும் தான் பெரும் மாறுதல் அடையாமல் தன்னைச் சுற்றி மாறி கொண்டிருக்கிற சகலத்திற்கும் சாட்சியாய் இருக்கிற சேரிங்கிராஸ் சதுக்கம் எல்லாவற்றையும் சலிப்பின்றி பார்த்துக் கொண்டிருக்கிறது .இப்போதெல்லாம் வண்ண விளக்குகளின் தோழமையில் சுற்றி உள்ள புதிய வட்ட அமைப்பிலிருந்து சந்தோஷத்தின் பீறிடல் போல எழும்புகிற நீர்த் தாரைகளுடன் மேலிருந்த சிலைகளிலிருந்து ஒழுகும் நீருடன் எதனை முறை பார்த்திருந்தும் அலுப்புத் தராததால் இன்றும் இருந்து கொண்டிருக்கிறது.



(கட்டுரை ஆசிரியர் திரு கே ஜி விசுவேஸ்வரன் அவர்கள் - என்னுடைய உடன் பிறந்த அண்ணன். இந்தக் கட்டுரையை அவர், எங்கள் சகோதரர்கள் வாட்ஸ் அப் குழுவில் அக்டோபர் இருபத்தைந்தாம் தேதி அனுப்பினார். அக்டோபர் மாத இறுதியில் காய்ச்சல் வந்ததை அலட்சியமாக விட்டுவிட்டார். இரண்டு நாட்கள் கழித்து நவம்பர் மூன்றாம் தேதி covid test செய்து, + என்று தெரிந்ததும், அவரை சிகிச்சைக்கு ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறார்கள். பிராணவாயு அளவு வெகுவாகக் குறைந்து, அவர் நவம்பர் ஏழாம் தேதி மாலை அமரராகிவிட்டார். ஓம் ஷாந்தி :: KG கௌதமன் )

# என்ன கோபம்?

## ரஞ்சனி நாராயணன்

நீங்களும் ஆச்சு. உங்க கணவனும் ஆச்சு. ஆள விடுங்க.......!'
விருட்டென்று எழுந்து போன என் மருமகளை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தேன்.



ஏன் இப்படிப் பேசுகிறாள்? எப்போதும் இப்படி பேச மாட்டாளே.... மனதில் சிறு அலை எழுந்து அடங்கியது. ஒன்றும் சொல்லாமல் சிந்தனையில் ஆழ்ந்தேன்.
எங்களுக்கு ஒரே பிள்ளை. அதனால் நானும் இவரும் எப்போதுமே அவனுடன் தான். வேறு எங்கு போவது? அதனால்

அவனுக்குக் கல்யாணம்
பேசும்போதே நானும் அவரும்
ஒரு தீர்மானத்திற்கு வந்தோம்.
மருமகள் வந்தபின் வாயை மூடிக்
கொண்டு இருப்பது;
அனாவசியமாக அவர்கள்
விஷயத்தில் தலையிடுவது
இல்லை; எங்களால் முடிந்த
அளவு உதவுவது என்று.
வேலைக்குப் போகும் மருமகள்.
அவளுக்கும் என் உதவி
தேவைபட்டது. மெதுமெதுவாக
அவள் கையிலேயே
சமயலறையையும்
ஒப்படைத்துவிட்டேன். காலையில்
எழுந்து காய்கறிகளை நறுக்கி
வைத்துவிடுவேன். மின்னல்
வேகத்தில் வந்து எல்லாம்
செய்துவிடுவாள். சுத்தம் செய்யும்
வேலை என்னுடையது.
நம்முடன் தான் இவர்கள்
இருப்பார்கள் என்ற நிதர்சனத்தை
மருமகளும் முதலிலேயே புரிந்து
கொண்டுவிட்டாள். குழந்தை
பிறந்த பிறகு எங்கள் உதவி
அவர்கள் இருவருக்கும்
அதிகமாகவே தேவைப்பட்டது.
முகம் சுளிக்காமல் செய்தோம்.
எத்தனைதான் ஜாக்கிரதையாக
இருந்தாலும் சிலசமயம் ஏதாவது
நடந்துவிடுகிறது. முதல் தடவை
இப்படி நடந்தபோது அவள்
இரண்டு மூன்று நாட்கள் சரியாகப்
பேசவில்லை. வீடே மௌனம்
காத்தது. கொஞ்சம் பழைய
நிலமை திரும்பியதும் நான்

சொன்னேன்: ‘இங்க பாரும்மா நானும் நீயும் தினமும் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. நீ முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டால் அவனும் எங்களுடன் பேசுவதைத் தவிர்த்துவிடுகிறான். எங்கள் இருவருக்கும் வீட்டில் இருப்பதே தண்டனை போல ஆகிவிடுகிறது. அதனால் எதுவானாலும் நீ வெளிப்படையாகப் பேசிவிடு. நானும் சொல்லிவிடுகிறேன். இருவரும் இப்படிப் பேசிவிட்டால் இந்த சங்கடமான நிலையைத் தவிர்த்து விடலாம்’. அவள் பதில் எதுவும் சொல்லவில்லை ஆயினும் நீக்குபோக்காக நடந்து கொண்டாள்.

இப்போது என்ன ஆயிற்று? எதற்காக இப்படி எடுத்தெறிந்து பேசிவிட்டுச் செல்லுகிறாள்? நான் சொன்னதும் பெரிய விஷயம் இல்லையே. என் கணவருக்கு பருப்புசிலி ரொம்பவும் பிடிக்கும். அதுவும் மணல் மணலாக இருக்கவேண்டும். என் மருமகளும் வெகு சீக்கிரம் நான் செய்வதுபோலவே செய்யக் கற்றுக் கொண்டுவிட்டாள். இன்றும் நன்றாகவே வந்திருந்தது. எப்போதும் முட்டைக்கோஸ், கொத்தவரங்காய் இவற்றில் தான் பண்ணுவோம். இன்று இரண்டும் இல்லை. அதனால் பீன்ஸ் போட்டுப் பண்ணியிருந்தாள். சாப்பிட்ட என் கணவர்

கொத்தவரங்காயில் செய்திருந்தால்
நன்றாக இருந்திருக்கும் என்றார்.
அதை நான் அவளிடம் சொன்ன
போதுதான் அவளிடமிருந்து இப்படி
ஒரு பதில்.
எனக்கெனவோ இது வேறு ஏதோ
அலுப்பு. அதைத்தான் அவளையும்
அறியாமல் என்னிடம்
காண்பிக்கிறாள் என்று
தோன்றியது. யோசித்துக்
கொண்டே இருந்தேன்.
பிள்ளையைக் கூப்பிட்டேன்.
“அவளை டாக்டர் வத்ஸலாவிடம்
அழைத்துப் போ “
“ எதற்கு? “
“ சொன்னதைச் செய் “
நானே தொலைபேசியில்
டாக்டரிடம் பேசி
அப்பாய்ண்ட்மென்ட் வாங்கிக்
கொடுத்தேன்.
இருவரும் கிளம்பிப் போனார்கள்.
ஒருமணி நேரம் கழித்து
மருமகளே போன் செய்தாள். நல்ல
செய்தி தான்.
சுறுசுறு என்று எழுந்து ஸ்வீட்
செய்ய ஆரம்பித்தேன்.
இரண்டாவது முறையாகப் பாட்டி
ஆகப்போகிறேன். எத்தனை
முறையானாலும் பாட்டி உறவு
போல வருமா? இன்னொரு
காரணமும் உண்டு என்
சந்தோஷத்திற்கு.
எங்களைப் போல எங்கள் பிள்ளை
ஒரே இடத்தில் இருக்க
வேண்டாம். மாறி மாறி இருந்து
வரலாம், இல்லையா?


CS Home
Food Services
Call for Delivery
+91- 9940903876
+91-7010826957
Breakfast
Delivery Charges Rs.20/30 depending on Area
Idli ( 5 No's)
Venpongal ( 450 ml)
Poori ( 4 pc's )
Kicchadi ( 450 ml)
Any one of this
Price - Rs.80
Call : 6380177905 / 7010826957
LUNCH
Sambar / Vattha Kulambu / Morekulambu ( Any one of this )
Poriyal / Kootu
Rasam
Pickle
Rice
Price Rs.100
Delivery Area Ramapuram / Valasaravakkam / KK Nagar / Nesapakkam / Virugambakkam
DINNER
Chappathi ( 3 pc's)
Dosa ( 3 Pc's)
Poha Upma ( 450 ml)
Any one of this
Price Rs.80
Adobe Spark

# மண் கொண்ட மாண்பு..

******************************

## துரை செல்வராஜூ

**மண் கொண்ட மாண்புகள் கவிதை :: துரை செல்வராஜூ**

மண் கொண்ட மாண்புகள்
மீண்டு வர வேண்டும்...
கண் கண்ட கனவுகள்
கை நிறைய வேண்டும்..

தீபங்கள் ஒளி தர
தீவினை அகன்றதும்
தீதிலா வழி சென்று
ஜோதியாய் நின்றதும்

ஆவளி ஆக அன்பு
தீபங்கள் ஏற்றினோம்
தீப ஆ வளியென்று
தெய்வமே போற்றினோம்..

வறியாரும் வாழ்வதனில்
வளங் காண வாழ்த்தினோம்
வளங் காணும் வாழ்வதனில்
வகை ஒன்றைக் கூட்டினோம்..

உண்பதுவும் நன்னாள்
உடுப்பதுவும் பொன்னாள்.
உருகி மனம் ஒருவற்கு
உதவுதலும் திருநாள்..

என்றாகி நின்றாலும்
இதனுள்ளே ஒன்றுண்டு
ஒன்றென்ற பொருள் கண்டு
உணர்வதிலே நலம் உண்டு..

உண்பதுவோ நன்னாள்
உடுப்பதுவோ பொன்னாள்
உருகி மனம் ஒருவற்கு
உதவுதலே திருநாள்..

படிகொண்டு பாம்பணையில்
துயில்கின்ற பரம்பொருள்
பார் நலம் காத்தெங்கும்
தர வேண்டும் திருவருள்..

அளந்தார்க்கு அளந்தபடி
அருள்கொண்டு பொழிகவே..
அருள்வேண்டி நிற்பார்முன்
அன்னையெனப் பொலிகவே..

வில் கொண்டு நின்றனை
வீரம் விளைத்தனை..
வெல் என்ற சொல் தந்த
வேல் கொண்டு வந்தனை..

சொல் கொண்டு உந்தனை
ஏற்று கின்ற எந்தனை
காத்தருளும் எந்தையே
கதி காணும் சிந்தையே...



மின்நிலா 025 தீபாவளி சிறப்பிதழ்

# என் கேள்விக்கு என்ன பதில்கள் !

## KG கௌதமன்

புதன் கிழமைகளில், எங்கள்பிளாக் வலைப்பூவில், வாசகர்கள் கேள்விகளுக்கு நாங்கள் பதில்கள் அளித்து வருகிறோம். (engalblog.blogspot.com) நாங்களும் அவ்வப்போது சில கேள்விகள் கேட்டு, வாசகர்களின் பதில்களைப் பெற்று, மற்ற வாசகர்களும் அவற்றைப் படித்து, விவாதங்கள் புதன் பதிவில் நடக்கும்.

ஒரு கேள்வி; பல பதில்கள்

ஒரு வித்தியாசமான முயற்சியாக, சில பொது கேள்விகளை facebook பக்கத்தில் கேட்டு, அவற்றிற்கு, நண்பர்களிடமிருந்து பதில்கள் பெற்றேன்.

அவற்றைத் தொகுத்து, இங்கே வெளியிடுகிறேன். பதில்கள் பதிவு செய்த எல்லோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 01. Facebook உறுப்பினரானதில் உங்களுக்கு ஏற்பட்ட நன்மை என்ன, தீமை என்ன?

Jaganmohan Namakkal Ramachandran :

நன்மை : நல்ல நண்பர்கள் நிறைய கிடைத்தார்கள். மாறுபட்ட சிந்தனைகள் தெரிந்துகொள்ள முடிகிறது.
தீமை : மாறுபட்ட கருத்துக்களால் சில நண்பர்களை இழந்தது. நேரத்தைக் கொல்வது.

Saminatha Bharathi :

நன்மை: பல நல்ல நண்பர்களை ஃபேஸ் புக் எனக்கு அறிமுகப் படுத்தியது. அதில் சில, பல முக்கியஸ்தர்களுடன் நேரடித் தொடர்பிலும் இருக்கிறேன்.
தீமை என்று குறிப்பிட்டுச் சொல்ல ஏதுமில்லை.

தில்லைநாயகம் :

நன்மைகள்: மகிழ்ச்சி தீமைகள்: இல்லை
1600 நண்பர்கள் கிடைத்தார்கள் கொரோனா காலத்தில் வெளியில் செல்லாமல் தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டது. ஒருவர்க்கு தகவல் அளித்தால் உலக நண்பர்கள் அனைவருக்கும் சென்று பதில் கிடைத்ததில் மகிழ்ச்சி. நன்றி . தகவல் தில்லை. Ex. அசோக் லேலண்ட் பொருள் அபிவிருத்தி பிரிவு

Karthik Lakshmi Narasimman:
தீமைலாம் பேஸ்புக்கால் அல்ல. நம் நடவடிக்கைகளின் எதிர்வினைதான்.
நன்மை
1 பல அருமையான நண்பர்கள் / பிரபலங்களின் நட்பு
2. தொழில் விஸ்தரிப்பு.

Indira Parathasarathy
Nanmai. Palavizayam aruthal,nalla sagothara sagothirigal, kadavulintharisanangal, niraya learn panukindrom.
Theemai. Gasip, arsiyal thakuthal, muranpatana karuthugal.

Adhi Venkat:
நன்மை - நட்புவட்டம் விரிந்தது..
தீமை - அப்படி எதுவும் இல்லை..பிடிக்கவில்லை என்றால் தவிர்த்து விடலாமே..

Jebamani Mohanraj:
பரவலாக அறியப்படுகிறேன்!

Jayavijayan Viswanathan :
நன்மை என்றால் எனது கருத்துக்கள் பலருக்கும் போய் சேர்ந்தது, நட்பில்லாத நண்பர்கள் கிடைக்கும் ஒரே இடம் முகநூல்தான், தன் முகத்தை காட்டாமலே நட்பு கொள்பவர்கள் இருப்பதும் முகநூலில்தான் , அசிங்கமான வார்த்தைகள் பேசுவோார் இருப்பதும் இங்கே தான்; கேவலமான மனிதர்களையும் இங்கே காட்டும். மொத்தத்தில் இது ஒரு பல் சுவை பகுதி !!

சஹானா இணைய இதழ் :

நன்மை - எழுத்து வட்டமும் நட்பு வட்டமும் விரிந்தது. அதோடு, பலதரபட்ட மனிதர்களிடம் பழகும் வாய்ப்பால், சமுதாய பண்புகளை கற்றுக் கொள்ள முடிந்தது
தீமை - அது நாம் பார்க்கும் பார்வையில் தான் உள்ளது. ஒன்று வேண்டுமானால் சொல்லலாம், சில நாட்கள் இலக்கின்றி பதிவு பதிவாய் சுற்றி, நேரம் இழுக்கும் போது, வேலைகள் தடைபடும். அந்த சமயம் "இது வேணுமா?" எனச் சலிப்பு தோன்றும்

Gajaraj Shunmugam :
I Remembered old meories in AL people like us. Good friends, Eliminates stress & strain. No disadvantages.

Sampath Kumar :
மனதளவில் உங்களைப் போன்ற உறவினர்களின் பக்கத்தை நல்ல விதமாக தெளிவு கிடைத்தது.

Asokan Kuppusamy (கே.அசோகன் மும்பை.)
நன்மை: படைப்பாளிகள் பலர் நட்பு கிடைத்தன.
தீமை: கருத்து சொன்னால் தேவையற்ற அநாகரீகமாக பதிவுகளும் முகமறியா நபர்களிடம் இருந்து வருகிறது.

Devarajan Shanmugam :
நன்மை; புதிய எழுத்தாளர்களை அடையாளம் காணமுடிந்தது.அதில் சிலரை பத்திரிகையில் எழுத வைத்து அழகு பார்த்த அந்த அனுபவம் புதியது.
தீமை; கொஞ்சம் நேரவிரயம்.ஆனாலும் அர்த்தமுள்ள பொழுதுபோக்கு.

Raja Melaiyur :
நன்மை: நிறைய நண்பர்கள்
தீமை: BP, tension, கோவம்,கடுப்பு எல்லாம் அதிகமாச்சு.

Mala Madhavan :
நன்மை : நேரத்தை விழுங்கியது. நிறையக் கற்றுக் கொள்ள முடிந்தது.
தீமை : நேரத்தை விழுங்கியது. நிறைய வேலைகள் செய்யாமல் நின்றன.

Venkataramani KG:
தீமை எதுவும் இல்லை!

Vasumathi Balasubramanian:
அரட்டை அடிக்கும் திருப்தி.

Palani Balaraman :
அப்டேட்டாக இருக்க முடிகிறது..பழைய நட்புக்களுடன் உறவாடுவதில் சந்தோஷம். பொழுது இனிமையாய் கழிகிறது..தீமைகள் நாமாக அமைத்துக் கொள்வதேயன்றி வேறில்லை! பேராசை/சபலம் கூடாதென எச்சரிக்கிறது!!

துரை செல்வராஜு:
தேவையில்லாத இணைப்புகள் இல்லாததால் நிம்மதி... நல்ல விஷயங்கள் நிறையவே கிடைக்கின்றன...

Palani Chamy :
நாம் பயன்படுத்தும் விதத்தில் இருக்கிறது நன்மை தீமை .
இதுவரை நன்மையே.

# மின்நிலா 025 தீபாவளி சிறப்பிதழ்

Chowkidar Rajagopalan Ramesh :

நன்மை… எனக்கு தெரியாது இருந்த பல விஷயங்களை தெரிந்து கொண்டேன். தீமை .. ஒன்றும் இல்லை.

Geetha Sambasivam :

பல உறவுகள் கிடைத்தன. மதுரைக்காரங்க, தெரிஞ்சவங்க பலரையும் மறுபடி அறிமுகம் செய்துக்க முடிஞ்சது. எங்க குடும்பமே ஃபேஸ்புக்கிலே இருக்கு.

Dhinakaran Natarajan :

இவ்வளவு அறிவு ஜீவிகளா, என்று ஆச்சரியப் பட வைக்கும் நண்பர்கள,
ஊக்கமளிக்கும் நட்புகள்,
யதார்த்தை காட்டும் லட்சியவாதிகள,
அறிவுக்கு தீனிபோடும் கருத்துகள் என பல நல்ல விசயங்கள்,

Roobini Kodhandan :

some news, around the local news without any newspaper. Disadvantage : people have the bad habit of forwarding sms anything, without knowledge about it.

Subhasri Sriram :

நன்மை:- நடைமுறை வாழ்க்கையில் நிறைய விஷயங்கள் உடனுக்கு உடன் தெரிந்துக் கொள்ள முடிகின்றது.
தீமை:- ஒருத்தர் எழுதுவதை வைத்து, ரொம்ப நல்லவர் என்று சந்திக்க ஆசைப்படக் கூடாது. ஒரு வேளை சந்தித்தால், அவர்களின் உண்மையான முகம் அப்பொழுது தான் தெரிய வரும். இது என் தனிப்பட்டக் கருத்து. !!!

Saptharishi Lasara :

நன்மை: அத்தனைபேரும் என்னைவிட திறமைசாலிகள் என்று உணர்ந்து கொண்டேன்
தீமை; தேவையில்லாத வெட்டி விவாதமும் எப்போதும் நம்மை நிரூபித்துக்கொண்டேயிருத்தலும்

**Renganathan Santhanam:**

Time pass…

வல்லிசிம்ஹன் :

பல நல்ல விஷயங்கள் கிடைக்கின்றன. வேண்டாத செய்திகள் விலக்கி விடலாம். முக நூலைச்சொல்கிறேன். வாட்ஸாப். நட்பை வளர்ப்பதாகவே நினைக்கிறேன். எல்லோருடனும பேச நல்ல இடம் அரசியல் பேசாதவரை நன்மை தான்.

**Bhanumathy Venkateswaran** :

ஃபேஸ் புக், வாட்ஸாப் போன்றவைகளால் உறவினர்களோடும், நண்பர்களோடும் தொடர்பில் இருக்க முடிகிறது. முதியவர்களுக்கு நல்ல கம்பானியன். ஃபேஸ் புக்கில் இருக்கும் குழுக்களால் நமக்கு கிடைக்கும் அங்கீகாரம் அலாதி திருப்தி.
பாதகம் என்றால் தடியெடுத்தவன் தண்டல்காரன் என்பது போல ஒரு ஆண்ட்ராய்ட் ஃபோன் இருந்தால் போதும்,யார் வேண்டுமானாலும்,என்னவேண்டுமானாலும் எழுதலாம், நோ சென்சார் என்னும் நிலை.
ஃபேஸ்புக் மூலம் நட்பு கொள்வதால் ஏற்படும் பாதகங்கள், சைபர் க்ரைம்.
ப்ரைவசி இல்லாமல் போவது,நம்மை அறியாமலேயே நம்மை யாரோ கண்காணிக்க வாய்ப்பளிக்கிறோம் போன்றவை.

**KILLERGEE Devakottai** :

வாட்ஸ்-ஆப் நன்மைக்காகத்தான் கண்டு பிடிக்கப்பட்டது ஆனால் மனிதர்கள்தான் அதை தவறான வழிகளுக்கு பயன் படுத்துகின்றார்கள்.

**திண்டுக்கல் தனபாலன் :**
**பொய்மை**

**கோமதி அரசு :**
**பேஸ்புக், வாட்ஸ் ஆப் எல்லாம் அளவோடு வைத்து கொண்டால் நல்லதுதான்.**

## 02 : நீங்கள் இதுவரை சந்திக்காத, உங்களுக்குப் பிடித்த ஒரு நபர் யார் ?



**Indira Parathasarathy**
Lalbhahadur sastri
1
Like · Reply · 1h

**Indira Parathasarathy**
Yelimai, arumai super PM
1
Like · Reply · 1h

**Kumar Chandramouli Sengalipuram**
கலைஞர் கருணாநிதி
1
Like · Reply · 1h

**Madeshkannan Erode Munusamy**
SPB
1
Like · Reply · 1h

**Devarajan Shanmugam**
சில்க் சுமிதா
1
Like · Reply · 1h

**Saminatha Bharathi**
கைலாய அதிபர் நித்யானந்தர்.
1
Like · Reply · 1h

**அப்பாவி தங்கமணி**
SPB அவர்கள் 😭
1
Like · Reply · 59m

**Gajaraj Shunmugam**
I wants to meet the Legend P.Susheela maa in my life time.
Like · Reply · 58m 1

**Swaminathan A**
MS Carnatic singer par excellence and TMS
Like · Reply · 18m 1

**Thillai Nayagam**
இதுவரை சந்திக்காத பிடித்த நபர் திரு. KG. ஜாவர்லால் 🙏🇮🇳🙏
Like · Reply · 16m 1

**Ananth Yuva**
My only one favourite man Hitler
Like · Reply · 15m 1

**Kamala Yagnaraman**
கடவுள் !!!
Like · Reply · 12m 1

**Vasumathi Balasubramanian**
En saraswati பாட்டி
Subbaya தாதா
Like · Reply · 2m 1

**Chelliah Ramasamy**
கடவுள்
Like · Reply · 1h 👍 1

**Adhi Venkat**
நிறைய பேர் இருக்காங்க.. முதலிடம் நம் பாரதப் பிரதமர் மோடிஜி அவர்கள்..
Like · Reply · 1h 👍 1

**Vinayaga Murthy**
Late K. Balachandar and Kamalahaasan!
Like · Reply · See Translation · 32m 👍 1

**Mani Sekhar Raman**
Narendra Modi
Like · Reply · 20m 👍 1

**Navneeth Clicks**
திரு. **Mohan Hariharan**
Like · Reply · 22m 👍 1

**Rangachari Raghavan**
திரையிசை . திலகம் கே.வி.மஹாதேவன் அவர்கள்.
Like · Reply · 14m 👍 1

**Srinivasagopalan Madhavan**
K G G sir.
Like · Reply · 8m 👍 1

**Ahilesh Rathinam**
K G GouthaMAN
👍 1
Like · Reply · 7h
↳ K G Gouthaman replied · 1 Reply 7h

**K K S Bharathi**
மோகன் பகவத் ஜி
👍 1
Like · Reply · 7h · Edited

**Ramah Srinivasan**
நமது இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள்.
👍 1
Like · Reply · 6h

**Ramanathan Manoharan**
Kalaignar
👍 1
Like · Reply · 6h

**கார்த்தி கேயன் வாணி**
இலங்கை ஜெயராஜ் அவர்கள்
👍 1
Like · Reply · 3h

**Mahendran Addepally**
God
👍 1
Like · Reply · 10m

**Dhinakaran Natarajan**
Myself
👍 1
Like · Reply · 9h

**Chowkidar Rajagopalan Ramesh**
NAMO
👍 1
Like · Reply · 6h

**Geetha Sambasivam**
எங்க குருநாதர் தான். அவரை நிறையப் பார்த்திருக்கோம். ஆனால் கடந்த 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பார்க்க முடியலை. சமீபத்தில் அவருடைய எழுத்து மூலம் அவர் சத்சங்கம் கிடைத்துள்ளது. என்றாலும் அவரைப் பார்க்க ஆவல், ஆவல், ஆவல்!
👍 1
Like · Reply · 16m

**Kamatchi Mahalingam**
எங்கள் பிளாக் ஆசிரியர்
👍 1
Like · Reply · 2m



Mala Madhavan
நமது இந்தியப் பிரதமர் திரு. மோடி அவர்கள்
Like · Reply · 23h 1

Jebamani Mohanraj
Stanley Rajan
Like · Reply · 23h 1

Rajamanickam Chinnian
God..
Like · Reply · 23h 1

Raja Melaiyur
KPY dheena 1
Like · Reply · 22h

Roobini Kodhandan
My friend DC
Like · Reply · 15h 1

Palani Balaraman
கவிஞர் வாலி 1



Subhasri Sriram
தலாய்லாமா அவர்கள். !!! ❤️
Like · Reply · 2w 1

Renganathan Santhanam
Super star
Like · Reply · 2w 1

Radhakrishnan Chandramouli
Prime minister modi
Like · Reply · 2w 1

Thillai Nayagam
KG. JAWARLAL🙏
Like · Reply · 1w 1

வல்லிசிம்ஹன் :

**நான் சந்திக்காத மிகப் பிடித்தவர்கள்**
**அனேகம்.நம் அன்பு திரு கலாம் முக்கியமானவர்.**

Bhanumathy Venkateswaran :

**இதுவரை சந்திக்காத எனக்கு மிகவும் பிடித்த நபர் ஒருவர் இல்லை, பலர் இருக்கிறார்கள். குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்றால் லா.ச.ரா., குமுதம் ஆசிரியர் எஸ்.ஏ.பி. ரா.கி.ரங்கராஜன் போன்றவர்களை கூறலாம்.**

KILLERGEE Devakottai :

**ரஜினிகாந்த்தின் உடன் பிறந்த சகோதரர் திரு. சத்யநாராயணா அவர்கள்.**

திண்டுக்கல் தனபாலன் :

**DD**





Arun Jawarlal
WiFi router 😏😏 👍 1
Like · Reply · 23h

சஹானா இணைய இதழ்
மடிக்கணினி 🙂 👍 2
Like · Reply · 23h

Kamala Yagnaraman
என் கட்டில், நான் எப்போதும் படுத்து இருப்பது. 👍😢 3
Like · Reply · 23h

Ramanathan Manoharan
Cellphone 👍 1
Like · Reply · 23h

Hariharan Iyer
எனது இன்க் பேனா. ஶ்ரீ ராமஜெயம் எழுத,என் கதகளுக்கு உயிர் ஊட்ட எனது மனதில் வரும் வார்த்தைகளை அழகாக பரிமாறவும் 👍 1
Like · Reply · 23h
↪ Hariharan Iyer replied · 1 Reply

Vijayaraghavan Vijayaraghavan
என்னுடைய காய்கறி வெட்டும் கத்தி. 👍 2
Like · Reply · 23h

**Radhika VM**
Washing machine
Like · Reply · 23h 1

**Devarajan Shanmugam**
ஷேவிங் ரேசர்
Like · Reply · 23h 1

**Subramanian Narayanan**
Two Wheeler and Mobile
Like · Reply · 23h 1

**Geetha Sambasivam**
என்னோட புத்தகங்கள். எனக்கப்புறம் யாருனு கேள்வியை தினம் தினம் அவர் கேட்டுட்டு இருப்பார். யாருக்குப் போகுமோ, தெரியாது. சில பழையவை. சில புதியவை! சில பரிசாக வந்தவை! சில வாங்கியவை!
Like · Reply · 23h 3

**Ahilesh Rathinam**
My music books only. Sai RAM
Like · Reply · 2w 1

**Ilangovan Rangarajan**
கண் கண்ணாடி...
Like · Reply · 2w 2

**Dhinakaran Natarajan**
தித்திக்கும் புத்தகங்கள்,

வாசிக்க, வாசிக்க,இன்பம் பெறும் மனம்,

எல்லையில்லா ஆனந்தம் தரும் கதைகள்
Like · Reply · 2w 1

**Jebamani Mohanraj**
பல் துலக்கும் பிரஸ்
Like · Reply · 2w 1

**Vasumathi Balasubramanian**
மூக்குக் கண்ணாடி.😎
Like · Reply · 2w 1

**Karthik Lakshmi Narasimman**
கணிணி மற்றும் சமையலறை பொருட்கள்
Like · Reply · 2w 1

**Dhakshinamoorthy Venkatakrishnan**
என்னுடைய மனைவி.
1
Like · Reply · 22h

↳ Geetha Sambasivam replied · 2 Replies

**Kamatchi Mahalingam**
நடக்க உதவியாக இருக்கும் மூன்று சக்கர ஹெர்குலஸ் அன்புடன்
3
Like · Reply · 22h

**Kamatchi Mahalingam**
எல்லா சாமான்களும் வேண்டியதுதான் ஆனால் இது இல்லாவிட்டால் எதுவும் இல்லை அவ்வளவுதான்
3
Like · Reply · 22h

**Kamatchi Mahalingam**
யாருக்கு என் போன்றவர்களுக்கு
2
Like · Reply · 22h

**Saminatha Bharathi**
நானேதான்....!! எனக்குப் பிறகுதானே மற்றவை....??
1
Like · Reply · 22h

**Ramah Srinivasan**
என்னுடைய ஸோஸ்திர புத்தகங்கள். வேலை ஓய்விற்குப் பிறகு நிம்மதியாக வேண்டிய ஸ்லோகங்களை படிக்க முடிகின்றது.

1

Like · Reply · 21h

**Adhi Venkat**
அலைபேசி, அடுக்களை பாத்திரங்கள், duster, sponge wipes இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்..🙂

1

Like · Reply · 21h

**Raja Melaiyur**
படுக்கை

1

Like · Reply · 20h

**Seetha Raman S R**
Long Service Award watches "TITAN" for me and Silver Light for my spouse from Ashok Leyland.

2

Like · Reply · 15h · Edited

↳ Seetha Raman S R replied · 2 Replies

**Mahendran Addepally**
Philately stamps coins etc

1

Like · Reply · 15h

**Sampath Kumar**
உண்மையாக சொல்லப்போனால் என் மொபைல் போன்.
Like · Reply · 14h · 1

**Radhakrishnan Chandramouli**
En kannadi
Like · Reply · 13h · 1

**Babu Ekambaram**
Recliner
Like · Reply · 12h

**Palani Balaraman**
கொசு வலை&லேப்டாப்
Like · Reply · 12h

**Roobini Kodhandan**
Tv
Like · Reply · 11h

**Geetha Lakshmi Thiagarajan**
வாசிங் மெஷின்! வேற எந்த வேலை என்றாலும் தினமும் செய்வதில் சிரமம் இல்லை! வேலைக்கும் போயிட்டு தினமும் துவைப்பது கடினம்! வாஷிங் மிஷினை பார்க்கும் போதெல்லாம் வாஞ்சையுடன் தடவிக்கொடுப்பேன்



Subhasri Sriram
Panasonic Radio. !!! 😀
Like · Reply · 7h 1

Saptharishi Lasara
மூளை
Like · Reply · 2h 1

Gajaraj Shunmugam
My own house which i bought...! Still i remember the efforts that taken by me.
Like · Reply · 43m 1



துரை செல்வராஜு
உபயோகம் ஆகின்ற பொருட்கள் எல்லாமே..
Like · Reply · 2w 1

Vaidyanathan Jayaraman
In the present days - Mobile
Like · Reply · 2w 1

Thillai Nayagam
Today
MOBILE PHONE
(More than 12 hrs I am using)
Like · Reply · 2w 1

வல்லிசிம்ஹன்

**மிகப் பிடித்தது நான் தூங்கும் இடம்.** அங்கு கிடைத்த நிம்மதி. எங்கும் இல்லை.

Bhanumathy Venkateswaran :

**எப்போதும் புத்தகங்கள்,இப்போது மடிக்கணிணி**

**KILLERGEE Devakottai** :
எனது கணினி.

**அல்லிராணி அதிரா:) :**
**என் கைத்தொலைபேசியேதான்ன்ன்ன்ன்ன்ன்ன்ன்ன்ன்ன்ன்:)**

**திண்டுக்கல் தனபாலன் :**
**மெய்.**

## Q 04 : இதுவரை நீங்கள் இருந்த ஊர்களில் உங்களுக்கு மிகவும் பிடித்த ஊர் எது?

**Subhasri Sriram**
புதுக்கோட்டை. !!! 🙂
Like · Reply · 26m · 👍 1

**Karthik Lakshmi Narasimman**
சொந்த ஊரான சேலம்
Like · Reply · 23m · 👍 1

**Subramanian Narayanan**
மதுரை
Like · Reply · 19m · 👍 1

**Karthik Lakshmi Narasimman**
ஒரு வாரம்லாம் கணக்குல வரும்னா கொல்கத்தா
Like · Reply · 19m

**Kumar Chandramouli Sengalipuram**
Sengalipuram
Like · Reply · 14m · 👍 1

**Arun Jawarlal**
ஒசூர்
Like · Reply · 11m · 👍 1

**Devarajan Shanmugam**
Thirukkannapuram, nagai dist
Like · Reply · 4m · 👍 1

**Saminatha Bharathi**
தஞ்சாவூர். பள்ளி, கல்லூரிப் படிப்பு நடந்த, அரசியல் உள்பட பல விஷயங்களில் தெளிவு தந்த ஊர்.
Like · Reply · 22m

**Radhika VM**
Chennai
1
Like · Reply · 20m

**Srinivasasn Viswanathan**
திருவாரூர்.
நான் பிறந்து, வளர்ந்த ஊரும் அதுவே.
1
Like · Reply · 16m

**Sampath Kumar**
நான் படித்து வளர்ந்த கரூர்.
1
Like · Reply · 11m

**Mala Madhavan**
Devakottai.
1
Like · Reply · 10m

**Nagai Uppili Srinivasan**
Nagapattinam My Native
1
Like · Reply · 7m



Vijayakumar Kavlekar
மெலவீதி, தஞ்சாவூர்
1
Like · Reply · 3h

Saptharishi Lasara
கேதார்நாத்
1
Like · Reply · 2h

Adhi Venkat
நிச்சயமாக என் ஊர் தான். கோவை..🙂
1
Like · Reply · 2h

Adhi Venkat
பிடித்த வீடும் அந்த ஹவுசிங் யூனிட் குட்டி வீடு தான்..🙂
1
Like · Reply · 2h

Vassan
வந்தோரை வாழ வைக்கும் சென்னை அடுத்து கோவை
1
Like · Reply · 2h

Muralidharan Salem Rajagopalan
கோவை..
1
Like · Reply · 2h

Balaji Vasu
srirangam
1

**Vinoth Sethuraman**
கல்யாணபுரம்(தஞ்சை) திருவான்மியூர்
1
Like · Reply · 1h

**Sundararajan Sethunarayanan**
சிங்காரச் சென்னை தான்...... அதிலும் குறிப்பாக தென் சென்னை... வட சென்னை அல்ல.
1
Like · Reply · 1h

**Ahilesh Rathinam**
Achcharapakkam. Sai RAM
1
Like · Reply · 1h

**Vijayaraghavan Vijayaraghavan**
நாறாயணபுரம். சென்னை
1
Like · Reply · 1h

**Jebamani Mohanraj**
பல வித மாமரங்கள் நிறைந்திருந்த நாலுமாவடி! தூத்துக்குடி மாவட்டம் .என் தாய் மற்றும் மனைவியின் ஊர்!
1
Like · Reply · 1h

**Ranganathan Seetharaman**
kovai
1
Like · Reply · 1h

**சஹானா இணைய இதழ்**
Toronto, Canada
2
Like · Reply · 1d

**Kamatchi Mahalingam**
காட்மாண்டு நேபால்
2
Like · Reply · 1d

**Dhinakaran Natarajan**
இயற்கையெழில் கொஞ்சும் குற்றாலம் அருவியில் குளிக்கலாம்,வாங்க
1
Like · Reply · 1d

**Perumal Raman**
பெங்களூர்.
1
Like · Reply · 1d

**Bala Meenakshi Sundaram**
En native place-Tanjavur
1
Like · Reply · 23h

**Chowkidar Rajagopalan Ramesh**
BARIPADA, MAYURBHANJ ODISHA,
JAYPUR KORAPUT DIST ODISHA, NAYAGARH ODISHA,
THANJAVUR TAMILNADU,



**Lakshminarayanan K Sundararajan**
மும்பை...
👍 1
Like · Reply · 22h

**Srinivasan Attur**
ஹைதராபாத்
👍 2
Like · Reply · 22h

**Geetha Sambasivam**
Rajasthan, Ajmer, Gujarat, Jam Nagar, Baroda
👍 1
Like · Reply · 22h

**Shanthy Mariappan**
நாகர்கோவில்
👍 1
Like · Reply · 21h

**Ramanathan Manoharan**
Birth place a village in dharmapuri district
👍 1
Like · Reply · 21h

**Ramesh Durai**
Oory... is my elderado
👍 1
Like · Reply · 21h

**Malini Seshadri**
ஓசூர்
1
Like · Reply · 13h

**Bhanumathy Venkateswaran**
திருச்சி, கண்டமங்கலம்(எங்கள் ஊர்),மஸ்கட்
1
Like · Reply · 6h · Edited

**Ramah Srinivasan**
சென்னைதான்.
1
Like · Reply · 4h

**துரை செல்வராஜு**
தஞ்சாவூர் பிறந்த ஊர் என்றாலும் திருஐயாறு..
1
Like · Reply · 2h

**Revathi Narasimhan**
கோவை.
2
Like · Reply · 2w

**Ramachandran Subburaman**
Eindhoven Netherlands.
1985 year Bangalore.
1
Like · Reply · 2w

**Ilangovan Rangarajan**
பைக்காரா...ஊட்டிக்கு 20 கி.மீ தொலைவில்..
இயற்கை எழில் கொஞ்சும் ஊர்! இப்போதும் ரசிக்கலாம்!
1970 களில் பள்ளிப் பருவம் கேட்கவும் வேண்டுமோ? மறக்கவும் முடியுமோ?
1
Like · Reply · 2w

**Gopinath Krishnamurthy**
பார்ஸிலோனா (Barcelona) cosmopolitan, good infrastructure, wonderful weather, great food, pleasant people, good family values in the local culture.... வேற என்ன வேணும்.....



**Thillai Nayagam**
Saidapet 🙏
(70 years)
1
Like · Reply · 1w

**Seetha Raman S R**
தாய் மண்ணே வணக்கம் ! பாண்டிச்சேரி ! !
1
Like · Reply · 1w

**Gajaraj Shunmugam**
Chennai i like very much...! Any state people can survive here peacefully.
1
Like · Reply · 1w

**Mahendran Addepally**
Tiruvallur
1
Like · Reply · 1w

**KILLERGEE Devakottai** :
**தி கிரேட் தேவகோட்டை**

அல்லிராணி அதிரா:) :

**எப்பவும் நான் எங்கிருக்கிறேனோ அதுவே எனக்குச் சொர்க்கமாகத் தெரியும்.. இப்பவும் இப்போ நாம் இருக்கும் இந்த இடமே எனக்கு மிகவும் பிடித்த ஊர்:)).**

**திண்டுக்கல் தனபாலன் :**
**திண்டுக்கல்**

## Q 05 : நீங்க விரும்பிப் பார்க்கும் தொலைக்காட்சி சானல் எது?

**Jonathan Justus S**
History TV18
👍 1
Like · Reply · 1h

**Vinoth Sethuraman**
சமீப காலமாக பாலிமர் செய்தி, wion TV
👍 1
Like · Reply · 1h

**Chandramouli Mouli**
Polimer news
👍 1
Like · Reply · 1h

**Radhika VM**
Vijay tv
👍 1
Like · Reply · 1h

**Jebamani Mohanraj**
டிவி பார்ப்பதில்லை! குப்பை!
👍 2
Like · Reply · 48m

**Saminatha Bharathi**
பொதிகை டிவி.
👍 1
Like · Reply · 44m

**Adhi Venkat**
விஜய் தொலைக்காட்சி.
👍 1
Like · Reply · 42m







வல்லிசிம்ஹன் :

**மிகப் பிடித்த தொலைக்காட்சி சானல்**

**மூவீஸ் சானல்கள்.**

Bhanumathy Venkateswaran :

**05. அப்படி குறிப்பிட்டு சொல்லும்படி எந்த சேனலும் இல்லை. யூ ட்யூபில் சாய் வித் சித்ரா, சுகி சிவம், பர்வீன் சுல்தானா போன்றவர்களின் சொற்பொழிவுகள், குறும்படங்கள் போன்றவற்றை விரும்பி பார்ப்பேன். கச்சேரிகளும் கேட்பதுண்டு.**

**Mani Sekhar Raman**
Polimer News
Like · Reply · 6h · 1

**Dhinakaran Natarajan**
புதிய தலைமுறை
Like · Reply · 6h · 2

**Muralidharan Salem Rajagopalan**
Polimer TV.
Like · Reply · 6h · 2

**Srinivasan Attur**
பாலிமங நியூஸ் சேனல் மட்டும்
Like · Reply · 6h · 1

**Radhakrishnan Chandramouli**
Svbc
Like · Reply · 6h · 1

**Chowkidar Rajagopalan Ramesh**
Wion

**Santhanam Baskaran**
Polimer News
Republic News

And

Sports Channels.
Like · Reply · 5h · 1

**Kumar Kumar**
தமிழில் பாலிமர் செய்தி சேனல்...
Like · Reply · 4h · 1

**Harihara Subramanian**
Sankara TV
Like · Reply · 1h · 1




**KILLERGEE Devakottai** :
**சில தருணங்களில் மக்கள் தொலைக்காட்சி.**

**அல்லிராணி அதிரா**:) :
**செலக்ட் பண்ணிப் பார்ப்பதில்லை எதையும்... நேரம் கிடைக்கும்போது எது கண்ணில் படுகிறதோ, எது நன்றாக இருக்கிறதோ அதை அப்போது பார்ப்பது வழக்கம்.**

**திண்டுக்கல் தனபாலன் : !**

**கோமதி அரசு :**
**பொதிகை, மக்கள், z தமிழ், புதுயுகம் , சன் லைப் , சங்கரா பார்ப்பேன் மிகவும் பிடித்தது என்று சொல்ல மூடியாது, எனக்கு பிடித்த நிகழச்சிகள் எந்தசேனலில் வைத்தாலும் பார்ப்பேன்.**

## Q 06 : நீங்கள் சமீபத்தில் வாய்விட்டு மனதார சிரித்தது எப்போது?

**Saminatha Bharathi**
யோசித்து, யோசித்துப் பார்க்கிறேன்...
அப்படி ஒரு சம்பவம் நிகழவே இல்லை.
Like · Reply · 3h · Edited 1

**Ramanathan Manoharan**
When I saw vadivelu comedy recently
Like · Reply · 3h 1

**Ahilesh Rathinam**
After reading this message I really laughed very louder in the middle of the road where none was there. Sai RAM
Like · Reply · 3h 1

**Arun Jawarlal**
Probably one occasion daily. Latest was the antique of one of the juniors at home
Like · Reply · 3h · Edited 1

**Gajaraj Shunmugam**
I used to talk to my friend weekly twice, still we remain the jokes & laugh with open heartedly. Both of us spends time like this.
Like · Reply · 2h 1

**Adhi Venkat**
ஏதோ ஒரு விஷயத்திற்காக நேற்றுக் கூட...🙂
1

**அப்பாவி தங்கமணி**
மகள் செய்யும் சேட்டைகளுக்கு 🙂
👍 1
Like · Reply · 1h

**Seetha Raman S R**
நேற்று மதியம் என நினைக்கின்றேன்.
👍 1
Like · Reply · 1h

**Palani Balaraman**
பேரனின் விஷமங்களை நினைத்துப் பார்த்தாலே சிரிப்பு பொத்துக் கொண்டு வரும்.
👍 1
Like · Reply · 2m

**Bhanumathy Venkateswaran**
இன்றைய எங்கள் ப்ளாகில் மறதி பற்றிய கேள்விக்கு ஆசிரியர் ஒருவர் அளித்திருந்த பதிலை படித்த பிறகு.
👍 1
Like · Reply · 1d

**Dhinakaran Natarajan**
கற்பனையில் மிதக்கும் அரசியல் கட்சிகளின் நிலைப் பாட்டை பார்த்து,
👍 2
Like · Reply · 1d

**Jebamani Mohanraj**
ராகுலின் சீனா குறித்த கதறலை பார்க்கும் போதெல்லாம்!
👍😆 2
Like · Reply · 1d

**Geetha Sambasivam**
நம்ம கு.கு.வோட விஷமங்கள் தான்!
👍 1
Like · Reply · 1d

**Bala Subramanian**
இந்த போஸ்ட்டை பார்த்த பிறகு
👍 1
Like · Reply · 20h

**Vijayaraghavan Vijayaraghavan**
நான் சின்ன வயதில் செய்த குறும்புகளை என்னுடன் இல்லாத பேரன் செய்யும்பொழுது அதை வீடியோவில் பார்க்கும் பொழுது

**Thillai Nayagam**
எனது பேரன்களுடன் அதிக மகிழ்ச்சியுடன் சிரித்துக்கொண்டிருப்பேன்

Like · Reply · 2w 👍 1

**Kamatchi Mahalingam**
துஷ்யந்த் ஸ்ரீதரின் பிரவசனங்களில் இன்றையநிலைகளை ஒப்பிட்டு பேசும் ஒவ்வொரு ஸமயமும் சிரிப்புவரும்.

Like · Reply · 1w 👍 1

**Jebamani Mohanraj**
என் பேத்தி என்னை ஹேய் மோகா என்று கூப்பிட்ட போது! என் அம்மா வழி பாட்டி என்னை எலேய் மோகா என்றழைப்பார்! பிறந்த பயனை அடைந்த மகிழ்ச்சி!

Like · Reply · 1w 👍 1

**மின்நிலா 025 தீபாவளி சிறப்பிதழ்**

# பெண் பார்க்கச் சென்ற அனுபவங்கள் !

எங்கள் blog  புதன், 14 அக்டோபர், 2020 பதிவிலிருந்து ஒரு பகுதியும்,

facebook நண்பர்கள் சிலரின் அனுபவங்களும் :

**பானுமதி வெங்கடேஸ்வரன்:**

**நீங்கள் பெண் பார்க்கச் சென்ற அனுவங்களை பகிர முடியுமா? எத்தனை பெண்களை பார்த்தீர்கள்? அப்போது அந்தப் பெண் என்ன பாடல் பாடினார்? அல்லது நீங்கள் பாடினீர்களா?**

$ ஒரே ஒரு பெண் மட்டுமே. பாடினார். ஸ்ரீ ரகுகுல..
பின்னர் சுத்தானந்த பாரதியின் சொந்தக்காரர் என்று சொன்னதும், அவர் பாட்டு ஒன்று பாடேன் என்று என் பெற்றோர் கேட்டுக்கொண்டனர்.
சுத்தானந்த பாரதிக்கு இவ்வளவு தீர்க்க தரிசனமா என்று எல்லோரும் வியக்கும்படி ஒரு பாட்டு பாடினார் - - - " சுப்ரமணியனை மறவாதிரு மனமே " என்று !

என் பாடல் திறன் பற்றி நான் ஏதும் சொல்லப்போக, காரொனா போல இருக்கு..ஒரு டெஸ்ட் எடுத்துடுங்க என்ற உபதேசம் எல்லாப் பக்கங்களிலிருந்தும் !

# கேள்வி படித்த பின் நினைவு படுத்திச் சொல்கிறேன்.

மூன்று முறை பெண் பார்த்தல் நடந்தது.

1 பெண் அற்புதமாகப் பாடினார். பூர்வி கல்யாணி ராகத்தில் பாடல் நினைவில்லை. பொருந்தாத அம்சங்களால் அதோடு நின்று போனது.

2. பெண் பாடவராது என ஒப்புக் கொண்ட கேஸ். அப்பா இல்லாத பெண். பிள்ளையின் அப்பா, பெண்ணின் பெரியப்பா இடையே புரிதல் இல்லை.

3. பெண் நன்றாகப் பாடுவார் என்று திருமணத்துக்குப் பின் தெரிந்தது.

& நான் பார்க்கச் சென்ற (ஒரே) பெண், என்னுடைய அத்தையின் பேத்தி. ஆனால் அவளை அது வரை பார்த்ததில்லை. அந்தப் பெண்ணும் என்னைப் பார்த்ததில்லை. அவள் பிறந்தது, வளர்ந்தது எல்லாமே மதுரை, கோவை. இரண்டுமே நான் அதுவரை செல்லாத ஊர்கள். சொந்தம் என்பதால், அவர்கள் எல்லோரும் குரோம்பேட்டையில், அருகில் இருந்த என் அக்கா வீட்டிற்கு வந்திருந்தனர். சொஜ்ஜி

பஜ்ஜி எல்லாம் - அவர்கள் வீட்டு சார்பில் என் அக்கா செய்திருந்தார்! சென்றது முதல், பெண் வாயைத் திறந்து ஒன்றுமே பேசவில்லை. (ஹூம் - இப்போ எல்லாம் அப்படி இல்லையே ! சிவாஜி குரலில் படிக்கவும்) யாரோ #? 'பாட்டுப் பாடத் தெரியுமா' என்று கேட்டவுடன், அவள் "பாட்டெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம் கற்றுக்கொண்டு பாடுகிறேன்" என்றாள்! அந்த 'எம் ஆர் ராதா' குரலைக் கேட்டதுமே நாங்க எல்லோரும் கப் சிப் (அதாவது காபி 'கப்'பை 'சிப்' பண்ண ஆரம்பித்துவிட்டோம்!)
ஆனால் - இப்போ, என்னை விட நல்ல குரல் அவளுக்குத்தான்!

**நண்பர்களின் அனுபவங்கள் :**

**Sampath Kumar** :

நான் சென்னையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் என் அப்பா விடமிருந்து இன்லேண்ட் லெட்டர் மஞ்சள் குங்குமம் தடவி வந்தது. அப்பொழுது என் அப்பா கரூரில் ஆசிரியர். கடிதத்தைப் பிரித்தேன். அதில் அன்புள்ள சம்பத்திர்க்கு. வரும் 09.2.1990 அன்று உனக்கு நிச்சயதார்த்தம் நடக்க உள்ளது. உன்னை கண்டிப்பாக எதிர்பார்க்கிறேன். லீவு கிடைக்கவில்லை என்றால் கவலைப்படாதே. மற்றவை நேரில் பேசிக்கொள்ளலாம். பின் குறிப்பு. பெண்ணின் ஊர் எட்டுக்குடி. கல்யாணமாதேவிக்கு அருகில். என்று. அப்போது என் மன நிலையை நான் யாரிடம் தெரியப்படுத்துவது. பெற்ற மகனுக்கே மஞ்சள் குங்குமம் தடவி தபால். என்ன ஒரு மரியாதை. ( எல்லாம் ஒரு ஆறுதலுக்காக. வேறு என்ன சொல்வது.)

Adhi Venkat
என்னை முதன்முதலில் பெண் பார்க்க வந்ததும் அவரே, அவர் முதன்முதலில் பெண் பார்க்கச் சென்றதும் நானே...🙂 அமைந்து விட்டது..நானாவது அவர் புகைப்படத்தை ஒரு வாரம் முன்பு பார்த்தேன்...🙂 அவர் நேரே பெண் பார்த்த போது தான்...🙂 நிச்சயத்தை முடிவு செய்த பின்பு தான் பெண் பார்க்கும் படலமே...🙂 கழுதையோ, குதிரையோ முதலில் பார்க்கும் பெண்ணைத் தான் திருமணம் செய்து கொள்வேன் என்ற கொள்கையால் என் திருமணம் நிகழ்ந்தது...🙂

**அப்பாவி தங்கமணி**
என்னை பெண் பார்க்கவெல்லாம் வரலை, பொறந்ததுல இருந்தே பாத்துட்டு இருக்கற மொகத்தை புதுசா என்ன பாக்கறதுனு துபாய்ல உக்காந்துட்டே நிச்சயம் பண்ணிட்டார். ஆனால் முதல் ஜாதகம் இவரது தான். We all join in that one knot I guess 🙂

ஆஹா, பல வருஷம் முன்ன இந்த பெண் பார்த்தல் கதையை என்னோட Blogல தொடர்பதிவா ஆரம்பிச்சு வெச்சு, "பத்த வெச்சுட்டியே அப்பாவி தங்கம்"னு பலரும் செல்லமா திட்டின நினைவுகள் வந்துடுச்சு கௌதமன் சார். Feeling Nostalgic. எனக்கும் இவர் உறவு தான். சூப்பர் பிளாஷ்பேக். நிறைய பழைய நினைவுகளை கிளப்பி விட்டுடீங்க சார் 🙂

Palani Chamy

நல் வாழ்த்துகள்!

பெண் பார்க்க தனியாக போகவில்லை.

ஆனால் என் அம்மா வீட்டுக்கு எதிர் வீடு (எங்கள் தாத்தா பாட்டி க்கு ஒரே வாரிசு)

எதிர் வீடு என் அம்மா பங்காளி அண்ணன் வீடு.எனக்கு மாமா அவருடைய பேத்தி.மாமா அத்தை மற்றும் குடும்பத்தினரில் ஒரு அத்தாச்சி (அண்ணி) தெரியும் மற்றவர்கள் வெவ்வேறு ஊர்களில் இருந்தார்கள்.

நாங்கள் சொந்த ஊரான கமுதி யை விட்டு காரைக்குடி அருகே வசித்து வந்தோம்.

அதனால் பார்த்தது இல்லை.ஐடிஐ முடித்து சென்னை வந்து விட்டேன்.அதன்பின்னர் கமுதி போய்விட்டார்கள்

அவர்கள் பொங்கல் திருவிழா வுக்கு வந்திருந்தார் கள் நான் அந்த ஆண்டில் ஊருக்கு சென்று இருந்தேன்.அப்போது எனது வீட்டில் ஒன்றும் சொல்லவில்லை. பின்னர் கூறினார் கள் நான் தனியாக பெண் பார்க்கச்செல்லவில்லை .

எதிர் வீடு என்பதால் அதற்கு முன் என் வீட்டுக்கு எல்லோரும் வந்து செல்வார்கள் அப்போது பார்த்தது.

திருமண ஆண்டு 1985

27-10_1985.

வருகிற மணநாள் 27-10-2020

முப்பத்தைந்தாவது ஆண்டு

வாழ்த்துக்கள் நண்பர்களே!

# வாட்ஸ் அப் கலக்கல்கள் (compiled by kgg)

Facebook கேள்விகள் மற்றும் பதில்கள் பதிந்த அதே வாரத்தில், எங்கள் blog ஆசிரியர்கள் & வாசகர்கள் Whatsapp குழுவில் நம் நண்பர் அப்பாதுரை பகிர்ந்த சில படங்களும், அதை ஒட்டி வந்த மற்ற உறுப்பினர்களின் படைப்புகளும், இங்கே பகிர்கின்றேன்.

முதலில் அப்பாதுரை சார் அனுப்பிய படங்கள்.

அவர் எடுத்த படங்கள் எல்லாமே தொலைவிலிருந்து focus செய்து எடுக்கப்பட்ட துல்லியமான படங்கள்.

படங்கள் யாவும் அடுத்துள்ள சில பக்கங்களில் காணவும்.







அளவில் மிகவும் சிறியதான மலர்களை பெரிய அளவில் ..



















வெகு தூரத்தில் எட்டிப்பார்த்த அணில் !

# வாகனத்தின் பின் நோக்கிக் கண்ணாடியில் தெரிந்த சூரியன்.



இந்தப் படத்திற்கு எங்கள் வாட்ஸ் அப் குழுவில் வந்த சில முத்துக்கள் அடுத்த சில பக்கங்களில் ---

**Sriram B**

கவிதைக்குள் சிக்காத
சூரியனுக்கு
கண்ணாடியில் சிறை!
(கண்ணாடி - mirror)

சுடாத சூரியன்!

**Ranjani Narayanan**

கண்ணாடியில் முகம் பார்த்துச் சிவந்தது சூரியன்!

இது கவிதை என்பதில் வருமா தெரியவில்லை.
சும்மா.....

**காதர் கலிலூர் ரஹ்மான்**



நீ உன் வீடு செல்லுமுன்
நான் என் வீடு
சென்று அடைய
வெளிச்சம் காட்டாயோ?!
கத்திரவனே
மறையாதிறு!

**Bhanumathi Venkateswaran**

என் முகம் பார்க்க
ஏராள நீர் உண்டு
உன் வழியைப் பார்த்து
ஓட்டடா வண்டியை
சினந்தது சூரியன்
தவறேதும் உண்டோ?

**Revathi Narasimhan**

கதிரவனை உள் வாங்கியதால்
கர்ணனும் பிறப்பானோ.!

**மாலா மாதவன்**



அந்திச் சிவப்பிதுவோ ஆதவக் கண்ணாடி
முந்தி முகம்காட்ட மூழ்குதம்மா என்மனது
சொந்தம் இழந்ததுபோல் சோர்வுறக் கண்முன்னே
அந்தி மறையும் அழகு

**மாலா மாதவன்**

ஓடுமிந்த வண்டியிலே ஓடுதம்மா சூரியனும்
கூடும் வெளிச்சம் குவியலாய் - நாடுமுள்ளம்
பாடுமொரு பாட்டு பதிந்தோடும் வேகமுடன்
கூடும்பின் சேருமே கூடு

## மின்நிலா 025 தீபாவளி சிறப்பிதழ்
## படமும் கவிதையும் :: மாலா மாதவன்

மாலா மாதவன்



நானே ஒளியுடை நாடு விழிவழி
நானே வலிமையாம் ஓடு உடல்மொழி
நானே விளக்கிங்கு நாட வெளிச்சமே!
நானே சகலமும் நாடு!

5:28 PM

**இந்தப் பாடலுக்கு அவரே அளித்துள்ள விளக்கம் :**

சூரியன் சொல்வதாய் பாடல்:

நான் ஒளியை உடையவன் . என்னை உன் விழியால் பார்.

நான் வலிமையானவன். அதைப் பெற அதிகாலையில் ஓடு, உடலால் பயிற்சி செய்.

நானே விளக்காக இருக்கிறேன். என்னை நாட என்றும் வெளிச்சமே.

நானே சகலமுமாய் இருக்கிறேன். ஆகையால் என்னை நாடு.

## எங்கள் ஆசிரியர் KGY ராமன் எழுதிய ஒரு கவிதை :

K G Y Raman

ஓசை நயமில்லை ஒருகருத்தும் சொல்லவில்லை

ஆசை ஒன்றே அடிப்படையாய் - பூசையோ

புகழுரையோ பராமுகமோ விமரிசனந்தானோ

இகழுரைப்பாரானாலு ஞ்சரி.

5:56 PM



## Benzaiten :: நெல்லைத்தமிழன்


நெல்லைத்தமிழன்

This is the Japanese Goddess Benzaiten. She is the Goddess of knowledge in their native religion called Shintoism. But look carefully at what she is holding - any similarities to the Hindu Goddess Saraswati? Yes, experts now confirm that Benzaiten is in fact a modified form of Saraswati! 🙏🙏



**Benzaiten** (弁才天, 弁財天) (also known as Benten) is a Japanese Buddhist goddess who originated from the Hindu goddess Saraswati. Worship of **Benzaiten** arrived in Japan during the 6th through 8th centuries, mainly via the Chinese translations of the Sutra of Golden Light, which has a section devoted to her.

**Chinese:** (Traditional); 辯才天; (Simplified); 辩...

# தங்கம் படுத்திய பாடு :: சுபஸ்ரீ ஸ்ரீராம்




வாழ்க்கையில சில பேருக்கு சில விஷயம் அற்புதமாக நடக்கும். சில சமயம் அதிரடியா நடக்கும்.

இந்த நிகழ்வு 8 வருடத்திற்கு முன்பு துபாயில் நாங்கள் தங்கியிருந்த அப்பார்ட்மெண்டில் நடந்தது. அன்று 11ம் தேதி, டிசம்பர் மாசம், 2012 வருஷம். செவ்வாய்க்கிழமை.

என் கணவர் ஸ்ரீராம்க்கு ஓர் அனுபவம் ஏற்பட்டது. வழக்கமா அவர் லஞ்ச்சுக்கு சாப்பிட வருவார். அப்படித்தான் அன்றும் வந்தார். காரை பார்க் பண்ணிட்டு வரும்போது காலுல தங்க ஜிகினா பேப்பர் மாதிரி இருந்ததை மிதித்து விட்டார். அதைப் பார்க்கும்போதுதான் அது ஒரு ப்ரேஸ்லேட் என்று தெரிய வந்தது.

வீட்டுக்கு வந்தவுடனே, என் கிட்ட கொடுத்து ‘இது ரியலா, இல்லை இமிடேஷனா பார்’ என்றார். நான் அதை ஆராய்ந்து பார்த்து, ‘இது தங்கம் தான்’ என்று சொன்னேன். கிட்டதட்ட 3 அல்லது 3 1/2 பவுன் இருக்கும்னு சொன்னேன்.



உடனே ஸ்ரீராம், ‘இது யாருடையதுன்னு தெரியலை. அதனால செக்யூரிட்டியைப் பார்த்துக் கொடுத்துடலாம்’ என்றார்.

எங்கள் பில்டிங்கல உள்ள உமர் என்ற செக்யூரிட்டியைப் பார்த்து முழு விபரம் சொன்னோம். அவர் உடனே, “சார் நீங்க வச்சுக்கோங்க.. யாராவது தேடிகிட்டு வந்தாலோ அல்லது , எங்ககிட்ட கேட்டாலோ, அப்ப கொடுக்கலாம். அதுவரை நீங்க வெயிட் பண்ணுங்க”ன்னு சொன்னார்.

நான் இருந்தது பாஷ் பில்டிங்க். ஸ்விமிங்க் பூல், ஜிம் இன்னும் பல வசதிகள் இருக்கு. நான் ஸ்ரீராமிடம், “ நான் வேணா இத எடுத்துக்கிட்டு போய் எல்லார் வீட்டிலேயும் கேட்கவா?. பாவம் யாரோ தொலைச்சுட்டாங்க..அவங்க எவ்வளவு வேதனைப்படுவாங்க?” என்றேன். இந்திய ரூபாய்ல கிட்டதட்ட 75,000/- அதன் மதிப்பு.

உடனே ஸ்ரீராம், “வீடு வீடாகேட்க இது என்ன நம்ம ஊரா ? இங்க கதவைத் திறக்கிறதே பெரிய விஷயம். அதுவும் இங்க ரெண்டு ப்ளாக் இருக்கு. மொத்தம் 140 வீடு இருக்கு. இந்த பொருள் யார் தொலைச்சாங்களோ அவங்களுக்கு கரெக்ட்டா போய் சேரணும். பொறுமையா இரு” என்றார்.

சத்தியமா எனக்கு தங்கம் வந்ததிலிருந்து தூக்கம் போய்விட்டது. அதை பூஜை ரூம்ல வச்சிட்டு, கடவுள் கிட்ட, ‘ கடவுளே யாரு இதைத் தொலைச்சாங்களோ அவங்க தயவு செய்து சீக்கிரம் வந்து வாங்கிக்கணும்’னு வேண்டிக்கிட்டேன்.

டிசம்பர் மாதம் 21ம் தேதி ஒரு லேடி வந்தாங்க. உமர் செக்யூரிட்டியும் .வந்தார். அவங்க எங்கக்கிட்ட சொன்னாங்க, “என் அம்மா, அண்ணன் இந்தியாவிலிருந்து வந்திருக்காங்க. என் ப்ரதர் கொஞ்சம் மனநிலை சரியில்லாதவர். துபாய் வந்த அன்னிக்கே தொலைச்சுட்டாரு. என் அம்மா தான் செக்யூரிட்டிகிட்ட கேளுன்னு சொன்னாங்க. இன்னைக்குத்தான் செக்யூரிட்டியில் கேட்டேன்” என்றார். உடனே அவங்க பொருளை அவங்களிடம் திருப்பிக் கொடுத்துவிட்டோம்.

அப்போ ஏற்பட்ட மன நிம்மதி வாழ்க்கையில் என்றுமே மறக்கமுடியாதது.

நாம் நல்ல மனசோட வாழ்றது என்பது மிகப் பெரிய வரம் என்று மனசில நினைத்தேன்.

வாழ்க வளமுடன். 😊

# அயல்நாட்டுச் சிறுகதை - 'போரடிப்பவன்' ! எழுதியவர் : ஏகாந்தன்

அன்பு ஸ்ரீராம், கௌதமன் சார்,

அமெரிக்க பத்திரிக்கையாளர்/எழுத்தாளர் க்றிஸ் ரோஸின் சிறுகதை ஒன்றை மொழியாக்கம் செய்து, மின்னிலா சிறப்பிதழுக்காக அனுப்புகிறேன். தாமதமாகிவிட்டது. சிரமத்திற்கு மன்னிக்கவும்.

அன்புடன்,
ஏகாந்தன்.

## எழுத்தாளர் அறிமுகம்: க்றிஸ் ரோஸ்

க்றிஸ் ரோஸ் (Chris Rose) ஒரு அமெரிக்கப் பத்திரிக்கையாளர், பத்தி எழுத்தாளர், வர்ணனையாளர். எழுதியது எனப் பார்த்தால் பெரும்பாலும் அபுனைவு (Non-fiction) வகை எழுத்து. அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் ஜர்னலிசம் பட்டப்படிப்பு முடித்து. பன்முகம் காட்டும் இயல்பான திறமையுடன் அவர் முயற்சித்தபோது, அவர் மனதுக்கு மிகவும் நெருக்கமான நகரம், சமூகம் அவருக்கு ஒரு முறையான உத்தியோகத்தைத் தர மறுத்தது. மீடியா முதலாளிகள் அவரது படைப்புத்தன்மையை அவ்வப்போது சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார்களே தவிர. வேகவேகமாக ஒப்பந்தத்திலிருந்து/பணியிலிருந்து அவரைக் கழட்டியும்விட்டனர். அவரது இளமைநாட்களில் ஒரு 'flop' ஆக, தோல்வியடைந்த பத்திரிக்கையாளர், எழுத்தாளராகப் புறம் தள்ளப்பட்டவர் ரோஸ். பாப்புலர் டிவி ஷோக்களில் வந்திருந்தும், நியூ ஆர்லியன்ஸ்பற்றி அவரின் ரசமான பத்திகள் சில புகழ்பெற்ற லோகல் பத்திரிக்கைகளில் அடிக்கடி வெளிவந்திருந்தும், அதற்கென வாசகக்கூட்டம் உருவாகியிருந்தும்.. இந்த கதி.



அக்கம்பக்கத்தின் ஏளனப் பார்வைகள், சரியான வேலையின்மை, வறுமை என மனிதரைப் போட்டுத்தாக்க ஒருகட்டத்தில் போதைப்பொருளுக்கு அடிமையாகி உழன்றார் ரோஸ். மன அழுத்தமும் சேர்ந்து அமுக்கி, மூட்டைகட்டி, அவரை 'மறுவாழ்வு நிலையத்தில்' கொண்டுபோய் விட்டது. மாதக்கணக்கில் போராடியபின் ஒருவழியாக மறுவாழ்வு மையத்திலிருந்து மீண்டு வந்த அவரைப் பார்த்து அவர் நேசித்த நகரமும், சமூகமும் முகம்திருப்பிக்கொண்டன. ஊரில் மதிப்பில்லை. உதவுவோர் யாருமில்லை. அவ்வப்போது ஏனோதானோ என சின்னச் சின்ன வேலைகள். ரெஸ்ட்டாரண்ட்/பார் வெய்ட்டர் வேலையும் ஒருவருடத்திற்கும் மேலாகப் பார்த்தார். குடும்பத்தின் வயிற்றைக் கழுவுவதற்கே போதிய காசில்லை. சலிப்பும், வெறுப்புமாயிருந்த இளம் மனைவி விவாகரத்து செய்து வெளியேறினாள் - சரியான சம்பாத்தியம், வேலையில்லாத இவரிடம் அவர்களின் குழந்தைகளான ஒரு பெண், இரண்டு பையன்கள் என மூவரைக் கடாசிவிட்டு. அதே காலகட்டத்தில், யாரோ விட்டுச் சென்ற அனாதையாக அலைந்த ஒரு நாயும் இவர் முகம் பார்த்தது. சேர்ந்துகொண்டது. அதையும் வளர்க்க முற்பட்டார் ரோஸ்.

இக்கட்டான காலகட்டத்தில் மாளாத சொந்தப் பிரச்னைகளுக்கிடையே, தான் மிகவும் நேசித்த நியூ ஆர்லியன்ஸ் நகரையும், நகர்மாந்தர் வாழ்வுபற்றியும் வாஞ்சையுடன் எழுதிவந்தார். பிரசுரிப்போர்தான் யாருமில்லை. அப்போது ஆகஸ்டு 2005-ல் ஒரு நாள் அங்கே இடைபுகுந்து சீறியது கேட்ரினா (Katrina) எனும் கொடும்புயல். நியூ ஆர்லியன்ஸ் பகுதியைக் கடுமையாகத் தாக்கியது. ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணியாக, வரலாறுகாணா அழிவை விளைவித்தது. சோதனைமேல் சோதனையாக எதிர்கொண்ட ரோஸ், புயலின் கோரத்தாக்குதல், அழிவுகள், பாதிப்புகளென சிதைந்து சுக்குநூறான குடும்பங்கள், தனிமனிதர்களின் அவல வாழ்க்கையைக் கனிவோடு, கூர்மையாக அவதானித்தார். சிறு சிறு கதைகள்போல் வடித்து எழுதித் தொகுத்திருந்தார். எங்கெங்கோ சென்று, யார்யாரையோ கெஞ்சிப் போராடியதில் ஒருவாறாக அது பிரசுரம் கண்டது. '1 Dead in Attic' எனும் நூலாக, வெளிவந்து வாசகர் பரப்பில் மிதந்தது. சிலமாதங்களில் 'நியூயார்க் டைம்ஸ்' Best Seller பட்டியலிலும் வந்து நின்றது! '(ஒரு நிகழ்வின்) சிறப்புமிகு வர்ணனை' என்கிற வகைமையில் 2006 Pulitzer Prize-க்கான இறுதிப் பட்டியலிலும் க்றிஸ் ரோஸின் பெயர் தலைகாட்டியது. விளைவாக, அமெரிக்கர்கள், குறிப்பாக அவரது 'ஊர்மக்கள்' - நியூ ஆர்லியன்ஸ்காரர்கள் - க்றிஸ் ரோஸை திரும்பிப் பார்த்தார்கள். தங்களுக்குள் ரோஸை மறு அறிமுகம் செய்துகொண்டார்கள் அலட்சியப்படுத்தியவர்கள். அவரது எழுத்தை அனுபவித்து ஆச்சரியப்பட்டார்கள்.

‘லைட் ரீடிங்’, வகையைச் சார்ந்ததாகப் பொதுவாக அறியப்படும் க்றிஸ் ரோஸின் எழுத்தில், பத்திகள், கட்டுரைகள் தாண்டி ஆங்காங்கே சில சிறுகதைகள் அவ்வப்போது வந்திருக்கின்றன. அவற்றில் ஒன்று சிக்கியது. அதன் மொழியாக்கத்தைத் தந்திருக்கிறேன். - ஏகாந்தன்.

# போரடிப்பவன் !

*- க்றிஸ் ரோஸ்*

*பெரும்பாலானோரின் அபிப்ராயம் இதுதான்: தியர்ரி பாய்ல் (Thierry Boyle) ஒரு பயங்கர 'போர் (bore)' ஆசாமி. சகிக்கமுடியாது அவனை. ”நான் எவ்வளவு சுவாரஸ்யமானவன்.. என்னைப்போயா ‘போர்’ என்கிறார்கள்?’- தியர்ரியால் ஜீரணிக்க முடியவில்லை. இந்த ஜனங்கள் இருக்கிறதுகளே.. இருக்கிறதுகளே… அவனால் புரிந்துகொள்ளமுடியவில்லை.*

*அவனிடம் தபால்தலை சேகரிக்கும் பழக்கம் உண்டு. உண்மையில் தீவிரமாக அதில் இயங்குபவன் தியர்ரி. விதவிதமான, வண்ண வண்ண ஸ்டாம்ப்புகள். உலகின் கேட்டறியாத சிறுசிறு நாடுகளின் ஸ்டாம்ப்புகள்கூட அவனிடம் தஞ்சம் புகுந்திருந்தன. இதைவிட ஜாலியான பொழுதுபோக்கு ஒரு மனிதனுக்கு வேறு என்ன இருக்கமுடியும் என நினைத்தான் தியர்ரி. அவனிடம் இதை மிஞ்சி வேறு பொழுதுபோக்குக் காரியம் எதுவும் இல்லைதான். அதற்காக? அவன் போரடிப்பவனா? ம்ஹ்ம்… ஏன் இப்படி நினைக்கிறார்கள் இவர்கள்?*

*மேலும் மேலும் நினைத்துப் பார்த்தான். அவன் ஒன்றும் சும்மா இல்லை. ஒரு வேலையில் இருந்தான். பிரமாதமான வேலை. ஆனால் மற்றவர்கள் அதை ‘போரிங் ஜாப்’ என்றார்கள். 'என்ன.. போரிங்கா? அலுப்பு தரும் வேலையா? நான் ஒரு அக்கவுண்ட்டண்ட்! இதைவிட சுவாரஸ்யமாக ஒரு வேலை உண்டா!’ எனத் தோன்றியது தியர்ரிக்கு. ஒவ்வொரு நாளும் அவன் அலுவலகம் சென்று குஷியாக கம்ப்யூட்டரை ‘ஆன்’ செய்வான். திரையில் விரிந்து காட்டும் கணக்கு விபரங்கள்.. லெட்ஜர்கள்.. குதித்து ஓடும் எண்கள்.. ஆஹா.. என மணிக்கணக்கில் ஆழ்ந்திருப்பான். இதுவல்லவோ வேலை என நினைத்து மகிழ்ந்திருந்தான். ஆனால்.. ஆனால்.. இதையும் ‘அலுப்புத் தட்டும் வேலை’ என்கிறார்களே 'அவர்கள்’. புரியவில்லை, புரியத்தான்மாட்டேன் என்கிறது ஒன்றும் அவனுக்கு.*

*தியர்ரியின் மனதில் சந்தோஷம் போயேவிட்டது. யாரைப் பார்த்தாலும், என்னை ஒரு ‘போர்’ என்கிறானே.. எல்லோருமா இப்படிச் சொல்லவேண்டும்.. கவலைப்பட்டான். ஒரு 'சுவாரஸ்யமான மனிதன் இவன்’ என்று தன்னை*

*மற்றவர்கள் நினைக்கவேண்டுமென ஆசைப்பட்டான். தன் தபால்தலை சேகரிப்புப் பற்றி நண்பர்களிடம் ஆசைஆசையாக அவன் எடுத்துச்சொல்வான். அவர்களுக்கு அதில் ஆர்வம் இல்லாததை அப்போதெல்லாம் முகபாவத்தில் கவனித்தான். சிலரிடம், தான் பார்க்கும் வேலை விபரங்களைச் சொல்லிப்பார்த்தான். கேட்டவர்கள் முகம் சுழித்தார்கள். ”உனது ஸ்டாம்ப் கலெக்ஷனைவிட இது இன்னும் மோசம்” என்றும் கூடவே சொன்னார்கள். மேலும் சிலர், இவன் தன்னைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, பெரிதாக வாயைத் திறந்து கொட்டாவி விட்டார்கள். சோம்பல் முறித்துக்கொண்டார்கள்!*

*தன்னை ஒரு ஆர்வம்கிளப்பும் மனிதனாக எப்படிக் ’காட்டிக்கொள்வது’ ? சிந்தித்தான் தியர்ரி. அவனது ஸ்டாம்ப் கலெக்ஷன்தான் நினைவுக்கு வந்தது. தன்னுடைய ’கலெக்ஷன்’ தன்னை ’ஃபேமஸ்’ ஆக்கிவிடும் என நம்பினான். ஒருவேளை தன்னைப்போன்ற ஒரு மாபெரும் ’போஸ்டல் ஸ்டாம்ப் கலெக்டர்’ யாருமில்லாமல் இருக்கலாம். அல்லது தன்னிடம் விலை உயர்ந்த ஸ்டாம்ப் ஒன்று இருக்கலாமே. ஆம், இதுதான் சரி..*

*உள்ளூரின் ஒரு பிரபல பத்திரிக்கைக்கு அவசரக் கடிதம் எழுதினான். ”உலகின் மிகப்பெரிய ஸ்டாம்ப் கலெக்ஷன் செய்பவர்பற்றி உங்கள் பத்திரிக்கையில் எழுத விருப்பமா? வாருங்கள். நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள் !” என ஜோராக மடலெழுதிப் போட்டான். மனதில் கொஞ்சம் லேசானான்.*

*பதில் வந்தது. ”அது நீங்களல்ல. உண்மையில், உலகின் மிகப்பெரிய ’Philatelist’ - ஸ்டாம்ப் கலெக்டர் எனப்படுபவர் பிரிட்டிஷ் மகாராணிதான்” என்று இவன் தலையில் அழுந்தக் குட்டியது அந்தப் பத்திரிக்கை. தியர்ரிக்கு வருத்தமாயிருந்தது. ஆனால் விடுவதாயில்லை. ”உலகில் விலைமதிப்பு மிக்க ஸ்டாம்ப் என்னிடம் இருக்கிறது. வந்து பாருங்கள். உங்கள் பத்திரிக்கையில் போடுங்கள், எழுதுங்கள்” என்றான் விடாமல், இன்னொரு கடிதத்தில்.*

*பத்திரிக்கையும் விடவில்லை. பாய்ந்து வந்தது பதில். ”உலகின் மிக அதிக விலையுள்ள ஸ்டாம்ப்பின் விலை 22 லட்சம் டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. அது உங்களிடம்தான் இருக்கிறது என உறுதியாகச் சொல்லமுடியுமா?” என்று கேட்டது. அவனுக்கு நம்பிக்கையில்லை. அவ்வளவு விலைமதிப்பு மிக்க ஸ்டாம்ப் தன்னிடம் இல்லை. ஆனால் இருப்பது, விலையுயர்ந்த ஒரு கலெக்ஷன்தான் என திவ்யமாக நம்பினான் தியர்ரி. பத்திரிக்கை அலுவலகத்துக்கு ஃபோன் போட்டு இதுபற்றி அவர்களது கவனத்தைத் திருப்ப மீண்டும் முயன்றான்.*

*"உங்களிடம் இருப்பது எல்லாம், குறைந்த பட்சம் 10 லட்சம் டாலர் மதிப்புள்ளது என்றாவது சொல்ல முடியுமா?" - அந்தப் பக்கத்திலிருந்து எரிச்சலாக எழுந்தது கேள்வி.*
*"ம்.. இல்லை. ஆனால் என்னிடம் .." என்று இவன் இழுத்தான்.*
*"ஃபோனை வையுங்கள்!' சீறியது அந்தப்பக்கக் குரல்!*

*நிம்மதி இழந்தான். தன்னைப் புகழ்பெற்றவனாக எதுதான் ஆக்கும் ? தியர்ரி சிந்திக்கலானான். ஆம், அவனுடைய வேலைதான் அது. தன் நண்பனோடு அன்று பேசுகையில் 'நான் தான் உலகத்திலேயே மிகச்சிறந்த அக்கவுண்டண்ட்!" என்றான்.*

*"உனக்கெப்படி அது தெரியும்?" கேட்டான் நண்பன்.*

*"எப்படீன்னா.. எனக்கு ஒரு நல்லவேலை இருக்கிறது. அக்கவுண்ட்ஸில் ஸ்ப்ரெட் ஷீட், நிதி, வரி, சலுகை என எத்தனையோ சுவாரஸ்யமான..." என அடுக்கிக்கொண்டே நண்பனைப் பார்க்கையில், அவன் தூக்கம் வருவதுபோல் தள்ளாடினான். ஒருவேளை, நான் சிறந்த அக்கவுண்டண்ட் இல்லையோ என இவன் தன்னையே சந்தேகித்தான்.*

*அப்போது நண்பன் சொன்னான்: "இதோ பார் தியர்ரி! உன்னிடம் உலகத்தின் மிகச்சிறந்த ஸ்டாம்ப் கலெக்ஷன் இல்லாதிருக்கலாம். நீ உலகின் சிறந்த, அல்லது பாராட்டத்தக்க அக்கவுண்டண்ட்டாகவும் இல்லாதிருக்கலாம். ஆனால்.. ஒன்று எனக்குத் தெளிவாகிறது. இந்த உலகத்தின் 'மகா மகா போர் (bore)' நீதான்!"*

*ஆஹா.. இதுதான் சரி. உலகின் 'மகா போர்' நான்தான். என்னை மிஞ்ச ஆளில்லை! தியர்ரி முடிவுக்கே வந்துவிட்டான். உடனே அந்தப் பத்திரிக்கை நினைவுக்கு வந்தது. போட்டான் ஃபோனை. சம்பந்தப்பட்ட ஆசாமியைப் பிடித்தான்.*

*"ஹலோ! ஒரு சுவாரஸ்யமான நபரை நேர்காணல் செய்ய விருப்பமுண்டா?"*

*"யாரது?"*
*"உலகத்தின் 'மகா போர் மனுஷன்' !"*

*"உலகின் 'மகா போர்'-ஆ? இது ஜாலியாக இருக்கும்போலிருக்கிறதே!"*

*அந்தப் பிரபல ஜனரஞ்சகப் பத்திரிக்கையின் அடுத்த வார இதழ் ஒன்றில் தியர்ரி பாய்ல்-பற்றி ஒரு பெரிய கட்டுரை: "The most boring man in the world !" அத்தோடு,*

*தியர்ரி 'அக்கவுண்டண்ட் வேலை' பார்க்கும் 'ஆஃபீஸ்' படம், அவனுடைய ஸ்டாம்ப் கலெக்‌ஷனைக் காட்டும் படங்கள்.. இன்னொரு பக்கத்தில் அவனது நெருங்கிய நண்பர்களின் வாக்குமூலங்கள்: "ஐயோ, அவனா!", "அவன் பேச ஆரம்பித்தாலே தூக்கம் சொக்கிக்கொண்டு வரும்!", "தூரத்தில கண்டாலே ஓடிடுவேன்..!" இப்படியெல்லாம் தியர்ரியைப்பற்றிய கிண்டல், கேலிகள்..*

*பி.பி.சி., சி.என்.என் -போன்ற நியூஸ் சேனல்களும் அவனைப்பற்றிய 'செய்தி'யைப் போட்டன. 'Most boring man!', 'That's so interesting!' என்று சிரித்தன, கிச்சுக்கிச்சு மூட்டின. தியர்ரி பாய்ல், ஜனரஞ்சகமாக, அதிகாரபூர்வமாக 'உலகின் மகா போர்' ஆகிவிட்டான். 'கின்னஸ்' (Guinness) அலுவலகத்தையும் இந்த விஷயத்தில் 'உலக ரிகார்ட்'பற்றி அணுகினான். தன் பெயரைச் சேர்க்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்தான். "ஒருவருடைய 'போர் அடிக்கும்' தன்மையை, திறனை, தரத்தை சரியாக அளவிடுவது கடினம். அதனால் உங்கள் பெயரை 'கின்னஸ் உலக சாதனைகளில்' சேர்ப்பதற்கில்லை" என்றார்கள் அவர்கள். அதனாலென்ன? அவன்தான் 'புகழ்' பெற்றுவிட்டானே !*

**





# குழந்தைகள் தின சிறப்புப் பக்கங்கள்

நவம்பர் 14 குழந்தைகள் தினம் என்பதால் அவர்களுக்காக சில பக்கங்கள் ..
நெல்லைத்தமிழன் அவர்களின் மகளரசி வரைந்த படம் :



**இந்தப் படம், பதிவர் LK அவர்களின் மகளரசி செல்வி திவ்யா வரைந்த படம்:**



# சுட்டிக் குழந்தைகள் !

## G M பாலசுப்ரமணியம்

1966ம் வருடம் நாங்கள் திருச்சி பொன் மலைப்பட்டியில் இருந்தோம். என் மூத்தமகன் கைக்குழந்தை துரு துருவென்று இருப்பான் நான் வேலைக்கு போய் விட்டால், மனைவி தனியே மேனேஜ் செய்ய வேண்டும்! கைக்குழந்தை கீழே விட்டால் அங்கும் இங்கும் நகர்ந்து விடுவான் அவனது கால்களை கட்டிப் போட்டு வேலை செய்வாள், என் மனைவி.





படத்தில் காணும் ப்லே பென் அப்போதெல்லாம் தெரியாது இப்போதுதான் எத்தனை சௌகரியங்கள்!! என் மச்சினனுக்கு இரட்டை க்ராண்ட் சில்ட்ரென். ஒரு இடத்தில் இருக்காது என் மச்சினன் வீட்டு மாடிப்படிகளில் ஏறுவதில் அத்தனை குஷி! சில படங்கள் இத்துடன் குழந்தைகளை கொட்டிலில் அடைத்து விடலாம். ஆனல் மனம் வருமா! பின் எதற்கு தாத்தா பாட்டி எல்லாம்?

சம்பந்தப்பட்ட காணொளிகளைக் காண கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு சுட்டிகளின் மீது சொடுக்கி youtube தளத்தில் காணவும்.

VIDEO LINK 1

VIDEO LINK 2

# மின்நிலா 025 தீபாவளி சிறப்பிதழ்

என் நண்பருக்காக - இலவச விளம்பரம் : KGG

GST. No.33ANWPS0718A2Z1
CELL :99418 66766 & 72993 66766

Phone : 044-42073030

## FIREWORKS SALES DEPOT - CHENNAI

# 197, GST, ROAD, RICH 'N' CREAMY BUILDING,
CHROMEPET, CHENNAI-600 044

COCK BRAND TRADEMARK

*STOCKIST OF BEST "COCK BRAND" FANCY FIREWORKS & CRACKERS*

Mfd.By : SRI KALISWARI FIREWORKS PRIVATE LIMITED,
SIVAKASI - 626 123

### PRICE LIST CUM ESTIMATE LIST-2020

| Item No. | Particulars | Requirement | Minimum Unit | Rate Rs. Ps. |
|---|---|---|---|---|
| | **SPARKLERS** | | | |
| 2 | 7 cm ELECTRIC (Saadha) | | 5 BX | 74-00 |
| 3 | 10 cm ELECTRIC (Saadha) | | 5 BX | 89-00 |
| 4 | 12 cm ELECTRIC (Saadha) | | 5 BX | 129-00 |
| 5 | 15 cm ELECTRIC (Saadha) | | 2 BX | 93-00 |
| 6 | 30 cm ELECTRIC (Saadha) | | 2 BX | 94-00 |
| 8 | 7 cm COLOURED | | 5 BX | 77-00 |
| 9 | 10 cm COLOURED | | 5 BX | 94-00 |
| 10 | 12 cm COLOURED | | 5 BX | 135-00 |
| 11 | 15 cm COLOURED | | 2 BX | 97-00 |
| 12 | 30 cm COLOURED | | 2 BX | 101-00 |
| 1 | 7 cm GREEN COLOURED | | 5 BX | 77-00 |
| 13 | 10 cm GREEN COLOURED | | 5 BX | 101-00 |
| 15 | 15 cm GREEN COLOURED | | 2 BX | 94-00 |
| 203 | 30 cm GREEN COLOURED | | 2 BX | 110-00 |
| 7 | 7 cm RED COLOURED | | 5 BX | 86-00 |
| 14 | 10 cm RED COLOURED | | 5 BX | 109-00 |
| 16 | 15 cm RED COLOURED | | 2 BX | 96-00 |
| 204 | 30 cm RED COLOURED | | 2 BX | 114-00 |
| 213 | 10 cm 5 in 1 (ASSORTED) | | 5 BX | 107-00 |
| 214 | 15 cm 5 in 1 (ASSORTED) | | 2 BX | 98-00 |
| | **CHAKKARS** | | | |
| 22 | 25 cm GROUND | | 1 BX | 103-00 |
| 23 | 45 cm GROUND | | 1 BX | 98-00 |
| 24 | 70 cm GROUND | | 1 BX | 175-00 |
| 251 | WHISTLING WHEELS | | 1 BX | 114-00 |
| 48 | NATTIYA DHARA | | 1 BX | 135-00 |
| 49 | FLORA FOUNTAIN | | 1 BX | 170-00 |
| | **ATOM BOMB** | | | |
| 31 | SQUARE FOILED | | 1 BX | 50-00 |
| 32 | SQUARE GREEN | | 1 BX | 48-00 |
| 33 | HYDRO FOILED | | 1 BX | 66-00 |
| 34 | HYDRO GREEN | | 1 BX | 60-00 |
| 37 | MAGIC FOUNTAIN | | 1 BX | 140-00 |
| 38 | BULLET | | 1 BX | 40-00 |
| 39 | MINI BULLET | | 1 BX | 28-00 |
| | **FLOWER POTS** | | | |
| 51 | BIG SIZE | | 1 BX | 96-00 |
| 52 | SPECIAL SIZE | | 1 BX | 160-00 |
| 53 | DELUXE SIZE | | 1 BX | 217-00 |
| 54 | SUPER SIZE | | 1 BX | 245-00 |
| 55 | TRI COLOUR | | 1 BX | 238-00 |
| 351 | GIANT FLOWER POTS GREEN | | 1 BX | 155-00 |
| 59 | GOLD FLOWER PUSH | | 1 BX | 181-00 |
| 151 | RANG BARAAT | | 1 BX | 307-00 |
| 56 | BIG GREEN | | 1 BX | 100-00 |
| 58 | BIG RED | | 1 BX | 107-00 |
| 57 | DELUXE -GREEN | | 1 BX | 217-00 |
| 61 | SIREN | | 1 BX | 228-00 |
| 69 | MINI SIREN | | 1 BX | 150-00 |
| 77 | GEMS | | 1 BX | 47-00 |

| Item No. | Particulars | Requirement | Minimum Unit | Rate Rs. Ps. |
|---|---|---|---|---|
| | **TORCHES** | | | |
| 62 | MAGIC PENCIL | | 1 BX | 68-00 |
| 63 | SILVER RAIN TORCHES | | 1 BX | 73-00 |
| 64 | OLYMPIC TORCHES | | 1 BX | 123-00 |
| 66 | RED FLARE | | 1 BX | 135-00 |
| 67 | GREEN COLOUR SHOWERS | | 1 BX | 100-00 |
| 424 | SIREN TORCH | | 1 BX | 94-00 |
| 439 | CONFETTI CELEBRATION | | 1 BX | 257-00 |
| 440 | MAGIC PIPE | | 1 BX | 224-00 |
| 447 | SUPER SIX | | 1 BX | 768-00 |
| 71 | JIL JIL (TWINKLING) | | 1 Pkt | 28-00 |
| 72 | GREEN COLOUR (TWINKLING) | | 1 Pkt | 41-00 |
| 76 | RED COLOUR (TWINKLING) | | 1 Pkt | 52-00 |
| 73 | 45 cm TWINKLING STAR | | 1 BX | 28-00 |
| 74 | 60 cm TWINKLING STAR | | 1 BX | 40-00 |
| | **ROCKETS** | | | |
| 81 | ROCKET | | 1 BX | 96-00 |
| 82 | LUNIK EXPRESS | | 1 BX | 160-00 |
| 83 | WHISTLING ROCKET | | 1 BX | 178-00 |
| 163 | SKY WHISTLE | | 1 BX | 135-00 |
| 164 | SKY WHISTLE MINI | | 1 BX | 94-00 |
| 100 | GOLDEN WILLOW ROCKET | | 1 BX | 395-00 |
| 148 | SUPER STAR ROCKET | | 1 BX | 408-00 |
| | **AERIAL DISPLAY ITEMS** | | | |
| 85 | SKY SHOT | | 1 BX | 74-00 |
| 93 | TRI COLOUR ANGELS | | 1 BX | 382-00 |
| 94 | GOLD 'N' ROLL | | 1 BX | 310-00 |
| 95 | TRI COLOUR AKASH BARSAT | | 1 BX | 258-00 |
| 887 | 12 STAR | | 1 BX | 184-00 |
| 87 | 15 STAR | | 1 BX | 197-00 |
| 177 | 12 AERIAL CRACKLING STAR | | 1 BX | 237-00 |
| 405 | RED DIADEM - 30 | | 1 BX | 464-00 |
| 406 | ZINNIA - 20 | | 1 BX | 481-00 |
| 110 | BOOMER 37 | | 1 BX | 615-00 |
| 162 | SKY BUSTER 130 | | 1 BX | 2000-00 |
| 378 | JOY 30 | | 1 BX | 565-00 |
| 478 | JOY 60 | | 1 BX | 1025-00 |
| 178 | JOY 240 | | 1 BX | 3650-00 |
| 507 | ENJOY 180 | | 1 BX | 2915-00 |
| 429 | FANTASTIC 30 | | 1 BX | 10000-00 |
| 89 | SIGNAL ROCKET | | 1 Pkt | 83-00 |
| 90 | AUTOMATIC ROCKET | | 1 Pkt | 83-00 |
| 91 | AERIAL OUT | | 1 Pkt | 80-00 |
| 437 | PENTA SKY FLASH | | 1 BX | 130-00 |
| 537 | TOP 10 - SKY FLASH | | 1 BX | 290-00 |
| 101 | PARACHUTE NIGHTOUT | | 1 BX | 350-00 |
| 102 | PARACHUTE NIGHTOUT-MINI | | 1 BX | 245-00 |
| 280 | GOLDEN EMERALD | | 1 BX | 273-00 |
| 380 | GOLDEN STRAWBERRY | | 1 BX | 280-00 |
| 480 | GOLDEN CINDERELLA | | 1 BX | 273-00 |
| 103 | MERRY GO ROUND | | 1 BX | 217-00 |
| 104 | MULTIPLE AERIAL STAR | | 1 BX | 415-00 |
| 180 | GOLDEN CLASSIC | | 1 BX | 348-00 |
| 411 | GOLDEN CORE | | 1 BX | 355-00 |

# மின்நிலா 025 தீபாவளி சிறப்பிதழ்

- 2

| Item No. | Particulars | Requirement | Minimum Unit | Rate Rs. Ps. |
|---|---|---|---|---|
| 412 | JASMINE CORE | | [illegible] 1 BX | 355-00 |
| 461 | GREEN CASCO | | [illegible] 1 BX | 380-00 |
| 462 | RED CASCO | | [illegible] 1 BX | 386-00 |
| 464 | CORONET | | [illegible] 1 BX | 470-00 |
| 465 | PANSY | | [illegible] 1 BX | 348-00 |
| 108 | AERIAL ECHO | | [illegible] 1 BX | 176-00 |
| 161 | WILLOW GALAXY | | [illegible] 1 BX | 179-00 |
| 514 | RUBY EMERALD MINI | | [illegible] 1 BX | 176-00 |
| 515 | CRIMSON GRAND MINI | | [illegible] 1 BX | 179-00 |
| 516 | PEONY BUDS MINI | | [illegible] 1 BX | 164-00 |
| 517 | CHERRY CLUMP MINI | | [illegible] 1 BX | 170-00 |
| 518 | NEMOPHILA MINI | | [illegible] 1 BX | 175-00 |
| 541 | SILVER DEWS MINI | | [illegible] 1 BX | 172-00 |
| 105 | STAR WARS | | [illegible] 1 BX | 243-00 |
| 156 | RANGEELA | | [illegible] 1 BX | 266-00 |
| 150 | GOLDEN WILLOW | | [illegible] 1 BX | 179-00 |
| 184 | GOLDEN BLINKS | | [illegible] 1 BX | 182-00 |
| 153 | AERIAL GOLD FLASH | | [illegible] 1 BX | 307-00 |
| 414 | RUBY EMERALD | | [illegible] 1 BX | 332-00 |
| 416 | PEONY BUDS | | [illegible] 1 BX | 320-00 |
| 417 | CHERRY CLUMP | | [illegible] 1 BX | 320-00 |
| 418 | NEMOPHILA | | [illegible] 1 BX | 332-00 |
| 421 | GOLD CLUSTERS | | [illegible] 1 BX | 315-00 |
| 441 | SILVER DEWS | | [illegible] 1 BX | 334-00 |

## CRACKERS

| | | | | |
|---|---|---|---|---|
| 111 | LOOSE CRACKERS (100 Pcs) | | 1 Pkts | 57-00 |
| 112 | 28/1000 NAGIN CHORSA | | 10 Pkts | 185-00 |
| 114 | 28/500 GIANT CHORSA | | 5 Pkt | 145-00 |
| 115 | 50/250 GIANT CHORSA | | 2 Pkt | 113-00 |
| 123 | 24 WALA DELUXE | | 1 Pkt | 52-00 |
| 223 | 48 WALA DELUXE | | 1 Pkt | 104-00 |
| 224 | 100 WALA DELUXE | | 1 Pkt | 214-00 |
| 118 | 5 x1000 DOUBLE HORSE | | 10 Pkt | 118-00 |
| 119 | 5 x500 PARROT | | 10 Pkt | 182-00 |
| 120 | 5 x250 COCK MOTTA | | 5 Pkt | 124-00 |
| 131 | 100 WALA | | 2 Pkt | 142-00 |

## ASSORTMENT

| | | | | |
|---|---|---|---|---|
| 140 | GIFT BOX MINI | | 1 BX | 360-00 |
| 141 | GIFT BOX | | 1 BX | 645-00 |
| 142 | PRESENTATION - KRISHNA | | 1 BX | 1235-00 |
| 158 | DEEP VARSHA | | 1 BX | 3050-00 |
| 159 | SUBH VARSHA | | 1 BX | 1835-00 |

## DISPLAY SPECIAL

| | | | | |
|---|---|---|---|---|
| 840 | 2021 | | 1 Piece | 530-00 |
| 187 | SUN RISE | | 1 Piece | 205-00 |
| 188 | FALLS | | 1 Piece | 460-00 |

## CAP

| | | | | |
|---|---|---|---|---|
| 803 | RING CAP | | 5 Pkts | 32-00 |

## PAPER CAP

| | | | | |
|---|---|---|---|---|
| 801 | COCK BRAND DOT CAP | | 10 Pkt | 65-00 |
| 802 | COCK BRAND ROLL CAP | | 10 Pkt | 65-00 |
| | | | | |
| | | | | |

## எங்கள் ஆசிரியர்கள் எழுதிய மின்னூல்கள்




**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08BYVY5C3
US : https://www.amazon.com/dp/B08BYVY5C3
UK : https://www.amazon.co.uk/dp/B08BYVY5C3




**LINK : INDIA :** https://www.amazon.in/dp/B08C2ZGBYJ
US : https://www.amazon.com/dp/B08C2ZGBYJ
UK : https://www.amazon.co.uk/dp/B08C2ZGBYJ

## மின்நிலா 025 தீபாவளி சிறப்பிதழ்




**LINK :**

**INDIA :** https://www.amazon.in/dp/B08CXBPPYN

**US** : https://www.amazon.com/dp/B08CXBPPYN

**UK** :https://www.amazon.co.uk/dp/B08CXBPPYN

## கடப்பா - பானுமதி வெங்கடேஸ்வரன் ரெஸிப்பி

ஜாக்கிரதையாக பெயரை படியுங்கள். கட்டப்பா இல்லை, கடப்பா! நான் கூட பெயரை கேள்விப்பட்டு ஏதோ ஆந்திரா சமாசாரம் என்று நினைத்தேன். ஆனால் கும்பகோணம் வெங்கடா லாட்ஜ் ஸ்பெஷலாமே? எனிவே செய்முறையை தெரிந்து கொள்வோமா?

தேவையான பொருள்கள்:

உருளைக் கிழங்கு (மீடியம் சைஸ்) - 3
வெங்காயம் பெரிதாக இருந்தால் - 1
மீடியம் சைஸ் என்றால் - 2
பூண்டு - 4 அல்லது 5 பல்
தக்காளி(optional) - 1
பயத்தம் பருப்பு - 1 குழிக்கரண்டி



அரைக்க:

பொட்டுக் கடலை - 3 டேபிள் ஸ்பூன்
கசகசா - 1 டேபிள் ஸ்பூன்
பட்டை - ஒரு சிறு துண்டு
தேங்காய் துருவல் - 3 டேபிள் ஸ்பூன்
பச்சை மிளகாய் - 4
சோம்பு - 2 டீ ஸ்பூன்



தாளிக்க :

எண்ணெய் - 2 டீ ஸ்பூன்
கடுகு - 1 டீ ஸ்பூன்
பிரிஞ்சி இலை - 2
உப்பு - 2 டீ ஸ்பூன்

செய்முறை:

முதலில் பயத்தம் பருப்பு, உருளை கிழங்கு இரண்டையும் வேக வைத்து, உருளைக் கிழங்கு ஆறியதும் உதிர்த்துக் கொள்ளவும்.

அரைக்க வேண்டியவைகளில் கசகசா,பட்டை, சோம்பு இவைகளை ஒரு சிறிய கடாயில் லேசாக வறுத்துக் கொண்டு அதோடு தேங்காய், பொட்டுக்கடலை இவைகளையும் சேர்த்து மிக்சியில் நன்றாக அரைத்து வைத்துக் கொள்ளவும்.



ஒரு கடாயில் சிறிதளவு எண்ணெய் ஊற்றி, அதில் கொஞ்சம் கடுகு, கொஞ்சம் சோம்பு, போட்டு வெடித்ததும், பிரிஞ்சி இல்லை மற்றும் வெங்காயத்தை வதக்கிக் கொள்ளவும். தக்காளி சேர்ப்பதாக இருந்தால் இப்போதே சேர்த்து, அதோடு பூண்டையும் சேர்த்து விடலாம். பின்னர் வேக வைத்துக் கொண்ட உருளைக் கிழங்கு, பயத்தம் பருப்பு போன்றவைகளை சேர்த்து கொஞ்சமாக தண்ணீர் சேர்த்து கிளறவும்.



பிறகு அரைத்த விழுதை அதோடு சேர்த்து உப்பும் போட்டு இன்னும் கொஞ்சம் தண்ணீர் சேர்த்து, இரண்டு நிமிடம் முதல் ஐந்து நிமிடம் வரை கொதிக்க வைத்து இறக்கி விடலாம். மேலே கொத்துமல்லி தழை தூவி அலங்கரிக்கலாம்.



இது தோசை, இட்லி, பூரி போன்றவற்றிற்கு நல்ல ஜோடி. ஆனால் ஏன் கடப்பா என்று பெயர் வைத்தார்கள் என்றுதான் தெரியவில்லை.



# கேள்வி பதில்கள்

**கீதா சாம்பசிவம் :**

**அட? நான் கேள்விகள் கேட்டிருந்தேனா?**

& அப்போ அது நீங்க கேட்கவில்லையா! இந்த கேள்விக்கும் அப்புறம் அதே போல கமெண்ட் செய்வீர்களோ?

**மின் நிலாவில் வர மாதிரி என்ன கேள்வி கேட்கலாம்? இதையே ஒரு கேள்வியா வைச்சுக்கலாமா?**

# வைச்சுக்கலாம். (இதையே பதிலாகவும் வெச்சுக்கலாம்.)

& ஹி ஹி / இஃகி, இஃகி, இஃகி !

**ஒருத்தர் திரும்பத் திரும்பத்தொல்லை கொடுத்துக் கொண்டே இருந்தால் அவங்களை மன்னிக்க முடியுமா?**

# அந்த மாதிரி நபர்களைத் தான் மன்னிக்க வேண்டி வரும். ஒன் டைம் நோ அஃபன்ஸ்.

& முதல் முறை, கவனித்திருக்கமாட்டோம் அல்லது 'என்னவோ - தெரியாமல் செய்துவிட்டார் போலிருக்கு ' என்று நினைப்போம். அடுத்த முறை - ' என்னடா மனிதர் இவர்? தெரிந்து செய்கிறாரா அல்லது தெரியாமல் செய்கிறாரா என்று சிந்திப்போம். மூன்றாவது முறை - 'இதென்ன ஒரே தொந்தரவா இருக்கு இந்த ஆளுடன்! ' என்று நினைப்போம். அதற்குப் பிறகுதான் தொல்லை என்று நினைக்க ஆரம்பிப்போம். தொல்லை தருகிறார் என்று தெரிந்துவிட்டால், ஒன்று அவரை புறந்தள்ளிவிட்டு (ignore) கடந்து செல்லலாம். இல்லையேல், அவர் வழி முறையில் (அவர் மொழியிலேயே) அவருக்குத் தக்க பாடம் கற்பிக்கலாம். ஆனால், தொல்லை தருபவர் முட்டாளாக இருந்தால் - எதிர்வினை எதுவும் செய்யாமல் கடந்து போவதே நமக்கு நிம்மதி.

**கூட்டத்தில் காணாமல் போன அனுபவம் உண்டா?**

# இல்லை.

& சென்னை வந்த புதிதில், தம்பியையும் தங்கையையும் அழைத்துக்கொண்டு, எக்மோர் மியூசியம் சென்றேன். பெரிய திமிங்கில (?)

எலும்புக்கூடு உள்ள அறைக்கு கூட்டத்தோடு சென்றோம். முதல் முறை என்பதால் - ஆவலோடு எல்லாவற்றையும் பார்த்தவண்ணம் சுற்றி வந்தோம். இந்த வாசல் - இந்த வழி என்று தோன்றிய வழிகள் எல்லாவற்றிலும் புகுந்து புறப்பட்டதில், திரும்பத் திரும்ப அதே ராட்சத எலும்புக்கூடு அறைக்கே வந்துகொண்டிருந்தோம். எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அப்புறம் பெரிய கூட்டம் ஒன்று வந்தபோது, அவர்கள் பின்னாலேயே ஒட்டிக்கொண்டு - ஒரு வழியாக வெளியே வந்தோம்.

இதே அனுபவம், வண்டலூர் உயிரியல் பூங்காவில், மனைவி மற்றும் குழந்தைகளோடு கரடிப்பாதையில் சுற்றிச் சுற்றி வந்தபோதும் ஏற்பட்டது. உயிரியல் பூங்கா காவலர் ஒருவரின் உதவி பெற்று, வழி தெரிந்துகொண்டேன்!

வெளியூர் போய்ச் செல்ல வேண்டிய இடத்துக்குப் போக வழி தெரியாமல் விழித்ததுண்டா? (இப்போல்லாம் கூகிள் படம்/வழிகாட்டினு இருக்கு. நான் கேட்பது பழைய அனுபவம்) எனக்கு உண்டு. பதிவா எழுதி இருக்கேன்.

# இதுவும் இல்லை. ஆனால் முதல் முறையாக தூரதேசம் சென்றபோது வழி சரிதானா என ஐயுற்றவாறு சென்றதுண்டு.

& வெளியூர் செல்லவேண்டும் என்றால், கூகிள் இல்லாத நாட்களில், பெரும்பாலும் அந்த ஊர் map - அட்லாஸ் - அல்லது சுந்தரம் க்ளேடன் டயரி மூலமாகத் தெரிந்துகொண்டு, உத்தேசமாக போய்ச் சேர்ந்துவிடுவேன். தமிழநாட்டுக்குள் என்றால் மொழிப் பிரச்சனை இல்லை. ஆனால் வட மாநிலங்கள் என்றால், ஆங்கிலம் தெரியாதவர்களிடம் விசாரித்து செல்வது படா பேஜார். கூகிள் உதவி எல்லாம் உள்ள இந்தக் காலத்திலேயே மதுரையில் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி, கூடலழகர் கோவில் பக்கம் எது என்று தெரியாமல் (அதற்குப் பக்கத்தில்தான் நாங்கள் தங்குவதற்கு ஹோட்டல் புக் செய்திருந்தோம்!) மனைவியோடு சேர்ந்து மதுரை ஜங்ஷன் முழுவதும் ஒரு சுற்றுச் சுற்றி வந்தோம்!
(அந்த அனுபவங்களை ஏழு வருடங்களுக்கு முன் பதிந்திருந்தேன்!)

ஆற்றில் படகில் செல்கையில் நடுவழியில் படகு கிளம்பாமல் மாட்டிக் கொண்டு தவித்திருக்கிறீர்களா? உங்க படகு மாட்டிக் கொண்டிருக்கும் இடம் ஓர் முதலை மடுவாக இருக்கலாம்/இருந்தது. அப்போ என்ன செய்வீங்க?

# தவித்ததுண்டு. கேரளாவில் "உள்ளல்" ஏரியில் படகுப் பயணம். ஆனால் வெகு விரைவில் ரிலீஃப் படகு வந்தது. முதலை தரிசனம் செய்து பார்க்க வேண்டியதுதான். (படகு கவிழாதவரை பயமில்லை?)

& படகு பயணம் செய்து முதலைகளை அருகே கண்டதுண்டு. நல்லவேளை படகு நடுவழியில் நிற்கவில்லை!

பயணங்கள் பிடிக்குமா? வீட்டில் இருக்கப் பிடிக்குமா?

# பயணங்கள் பிடிக்கும்.

& பயணங்கள் எப்பொழுதுமே பிடிக்கும். குழுவாக உல்லாசப் பயணம் செல்வது எப்பொழுதுமே பிடிக்கும்.

ஊரெல்லாம் சுற்றிவிட்டுக் கடைசியில் வீட்டுக்கு வந்து நம்ம படுக்கையில் "அப்பாடா"னு படுக்கும் அனுபவத்தை அனுபவிச்சிருக்கீங்களா?

# அதை அனுபவிக்காதாரும் உண்டா ?

& உண்டு. நிறைய.

பேருந்து, ரயில் பயணங்களில் வெள்ளம், ரயில் நிறுத்தம் போன்றவற்றால் அவதிப் பட்டிருக்கீங்களா?

# ஆவடி காங்கிரஸ் 1952? முடிந்து சென்னை சென்ட்ரல் வர ரயில் ஏறி வழியில் ஐந்து மணி நேரம் அகாரணமாக ரயில் நின்றதால் அவதிப் பட்டதுண்டு. அன்றைய ஜனாதிபதி முதலில் போக வழி விட்டு நின்றது ரயில் !!

& அலுவலகம் சென்று வந்த மழை நாட்கள், எதிர்பாராத தலைவர்கள் மரணம், எல்லா சமயங்களிலும் - இதுவரை பத்துப் பன்னிரெண்டு தடவைகளாவது அந்த அவதிப்பட்டது உண்டு.

உண்மையான மதச் சார்பின்மை என்றால் என்ன? அது இந்தியாவில் கடைப்பிடிக்கப்படுகிறதா?

# உண்மையான மதச்சார்பின்மை என ஒன்று எங்கேயும் இருப்பதாகத் தெரியவில்லை.

கோயில்களுக்கு தினம் போகிறவர்கள்தான் பக்தி உள்ளவர்கள் என்னும் கூற்று சரியானதா?

# தான் என்பது இல்லாவிட்டால் சரிதானோ ?

& இல்லை.

நமக்கு ஒருத்தர் செய்த கெடுதல் அவர்களை நாம் மனதார மன்னிப்பதால் மறந்துவிடும் எனச் சிலர் சொல்வது உண்மையா? உங்களுக்கு அந்த அனுபவம் உண்டா? (நான் அப்புறம் அவர்களோடு தொடர்பே வைச்சுக்காமல் விலகிடுவேன்.) மன்னிச்சேன்னு சொல்ல முடியாது. அவ்வளவு உயர்ந்த உள்ளம் இல்லையோ? தெரியலை! ஆனால் பின்னர் திரும்பிக் கூடப்பார்க்க மாட்டேன்.

# பிறர் குற்றங்களை மறத்தல் மன்னித்தல் தானே நிகழ்ந்தால் உண்டு. செய்ய வேண்டும் என்றெண்ணிச் செய்ய இயலாது.

& சந்தர்ப்ப சூழ்நிலைகளால் சிலர் செயல்களால் வருத்தம் ஏற்பட்டிருந்தபோதிலும், காலப்போக்கில் மறந்துவிடுவேன்.

நெல்லைத்தமிழன்:

ஒரு துறவி தனக்கு ஒரு மகனை வைத்துக்கொண்டு (அல்லது சிஷ்யர்கள்) அவர்களுக்கு வித்தை எல்லாம் சொல்லிக்கொடுக்கிறார். அப்போது அவர்களது நல்லது கெட்டதுகளுக்கும் அவரே காப்பாளராகிறார். அந்தப் பற்று இருக்கும்போது அவர் எப்படி முற்றும் துறந்தவராவார்?

# வாரிசுகளைத் தயார் செய்பவர்கள் துறவியர் அல்லர். மடாதிபதிகள் சந்யாசிகள் இல்லை என காஞ்சி சுவாமிகள் சொல்லியிருக்கிறார்.

அடுத்த கேள்வி, எல்லா ஆண் துறவிகளுக்கும் சிஷ்யர்கள் உண்டு. சிஷ்யர்கள் உள்ள பெண் துறவி யாரையாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

# மா ஆனந்த மயி?

இப்போ நீங்களே சொல்லுங்கள், துறவிகளில் சிறந்தவர் ஆண் துறவியா இல்லை பெண் துறவியா?

# உண்மையான துறவி ஆனால் ஆண் - பெண் / உயர்வு -தாழ்வு கிடையாது.

'பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு, தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழ்தெழுவாள்.....' என்றெல்லாம் வள்ளுவர் பாடியிருக்கிறாரே... அது பெண்ணடிமையைப் போற்றும் செயல்களல்லவா? அதனால்தான் திருக்குறளை உலகப் பொதுமறை என்று போற்றுகின்றார்களா?
தையல் சொல் கேளேல் என்று ஔவையாரும், மனைவிழைவார் மாண்பயன் எய்தார் என்று வள்ளுவரும், ஏன் பெண் சொல்வதைக் கேட்காதீர்கள், உருப்பட மாட்டீர்கள் என்று சொல்கிறார்கள்?

# ஒரு பெண் நினைத்தால் எளிதாக யாரையும் திசை திருப்ப முடியும் என்பதால் அம்மாதிரி ஆசைகள் அற்ற 'அடக்க ஒடுக்க'மான பெண்களே சிறந்தவர்கள் என்ற மனப்பான்மை அண்மைக்காலம் வரை தீவிரமாக மேற்கொள்ளப் பட்டது.

நிறைய உணவு செய்முறை காணொளி யூடியூபில் பல வருடங்களாக இருக்கிறதே. அதில் நிறைய வருமானம் வருகிறதா இல்லை ஆத்ம திருப்திக்காக சேனல்ல நிறைய உணவு வகை செய்முறைகளை வெளியிடறாங்களா?

# அதிகம் பார்க்கப் படும் சானல்களில் விளம்பரங்களைப் போடுவதால் வருமானம் இருக்கும் என்று நினைக்கிறேன்.
அது போக, "என் சானலை 183 பேர் பார்த்திருக்கிறார்கள். 65 லைக் வந்தது" என்று மகிழ்ந்து போகிறவர்களும், நாம் ஏதோ மகத்தான சாதனை செய்து விட்டோம் என்று பெருமிதம் கொள்வோரும் யூ ட்யூபில் மட்டுமல்ல பிளாக், ஃபேஸ்புக் இத்யாதி எல்லா இடத்திலும் உண்டு.

சமீபத்தில் நம் ஜி எம் பி சார், சுப்ரபாதம் தமிழில் என்ற இடுகை (http://gmbat1649.blogspot.com/2020/10/blog-post_31.html?m=0) வெளியிட்டிருந்தார். நாம் பக்தியோடு கேட்ட ஒரு ஸ்லோகத்தை தமிழில் கேட்கும்போது, மொழிமாற்றம் செய்யும்போது அதே sanctity இருக்கிறதா?

# கேள்வி கேட்கத் தோன்றுவதே அந்த 'தெய்வீகம்' இல்லை என்பதால்தான்.
ஆனால் அந்த தெய்வீக உணர்வு ஏன் / எப்படி ஏற்படுகிறது என்பது முற்றிலும் சிக்கலான கேள்வி.

வல்லிசிம்ஹன் :

அரசியல்வாதிகள் சொல்வதை நிறைவேற்றுகிறார்களா. இங்கே நடக்கும் தேர்தல் களத்தை மனதில் வைத்து கேட்கிறேன்.?

# சொன்னதை நிறைவேற்றிவிட்டதாக மக்களை நம்ப வைக்கிறார்கள்..

கொள்கைப் பிடிப்பும் நேர்மையானவர்கள் மட்டுமே அரசியலுக்கு வரவேண்டும் என்று எதிர்காலத்தில் நம்பலாமா?

# நம்புவதற்கு என்ன தடை ? தாராளமாக நம்பலாம். நடக்குமா என்று கேட்டால் கதையே வேறு.

பானுமதி வெங்கடேஸ்வரன் :

தப்பு தண்டா"என்கிறார்களே, தப்பு தெரியும் அது என்ன தண்டா?

# தவறென்று தெரிந்தும் செய்யப் படுவது தப்பு. தெரியாமல் ஆனாலும் செய்யப் பட்டது தண்டா. டண்டா என்றால் இந்தியில் தடிக்கம்பு. அதால் அடிவாங்கத் தக்க செயல் அறியாமல் செய்யினும்...
(ஒரு சமாளிப்புதான். பரவாயில்லை!)

நெல்லைத்தமிழன் :

இன்றைய சில கேள்விகள் யோசிக்க வைக்குது.

புதிதா ஒரு நாட்டை அடையும்போது முதலில் கொஞ்சம் திகைப்பிருக்கும். சிலபல முறை லண்டன் சென்றிருப்பதால், ஒரு முறை ஹோட்டல் இருக்கும் வழிப்பாதையை பிரின்ட் செய்து எடுத்துக்கொண்டு 7 மணிக்கு ஹீத்ரூவை அடைந்தேன். ட்யூபில் ஏறி நான் தங்கவேண்டிய ஹோட்டல் அருகில் உள்ள ஸ்டேஷனில் இறங்கினால் எந்தப் பக்கம் exit செய்வது எனக் குழப்பம். வெளியே வந்து ரோட்டில் நடந்தால் 8 1/2 மணிக்கு ஊரே அடங்கிவிட்டது, வெளிச்சம் குறைவு, மேப்பைப் பார்க்க முடியலை, எந்தக் கடைகளும் திறந்திருக்கவில்லை.

எனக்கு எப்போதும் உதவும் இறை சக்தியால் நான் நடந்த பாதையின் எதிரே திறந்திருந்த ஒரு ஹோட்டலில் போய் உதவி கேட்கலாம் என நினைத்தால், அதுவே நான் தங்கும் ஹோட்டல் என்பதை அறிந்துகொண்டேன். அன்று தெய்வாதீனமாக ஹோட்டலைக் கண்டுபிடித்தேன். (அங்கல்லாம் டாக்சியில் ஏறினால் பர்ஸ் பழுத்துரும், சும்மா 600 மீட்டர்தானே நடக்கணும் என்ற தைரியம். பத்து மணி வரை ஜெகஜோதியா இருக்கும்னு நினைத்துவிட்டேன்)

===

கோயில்களுக்கு தினம் போகிறவர்கள் - அட்டென்டன்ஸ் போடத்தான் பலரும் (நான் உட்பட) செல்கிறார்கள் என்பது என் எண்ணம். வேஷங்களைத் தாண்டி, பக்தியோடு இருக்கும் எளியவர்கள் என்னை ரொம்பவே நெகிழ்ச்சியுறச் செய்திருக்கிறார்கள்.

எனக்கு மனதில் ஒரு கேள்வி வரும். திருப்பதில ஜரிகண்டி சொல்றாங்க, ஒரு சில விநாடிகள்தான் தரிசனம் கிடைக்குது என அனேகமாக எல்லோரும் சொல்கிறோம். நமக்கு அரை மணி நேரம் ஒதுக்கி கருவறைக்கு முன் மண்டபத்தில் நிறுத்தினால் என்ன செய்வோம், நம் மனம் எங்கு இருக்கும், என்ன யோசிக்கும் என நினைப்பேன்.

===

44 வருடங்களுக்குப் பிறகு நான் படித்த பள்ளிக்கு, வாழ்ந்த ஊருக்குச் சென்றேன். என்னால் நாங்கள் இருந்த வீட்டைக் கண்டுபிடிக்க முடியலை. காட்டாற்றின் பாலம் ரொம்ப சின்னதாகத் தெரிந்தது. ஆனால் நான் படித்த பள்ளி மட்டும் அப்படியே இருந்தது. (கொரோனா...பள்ளியில் யாருமே இல்லை. ஞாயிறு. நான் உள்ளே சென்று பார்த்தேன். மிகப் பெரிய இடம்). ராஜ்குமார் அவர்களின் பண்ணை வீட்டையே என்னால் கண்டுபிடிக்க முடியலை. ஆனால் அந்த விஸிட் கொடுத்த உணர்வு மறக்க இயலாது.

முன்பு வாழ்ந்த இடங்களுக்கு இப்போது சென்றால் கொஞ்சம் வெறுமையாக இருக்கும்.
===

வல்லிசிம்ஹன் :

தவறு செய்பவர்களை மன்னிப்பது சிரமம் தான். மறந்து வேண்டுமானால் போகலாம்.
கனவில் கண்டபடி திட்டித் தீர்த்துக் கொள்ளலாம்.
கதையாக வலைப் பதிவில் எழுதிவிடலாம்.
===
Geetha Sambasivam :

நாங்க நவ பிருந்தாவன் பார்த்துட்டுத் திரும்பும்போது ஸ்டீமரில் எண்ணெய் அடைத்துக் கொண்டு கிளம்பவே இல்லை. படகு நின்று விட்டது. படகில் சுமார் 25 பயணிகள் இருந்தோம். அனைவரும் ஒரே குழுத்தான். ஆனாலும் படகு நின்ற இடம் முதலை மடு. கையைத் தொங்கப் போடாதீங்க எனப் படகு ஓட்டுநர்களும், கூட வந்த ஒருங்கிணைப்பாளர்களும் எச்சரிக்க, எச்சரிக்க வெயிலும் அதிகம் ஆகிப் பின்னால் வந்த படகுகள் எல்லாம் முன்னே செல்லத் தவித்துக் கொண்டிருந்தோம். படகின் பிரச்னையைச் சரிசெய்யவே முடியலை. கரைக்குப் போய்த் தான் பார்க்கணும் என்றார்கள். பின்னர் பரிசல்காரர்களைப் பிடித்து எங்கள் படகில் நாலைந்து இடங்களில் கயிற்றால் கட்டிப் பரிசல்காரர்கள் கரை வரை இழுத்து வந்து கொண்டு விட்டார்கள். கரையில் கால் வைத்ததும் "அப்பாடா!"

====
கீதா ரெங்கன் :
5 வது கேள்விக்கு...இப்பவும் கூட நான் கூகுள் மேப் பயன்படுத்துவது அபூர்வம். பொதுவாகவே கிளம்பும் முன் போகும் இடத்தின் தூரம் எவ்வளவு எதன் அருகில் இருக்கிறது பஸ் ரூட் எல்லாமே குறித்துக் கொண்டுவிடுவது வழக்கம்.

கீதாக்கா கேட்டிருக்கும் முந்தைய காலம் என்றால் இடம் பற்றி உத்தேசமாகவேனும் தெரிந்து கொண்டு நடந்துவிடுவதுண்டு 5 கி மீட்டருக்குள் என்றால். (எங்க கிராமத்துலருந்து டவுனுக்கு நடந்து பழக்கமாச்சே!!!)

வாயுள்ள பிள்ளை பிழைக்கும்னு கேட்டிருப்பீங்களே அதேதான் நான் கேட்டு கேட்டுப் போய்விடுவது வழக்கம். டூவீலர் ஓட்டிய காலத்திலும். ஆனால் காரில் எல்லாம் போனால் நிறுத்தி நிறுத்திக் கேட்பது சிரமம். ஏனென்றால் நிறுத்தவே இடம் பார்த்துதானே நிறுத்த முடியும்...அப்படிச் சுற்றியதுண்டு. யாரும் சரியாகச் சொல்லாமல்.

இப்பல்லாம் கூகுள் மேப் வைத்திருக்கும் ஓட்டுநர்களே கூட வழி சரியாகத் தெரியாமல் கூகுளும் சில சமயம் ஏமாற்றி விடுவதால் சுற்றுகிறார்கள்.

===

பயணங்கள் பிடிக்குமா? வீட்டில் இருக்கப் பிடிக்குமா?//

பயணம் ரொம்ப ரொம்ப ரொம்பவே பிடிக்கும். பயணத்தின் காதலி நான். ஆனால் இப்போது வாய்ப்பு குறைந்துவிட்டது. அதுவும் இந்தத் தொற்று வந்தாலும் வந்தது வீட்டிற்குள்தான்.

===

பேருந்து, ரயில் பயணங்களில் வெள்ளம், ரயில் நிறுத்தம் போன்றவற்றால் அவதிப் பட்டிருக்கீங்களா?//

நிறைய. எங்கள் ஊரில் வெள்ளம் வந்த போது, அப்புறம் திடீரென்று ஸ்டைரைக் என்பார்கள் அப்போது பள்ளி/கல்லூரியிலிருந்து வீட்டிற்கு வர பேருந்து இருக்காது...நடராஜாதான். 5.5 மைல்...கல்லூரிக்கு இன்னும் அதிகம். அதிகம் மழை பெய்தாலே எங்கள் ஊரில் எல்லாம் உடைப்பெடுத்துவிடும் அபாயம் நிறைய உண்டு. சுற்றிலும் வாய்க்கால்கள்.

===

மொழிமாற்றம் செய்யும்போது அதே sanctity இருக்கிறதா?//

எப்படி இசைக்கு மொழி தேவையில்லையோ அது போலவே தெய்வத்திடம் ஏற்படும் உணர்விற்கும். இறைவனை நினைக்கும் போது அங்கு மொழி எதற்கு? அதுவுமல்ல இந்த மொழிதான் தெய்வீக மொழி என்பதும் இல்லையே. இது நம் மனதைப் பொருத்ததே. ஸோ அந்த ஸ்லோகத்துக்கு இருக்கும் அந்த sanctity எந்த மொழியானாலும் இருக்கத்தான் செய்யும். இதை எல்லாம் நம் மனதுதானே க்ரியேட்

செய்கிறது. ஒரு சிலருக்கு இதுவே கூட அர்த்தம் புரிந்து இன்னும் இறைவனை ஆழ்ந்து நினைக்கவும் உதவும் இல்லையா.. இசைக்கு மொழி இல்லைதான் ஆனால் பாடல் அல்லது ஸ்லோகம் சொல்லும் போது அர்த்தம் புரிந்து சொல்லும் போது அது தனிதான். அதே போன்று அவரவர் தாய்மொழி அல்லாத பிற மொழிக் கிருதிகள் பாடும் போது அதன் அர்த்தம் தெரிந்தால் இன்னும் உணர்வு பூர்வமாகப் பாட இயலும். அதைப் போலத்தான் என்பது என் தனிப்பட்டக் கருத்து.

===

கோமதி அரசு :

//கூட்டத்தில் காணாமல் போன அனுபவம் உண்டா?//

உண்டு, சிறு வயதில் ( 4, அல்லது 5 வயது இருக்கும்)நாகர்கோவிலில் இருந்த போது சுசீந்தரம் கோவில் திருவிழாவில் தொலைந்து போய் கிடைத்த கதை முன்பே சொல்லி இருக்கிறேன்.

===

Bhanumathy Venkateswaran :

ஸ்லோகங்கள், பாசுரங்கள், பாடல்கள் எந்த மொழியில் இயற்றப்பட்டாலும் மகான்கள், பக்தர்கள் அனுபவித்து, உருகி எழுதப் பட்டிருப்பதால் அந்த மொழியிலேயே படிக்கும் பொழுது கிடைக்கும் அனுபவம், மொழி பெயர்க்கப் படும்பொழுது மிஸ் ஆகும். 'புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே..' பாடலை வேறு மொழியில் மொழி பெயர்த்துப் பாருங்கள்.

===

எனக்கு அப்போது எட்டு வயது இருக்கலாம். கும்பகோணத்தில் இருந்த என் மாமா வீட்டுக்குச் சென்றிருந்தேன். எங்கள் மாமா வீட்டுக்கு பக்கத்துக்கு வீட்டில் இருந்த கோமா(Goma) என்னும் பெண் என்னை பக்கத்தில் இருந்த பிள்ளையார் கோவிலுக்கு அழைத்துச் சென்றாள். கோவிலில் இருந்து வெளியே வந்ததும் அங்கு விளையாடிக் கொண்டிருந்த அவளுடைய தோழிகள் விளையாட அழைத்ததால்,என்னிடம்,"நீ தனியாக ஆத்துக்கு போய் விடுகிறாயா? நான் விளையாடி விட்டு வருகிறேன்" என்று வீட்டிற்கு அடையாளமும் சொல்லி அனுப்பினாள். நான் சரி என்று சொல்லி விட்டு கிளம்பினேன், நடந்து கொண்டே இருக்கிறேன், மாமா வீட்டை கண்டுபிடிக்க முடியவில்லை. பயந்து போய் அழ ஆரம்பித்து விட்டேன். அழுது கொண்டே கோவிலுக்குத் திரும்பினேன், Goma அங்கு இருக்க வேண்டுமே என்று வேறு பயம். நல்லவேளை அவள் விளையாடி முடிக்கவில்லை. நான் அழுது கொண்டே திரும்புவதைப் பார்த்ததும் அவள் தோழிகளிடம் விடை பெற்றுக் கொண்டு வந்தாள்.

===

## சரவணா ஸ்டோர்ஸில் சற்று நேரம்... ஸ்ரீராம்

ஓடோனில், சோப் உள்ளிட்ட சில பொருட்கள், பெல்ட்,, தலையணை, சில உள்ளாடைகள், நாற்காலிகள், துணி காயப்போடும் ஸ்டான்ட்,

இப்படி சில தேவைகள் பட்டியல் போட்டுக்கொண்டு கொரோனா ஊரடங்குக காலத்தில் சரவணா ஸ்டோருக்குள் நுழைந்தோம். கையில் சானிடைசர் ஊற்றினார்கள். 'துப்பாக்கி'யை நெற்றிக்கு நேராய்ப் பிடித்து அக்கறையுடன் பரிசோதித்தார்கள்.




பட்டியலைப் பார்த்தால், வாங்க வேண்டியது சில பொருட்கள்தான். ஆனால் அவற்றை வாங்க பட்ட பாடு... அத்தியாவசிய தேவைகள் என்று சிலவற்றை வாங்கச் செல்லும்போது அப்படியே சேர்த்து அதனோடு கூட என்று சில பொருட்கள்... எப்படியும் அவ்வளவு தூரம் போறோம்... அப்படியே வாங்கிடுவோம்... மறுபடி மறுபடி அலையவேண்டாம் என்ற நினைப்பில்.

எதிரில் மோதுவது போல வரும் பொதுஜனத்திலிருந்து ஒதுங்கி ஒதுங்கி நடந்து, நாம் வாங்க வேண்டிய பொருட்கள், எடுக்க வேண்டிய இடத்தில ஆட்கள் நின்றிருந்தால் அவர்கள் நகரக்காத்திருந்து...

நாம் காத்திருப்போம், ஆனால் தொடர்ந்து வரும் மற்ற மக்கள் அபப்டிக் காத்திராமல் அங்கு நிற்போருடனேயே கலந்து பார்த்துப் பொறுக்குவார்கள். காத்திருக்கும் நாம் காத்துக்கொண்டே இருக்க வேண்டியதுதான்!



அங்கு அவற்றை ஒழுங்குபடுத்தவும் ஆட்கள் இல்லை. பாதி ஆட்களை வைத்து வேலை வாங்கி கொண்டிருந்தார்கள் போலும். வேலை செய்பவர்கள் குறைவாகவே இருந்தார்கள். மக்கள் வெள்ளமும் முன்போல் இல்லை எனினும் அதிகமாகவே இருந்தனர். அறுபது வயது மதிக்கத்தக்க ஒரு மனிதர் மாஸ்க்கைக் கழற்றி விட்டு நின்று மூச்சு வாங்க, கடைக்காரப்பெண் அவரை மாஸ்க் அணியச்சொல்லி வலியுறுத்த, அவர் வயது, மூச்சு சிரமம் என்று அடம்பிடிக்க, இப்படியும் சில காட்சிகள். குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வருவோரைப் பார்க்க எரிச்சலாகக் கூட இருந்தது. பொறுப்பில்லையா, அலட்சியமா? அல்லது வேறு வழி இல்லையா? ஏதோ ஒன்று.

நாம் போட்டிருக்கும் லிஸ்ட்டா? குறைவு என்று பெயர்தான். ஆனால் அவற்றில் இரண்டை அண்டர்கிரௌண்டில் வாங்க வேண்டும். இரண்டை மூன்றாவது மாடியில் வாங்கவேண்டும். இன்னும் இரண்டை ஐந்தாவதில். ஒன்றை ஆறாவதில்... ஆறாவது மாடி சென்றதும் அங்கிருந்த பெண் சொன்னார்... "இப்போது அது ஏழாவது மாடியில் இருக்கு அப்பா..."

ஷ்... அப்பா... மறுபடி அந்தக் கோடி நடந்து ஏறவேண்டும்!

ஒரு தளத்தில் வாங்கிய பொருட்களை முன்னர் அந்ததந்த தளத்திலேயே பில் போட்டுக்கொள்ள முடிந்தது. இப்போது அவற்றை ஒன்று விட்டு ஒரு தளமாக மாற்றி இருப்பதில் ஒரு சிரமம்.

அது மட்டுமா, லிஃப்டில் ஏற காத்திருப்பதும் கஷ்டம். அதில் ஏழெட்டு பேராவது இருந்தாலே, கூடப் போவதிலும் பயம்! என்ன ஒரு மாற்றம் கொண்டு வந்தாய் இறைவா?!!

நகரும் படிக்கட்டுகள் ஒரு பக்கம் இருக்கும். இன்னொரு மூலையில் பொருள் வாங்கி கொண்டு அதன் அருகில் இருக்கும் ஏறும் படிக்கட்டுகளை நாடினால், அங்கிருக்கும் பணியாளர், "மேல க்ளோஸ் பண்ணியிருக்காங்க... இப்படி நேரா அந்தக் கடைசி போனீங்கன்னா எஸ்கலேட்டர் இருக்கும்... அதுல போங்க.." என்பார். ஏறிவந்த எங்களுக்குத் தெரியாதா? ஏழு பொருள்கள் வாங்க எவ்வளவு நடப்பது? நவீனம் என்கிற பெயரில் இதெல்லாம் மஹா சள்ளை!

பெரும்பாலான இடங்களில் ஆட்கள் கிடையாது. ஒரு பிளாஸ்டிக் வாளியையும், இன்னொரு ஏதோ ஒரு பொருளையும் எடுத்துக் கொண்டு பில் போடுமிடம் வந்தால் அவற்றை எடுத்துத் தனியே வைத்து விட்டு "அந்த செக்ஷனுக்கெல்லாம் சர்விஸ் கிடையாது ஸார்" என்கிறார் அங்கிருந்த இளைஞர்.

"ஏன்பா... கைல ஸ்கேனர் வச்சிருக்கே... அதால பார்த்தால் விலை தெரியப்போகுது... பணம் கொடுத்துட்டு நான் எடுத்துட்டு போகப்போறேன். இதில் என்ன சிரமம்?"

நிமிர்ந்து பார்த்து விட்டு அந்தப் பொருட்களை எடுத்து மேஜைக்கு அடியில் போட்டுக்கொண்டார் அந்த இளைஞர்! அவர் கஷ்டம் அவருக்கு... எவ்வளவு பேருக்கு பதில் சொல்வார் அவரும்!

எனக்கு முன் இருந்த பெண்மணி கையில் வைத்திருந்த லிஸ்ட் பார்த்தால் எனக்கு தலை சுற்றியது. நாடார் கடையில் போடும் பில் போல நீளமாக இருந்தது. மொத்த தேவைகளையும் இங்கேதான் வாங்கி இருப்பார் போலும். அவருக்கு பில் போடவே அவ்வளவு நேரம்... போட்ட பில்லை ஒருவர் அடுத்து நின்று செக் செய்வார்... அதற்கு மறுபடி அதைவிட நேரம்... அவர் பின்னால் நின்றவர்கள் பொறுமை இழந்து போயிருப்பர்கள்.

பில்லை வாங்கி செக் செய்த பெண் மாஸ்க் அணியாமல் கழுத்தில் தொங்க விட்டிருக்க, "ப்ளீஸ்... மாஸ்க்கை மாட்டும்மா... எனக்கு ரெண்டு நாளாய் இருமலா இருக்கு" என்றதும் உடனடியாக சூப்பர்ஃபாஸ்ட்டில் மாஸ்க் அணிந்தாள்!

ஓரமாக நின்றிருந்த ஒரு சூப்பர்வைசர் பெண்ணும் மாஸ்க் அணியவில்லை. மறுபடி என்ன சொல்லி இவரை அணிய வைக்க? அவரைத் தாண்டி நடக்காமல் அவரைப் பார்த்ததும் சட்டெனப் பின்வாங்கி வேறு வழி

இருக்கிறதா என்று ஆராய்வது போல பார்த்ததும், அவர் புரிந்துகொண்ட கழுத்தில் தொங்க விட்டிருந்த மாஸ்க்கை முகத்தில் மாட்டினார்!

கடைசியில் நாற்காலி, துணி காயப்போடும் ஸ்டான்ட் போன்றவற்றை பார்த்து மட்டும் வந்தோம். திருப்தியாக இல்லை. இங்கு நான் பார்த்து வைத்த பிளாஸ்டிக் நாற்காலி 619 ரூபாய். அதே தரத்தில் உள்ள நாற்காலிகள் வெளியில் கடைகளில் 1500 ரூபாய்! கலர் பிடிக்காததால் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று வந்துவிட்டோம். அப்போது நேராய் ஒன்பதாவது மாடிக்கு மட்டும் வந்து செல்லவேண்டும் என்று மனதுக்குள் தீர்மானம்!

சமீபத்தில் பழைய பட்டிமன்றம் ஒன்று கேட்டேன். சனி ஞாயிறுகளில் பழைய பட்டி மன்ற ஒலிப்பதிவுகளை சன்டிவி போட்டுக் கொண்டிருக்கிறது.



அதில் தீபாவளி கொண்டாடியது அந்தக் காலம் மகிழ்ச்சியா, இந்தக் காலம் மகிழ்ச்சியா என்று தலைப்பு. இந்தக் காலம்தான் என்று தீர்ப்பு சொன்னார் நடுவர் சா பா.

அதுபோல, எல்லாப் பொருட்களும் ஒரே இடத்தில வாங்கலாம்தான்... ஆனால் எவ்வளவு அலைச்சல்... பத்து பொருட்கள் வாங்க நான்கு மாடி மாற்றி மாற்றி ஏறி இறங்கி, அவற்றை பில் போட தளம் மாற்றி ஏறி, அல்லது இறங்கி, அதை அங்கங்கே காப்பாற்றி வைத்துவிட்டு, அதற்கு டோக்கன் வாங்கிக்கொண்டு, அடுத்த தளம் சென்று, வீட்டுக்கு கிளம்பும்போது மறக்காமல் எந்தெந்த தளத்தில் என்னென்ன வைத்தோம் என்று டோக்கன் வைத்து

வாங்கிக்கொண்டு... அருகிலேயே இருக்கும் மாடிப்படி அடைத்திருந்தால் மறுகோடிக்கு எஸ்கலேட்டர் நோக்கி நடந்து... போதும்டா சாமி!

இதற்கே இரண்டு மணிநேரம் ஆனது.

==============

## கதம்பம் :: ஸ்ரீராம்

சில வருடங்களுக்கு முன் கடற்கரை தாண்டி செல்லவேண்டி வந்த ஒரு ஆகஸ்ட் மாதத்தில் அங்கு இருந்த காந்தி சிலையை புகைப்படம் எடுத்தேன். அதைச் சும்மா வெளியிடாமல் நாலுவரி எழுதி பேஸ்புக்கில் வெளியிட்டேன்... அது...



காந்தியும் நின்று பார்க்கிறார்
கடற்கரையில்
காற்றுதான் வரவில்லை..

கடற்கரையிலேயே
காற்றுக்குப் பஞ்சமா?

ஆகஸ்ட் மாதத்திலும்
ஐயகோ இப்படி ஒரு வெப்பமா?

இது என்ன சென்னையா? இல்லை
எரிகின்ற எண்ணெயா?

உடை குறைத்தும் உடல் குளிரவில்லை

வெக்கையோ தாளவில்லை
வேர்வையும்தான் குறையவில்லை

என்னையும்தான் கொண்டுபோய்
ஏஸி ரூமில் வைத்திடுங்கள்
எளவு.. வெறுக்க வைக்கிறது
வெயிலும் வெக்கையும்...

============

**ஒரு திருக்குறளும் அதற்கான உரைகளும்...**

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

மண் வேறு மணல் வேறு. மண் கேணி நிலையாக இருக்கும். ஆனால் மணற்கேணி அடிக்கடி சரியும். அதன் பயனாகிய நீரை அடைய விரும்பினால் அடிக்கடித் தோண்டிக் கொண்டே இருக்க வேண்டும். அது போல ஒருவர் கற்கக் கற்க அறிவு பெருகும். பெற்ற அறிவை நிலை நிறுத்த வேண்டுமானால் திரும்பத் திரும்பக் கற்க வேண்டும்.

இதைச் சொன்னவர் முன்னாள் தலைமை நீதிபதி திரு மு மு இஸ்மாயில் அவர்கள்.

மற்றவர்கள் என்ன சொல்லியிருப்பார்கள்? இதோ...

திரு மு.வரதராசனார் உரை

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்க்கு நீர் ஊறும், அதுபோல் மக்களின் கற்றக் கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

திரு மு.கருணாநிதி உரை:

தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்.

திரு சாலமன் பாப்பையா உரை:

மணலில் தோண்டிய அளவு சிறு குளத்தில் நீர் ஊறும்; மக்கள் கற்ற அளவே அறிவும் வளரும்.

திரு.பரிமேலழகர் உரை:

மணற்கேணி தொட்ட அனைத்து ஊறும் – மணலின்கண் கேணி தோண்டிய அளவிற்றாக ஊறும், மாந்தற்கு அறிவு கற்றனைத்து ஊறும் – அதுபோல மக்கட்கு அறிவு கற்ற அளவிற்றாக ஊறும். (ஈண்டுக் 'கேணி' என்றது, அதற்கண் நீரை. 'அளவிற்றாக' என்றது, அதன் அளவும் செல்ல என்றவாறு. சிறிது கற்ற துணையான் அமையாது, மேன்மேல் கற்றல் வேண்டும் என்பதாம். இஃது ஊழ் மாறு கொள்ளாவழியாகலின், மேல் 'உண்மை அறிவே மிகும்' (குறள் .373) என்றதனோடு மலையாமை அறிக.)

சுஜாதாவின் உரை:

மணல் கிணற்றில் தோண்டிய அளவுக்குத்தான் நீர் ஊறும். அதுபோல் படித்த அளவுக்குத்தான் அறிவு பெருகும்.

=================

**தினமலரில் படித்து நெகிழ்ந்த செய்தி ஒன்று. அதற்கு நான் கொடுத்திருக்கும் தலைப்பை ஈற்றடியாய்க் கொண்டு ஒரு நான்கு வரிக் கவிதை எழுத முடியுமா? அந்தத் தலைப்பைத் தொட்டால் செய்திக்குச் செல்லலாம்!**

காளைக்கும் வருமாம் காதல்

அலங்காநல்லூர் : அலங்காநல்லூர் பகுதியை சேர்ந்த ராஜா பசு மாடுகள் வளர்த்து வந்தார். அவற்றுடன் பாலமேடு மஞ்சமலை கோயில் காளை பழகி வந்தது.



ஊரடங்கால் வருமானமின்றி தவித்த ராஜா, பசு ஒன்றை வாடிப்பட்டியைச் சேர்ந்தவருக்கு விற்றார். நேற்று மினி சரக்கு வாகனத்தில் பசுவை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட போது கோயில் காளை தடுத்து பாசப்போராட்டம் நடத்தியது. அருகில் இருந்தவர்கள் விரட்டியும் ஒரு கி.மீ., வரை வாகனத்தை காளை பின்தொடர்ந்து ஓடி ஏமாற்றத்துடன் திரும்பியது.

=================

முன்ஜாக்கிரதை முத்தண்ணா! அவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அவர் வியர்வையையும், உடல் நடுக்கத்தையும் கவனியுங்கள்! சப்போர்ட்டுக்கு தூண் வேறு!




**இவர் சந்தேக பதி!**


இஞ்சின்லேருந்து ஏதோ சத்தம் வர்ற மாதிரி இருக்குன்னு உங்ககிட்டே சொன்னது பெரிய தப்பாப் போச்சு...!

# கனவினில் வந்தது கவிதைகள் தந்தது… ஸ்ரீராம்

ஏகப்பட்ட விருதுகளை வாங்கி குவித்த மரியான் திரைப்படத்திலிருந்து பானு அக்கா ஒரு பாடலை நேயர் விருப்பமாகக் கேட்டிருக்கிறார். ஏ ஆர் ரெஹ்மான் இசையில், விஜய் பிரகாஷ், ஸ்வேதா மோகன் பாடிய பாடல். எழுதி இருப்பவர்கள் கபிலனும் ரஹ்மானும்.

>>>> YOUTUBE LINK <<<<<

===

1985 இல் தேவராஜன் இயக்கத்தில் ராஜேஷ், சுரேஷ், நளினி, சுலக்ஷணா நடிப்பில் வெளியான படம் ராஜாத்தி ரோஜாக்கிளி.

இத்திரைப் படத்திலிருந்து ஏற்கெனவே ஒரு யேசுதாஸ் பாடல் பகிர்ந்திருந்தேன். "ஓடையின்னா நல்லோடை" பாடல்

இப்போது இந்தப் பாடல். பாடல் கவிஞர் முத்துலிங்கம். இசை சந்திரபோஸ்.

காதலி நளினி விஸ்வரூபம் எடுத்து நிற்க, தத்தித்தடுமாறி அந்த விஸ்வரூப உருவத்தின் மேல் நின்று சுரேஷ் பாடுவது போல அமைந்த காட்சி அமைப்பு.

எஸ் பி பி குரலும் தொடக்கம் முதல் வரும் தாளமும் ப்ளஸ் இந்தப் பாடலுக்கு. எஸ் பி பி யின் இனிமையான பாடல்களில் ஒன்று, சந்திரபோஸின் இனிமையான இசையில் ஒன்று இந்தப் பாடல்.

யாரோ
மன்மதன் கோயிலின் மணித் தேரோ
மானோ
பொன்மணி நகையிலாச் சிலைதானோ
கனவினில் வந்தது கவிதைகள் தந்தது
ஆனந்தப் பூவில் வந்த தேனோ

தாழம்பூ போல் செவியிலே
தவழ்ந்து ஆடும் வகையிலே
வானில் மின்னும் வெள்ளிமீன் போல்
வைரத்தோடு பதிக்கிறேன்
பாவை வண்ணக்கோவை -இதழ்

பவளம் மெல்லத் திறக்குமோ

நீலமேகக் குழலிலே
பூவைச்சூடும் பொழுதிலே
வெள்ளைத்திரை போல் நெற்றிமீது
வண்ணத்திலகம் இடுகிறேன்
பார்வை இசைக்கோர்வை - புதுப்
பாடல் ஒன்று படிக்குமோ

>>>> YOUTUBE LINK <<<<<

====

# ஏழை மாணவிக்கு வீடு கட்டிக்கொடுத்த தலைமை ஆசிரியர்

உடுப்பி: ஓய்வு பெற்ற நாளில், ஏழை மாணவியின் குடும்பத்துக்கு இன்ப அதிர்ச்சியூட்டும் வகையில், தலைமை ஆசிரியர் ஒருவர், தன் சொந்த பணத்தில் வீடு கட்டி கொடுத்த, நெகிழ்ச்சி சம்பவம் உடுப்பியில் நேற்று நடந்தது.

கர்நாடக மாநிலம், உடுப்பியின் நிட்டூர் அரசு நிதியுதவி பெறும் உயர் நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்தவர் முரளி கடேகார். இவர், 32 ஆண்டுகளாக இந்த பள்ளியில் பணியாற்றி வந்தார். ஐந்து ஆண்டுகளுக்கு முன் தலைமை ஆசிரியராக பணி உயர்வு பெற்றார். நேற்று(அக்., 31) பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

பள்ளியிலிருந்து செல்வதற்கு முன், நயனா என்ற ஏழை மாணவியின் குடும்பத்தின் நிலைமை அறிந்து இன்ப அதிர்ச்சி வைத்தியம் அளிக்க நினைத்தார்.இதற்காக தன் சொந்த பணத்தில் அந்த மாணவி குடும்பத்துக்கு புதிய வீடு ஒன்றை கட்டி நேற்று காலை நேரில் வரவழைத்து சாவி வழங்கினார். பத்து ரூபாய் கடன் வழங்க யோசிக்கும் இந்த காலத்தில், புதிதாக வீடு ஒன்றை கட்டி கொடுத்து மாணவிக்கு பரிசளித்த தலைமை ஆசிரியரின் செயலுக்கு பலரும் பாராட்டுகின்றனர். வீட்டை பார்த்ததும் மாணவியின் குடும்பத்தினர் கண்களில் ஆனந்த கண்ணீர் வந்தன. ஆசிரியை ஆரத்தழுவி கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர்.



உடுப்பி அதமாரு மடத்தின் மடாதிபதி விஸ்வபிரிய தீர்த்த சுவாமிகள், பா.ஜ., எம்.எல்.ஏ., ரகுபதி பட் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

நடந்து முடிந்த நீட் தேர்வில் 508 மார்க்குகள் எடுத்த அரசு பள்ளி மாணவன் நரசிம்மனின் தாய் நாகலட்சுமி வீட்டு வேலை செய்பவர்

தனது மகனின் படிப்பிற்காக நகைகளை விற்றும்,கடன் வாங்கியும் படிக்க வைத்தவர் எப்படியும் தன் மகன் டாக்டராகிவிடுவான் என்ற கனவில் இருக்கிறார்.

சென்னை சூளைமேடு அருணாசலம் நகர் 2 வது தெருவைச் சேர்ந்தவர் வெங்கடேசன் ஆட்டோ ஓட்டுனர் இவரது மனைவி நாகலட்சுமி பல வீடுகளில் வேலை செய்துவருபவர்.



இவர்கள் இருவருமே அதிகம் படிக்காதவர்கள் என்பதால் தங்களது இரண்டு மகள்களையும் ஒரு மகனையும் நன்கு படிக்கவைக்க வேண்டும் என்பதுதான் இவர்களது ஒரே லட்சியம்.

அதிலும் மகன் நரசிம்மன் சிறு வயது முதலே டாக்டராக வேண்டும் என்ற தாகத்துடன் படித்தார்,கோடம்பாக்கம் பதிப்பக செம்மல் க.கணபதி அரசு மேல்நிலைப்பள்ளியில் பிளஸ் டூ வரை படித்தார்.

பிளஸ் டூவில் நல்ல மார்க்குகள் எடுத்த நிலையில் நீட் தேர்வு எழுதினார் ஆனால் அந்த வருடம் 220 வது இடத்தைத்தான் பெற்றார்.

சோர்ந்து போயிருந்த நரசிம்மனை உற்சாகப்படுத்தியது அவரது தாய் நாகலட்சுமிதான்.அம்மா நான் இருக்கேன் கவலைப்படாதே திரும்பவும் நீட் தேர்வு எழுதுப்பா என்று சொல்லி ஊக்கப்படுத்தினார்.

கோச்சிங் சென்டரில் சேர்ந்தால் நல்ல மார்க்குகள் வாங்கலாம் என்று வந்த ஆலோசனையின் பேரில் கோச்சிங் சென்டரில் சேர்ந்தார் அதற்கான கட்டணமாக ஒரு லட்ச ரூபாய்க்காக வீட்டில் இருந்த நகைகளை பாங்கில் அடமானம் வைத்தார் அதுவும் போதாது என்ற நிலையில் கூடுதல் வட்டிக்கு கடன் வாங்கினார்.

வாங்கிய கடனை அடைப்பதற்காக கூடுதலாக பல வீடுகளில் கூட்டிப் பெருக்குவது உள்ளீட்ட வேலைகளை செய்தார் அப்பா வெங்கடேசனும் வீட்டிற்கே வராமல் விடிய விடிய ஆட்டோ ஒட்டினார்.

பெற்றோர்களின் சிரமத்தை குறைப்பதற்காக நரசிம்மனும் மருந்துக் கடையில் பகுதி நேர வேலை பார்த்தார்.

ஒரு வருடம் நீட் தேர்விற்காக கடுமையாக படித்தார் இரவு முழுவதும் துாங்காமல் கூட படிப்பார் இவரது படிப்பிற்கு இடையூறு இருக்கக்கூடாது என்பதற்காக அந்த சின்ன வீட்டில் இருந்த ஒரே சந்தோஷமான டி.வி,யைக் கூட யாரும் பார்க்காமல் மொத்த குடும்பத்தினரும் ஒத்துழைத்தனர்.ஒரு வருடம் படிப்பு படிப்பு என்று மட்டுமே நரசிம்மன் இருந்துள்ளார்

இதன் விளைவு 508 மார்க்குகள் எடுத்துள்ளார் இந்த மதிப்பெண்ணிற்கு மருத்துவக்கல்லுாரியில் இடம் கிடைக்கும் என்ற நிலையில் தற்போது அரசுப்பள்ளி மாணவர்களுக்கான உள் ஒதுக்கீடும் சேர்ந்துள்ளதால் சீட் கிடைப்பது உறுதி என்ற நிலை உள்ளது.

இதன் காரணமாக உழைப்பதைத் தவிர வேறு எதுவும் தெரியாத அந்த குடும்பத்தில் சந்தோஷம் பூத்துள்ளது அதிலும் தாய் நாகலட்சுமியின் கண்களில் ஆனந்த கண்ணீர் என் மகன் டாக்டராகி ஏழை பாழைகளுக்கு எல்லாம் நல்லா வைத்தியம் பார்ப்பேன் என்றார் ஆனந்தகண்ணீருடன்.

மாணவர் நரசிம்மனிடம் பேசுவதற்கான எண்:6379954104.

-எல்.முருகராஜ்.

# மாய நோட்டு நெடுங்கதை :: ஜீவி



## 1

வங்கி கேஷ் கவுண்ட்டரின் வலது உச்சியில் இருந்த எலெக்ட்ரானிக் எண் பலகை ஒளிர்ந்து 52 என்று டோக்கன் எண்ணை ஒலிபரப்பி என்னை உசுப்பி விட்டது.

பெஞ்சில் அமர்ந்திருந்தவன் கவுண்ட்டரை நோக்கி விரைந்தேன். டோக்கனைக் கொடுத்ததும் சரிபார்த்து விட்டு "எப்படி வேண்டும்?" என்றார் கேஷியர்.

"ஐநூறாகவே கொடுத்து விடுங்கள்.." என்றேன். அது தான் என் வழக்கம். மாத ஆரம்பத்தில் இருபதாயிரம் ரூபாய்க்கு ஐநூறு ரூபாய் நோட்டுகளாகவே எடுத்து வருவது தான் வழக்கம்.. ஒரு ரப்பர் பேண்ட் சுற்றி பாண்ட் பாக்கெட்டில் போட்டு வருவது சுலபம்.

காசாளர் ஐநூறு ரூபாய் நோட்டுகளை டிராயரிலிருந்து எடுத்து அடுக்கி மிஷினில் வைத்து இயக்கிய பொழுது கவுண்ட்டரின் முன் பக்கம் இருந்த மிஷின் திரையில் 38 என்று காட்டியது. இன்னும் இரண்டு நோட்டுகளை கேஷியர் எடுத்து செருகி மிஷினை இயக்கியதும் 40 எண்ணைக் காட்ட நோட்டை எடுத்து என் பாஸ் புக்கில் வைத்துத் தந்தார். ரப்பர் பேண்ட் கேட்டு வாங்கிக் கொண்டேன். சந்தேகத்திற்கு நானும் ஒருதடவை நோட்டுக்களை எண்ணி திருப்தியுடன் பேண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டேன். உடனே வங்கியை விட்டு வெளிவராமல், பாஸ்புக் எண்ட்ரி மிஷினிடம் சென்று பதிவு செய்து கொண்டேன். இன்றைய தேதியில் 90456 ரூபாய் இருந்தது.

வழக்கமாக பால்காரன், பூக்காரம்மா, பேப்பர் பையன், காஸ் சிலிண்டர் சப்ளை, காய்கறி. மளிகை சாமான்கள் -- இவ்வளவு தான் பணமாகக் கொடுக்கும் செலவுகள். எழுபத்து ஐந்து வயதுக்கு மேலாகி விட்டதல்லவா, இந்த தேசத்தில் எந்த மருத்துவ காப்பீடு திட்டங்களுக்கும் லாயக்கற்ற வயது. அல்லது அவர்கள் சீந்தாத

வயசு. ஆகையால், தன் கையே தனக்குதவி என்ற ஞானத்தில் எதிர்பாராத அவசர செலவுகளுக்கு வேறொரு வங்கியின் டெபிட் கார்ட் இருக்கிறது. அந்த வங்கிக் கணக்கில் இரண்டு லட்சமாவது இருப்பில் இருக்கிற மாதிரி பார்த்துக் கொள்வேன்.

காசாக கொடுக்க வேண்டிய செலவுகளுக்கு ஐநூறு ரூபாயை கொடுத்து பாக்கியை சில்லறை நோட்டுகளாக அடுக்கி வைத்துக் கொள்வது ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டது. அவை சிறு சிறு செலவுகளுக்குத் தோன்றாத் துணையாய் இருக்கும். அதனால் நூறு, ஐம்பது, இருபது, பத்து என்று சில்லறை நோட்டுகளும் கைவசம் எப்பொழுதும் இருக்கும். காசு கொடுத்துத் தான் எல்லாம். கடன் என்ற பேச்சுக்கே இடமில்லை. வீட்டின் வரவு செலவு கணக்குகள் அத்தனையும் பல வருஷங்களாக என் பொறுப்பில் தான்.

"ஏங்க.. வாசல்லே யாரோ கூப்பிடறாங்க, பாருங்க.. கைவேலையா இருக்கேன்..."

எக்னாமிக் டைம்ஸ் கலர்ப் பேப்பரில் ஷேர் மார்க்கெட் நிலவரங்களை மேய்ந்து கொண்டிருந்தவன், நேற்றைய மார்க்கெட் சரிவின் சலிப்பினூடே வாசல் பக்கம் வந்தால் தார்ப்பாச்சு வேஷ்டியும் பை வைத்து தைத்த பனியன் - முண்டாசுமாய் கிராமத்து தோற்றத்தில் ராகவையா. ரொம்ப வருஷமாய் எங்கள் சாப்பாட்டுக்கு அரிசி சப்ளை செய்கிற வியாபாரி.

"வழக்கம் போல கொண்டு வர்ற ஐட்டம் தானே கொண்டு வந்திருக்கே?.. அதான் காண்றதுன்னு.." என்றேன்.

"அதே தான் சாமி. இப்போ போனா ரெண்டு மாசத்துக்கு வர மாட்டேன். சேர்த்து வாங்கிக்கங்க.." என்றான்.

"அம்மா என்ன சொல்லுவாங்கன்னு தெரியலியே?.. எதுக்கும் கேட்டுகிட்டு வந்திடறேன்.." என்று உள் பக்கம் திரும்பினேன்.

அதற்குள் ஜானகியே கையைத் தொடைத்தபடியே வந்து விட்டாள். "என்ன, ராகவையா?.. எப்படியிருக்கீங்க?.." சட்டென்று பழக்கமானவர்களிடம் நெருக்கம் கொண்டு விடுவாள் ஜானகி.

"உங்க புண்ணியத்திலே நல்லா இருக்கேம்மா.. ரெண்டு மாசம் கழிச்சுத் தான் வருவேன்.. அதான் சேர்த்து வாங்கிக்கங்கன்னு ஐயா கிட்டே சொல்லிக்கிட்டிருக்கேன்."

"அப்படியா?.. ஏன் வரமாட்டீங்க?.."

"பேத்திக்கு கல்யாணம் நிச்சயமாயிருக்கு. பத்திரிகை கொடுக்க எப்படியும் வருவேன்.. "

"ஓ.. அப்படியா? ரொம்ப சந்தோஷம்ப்பா.. நன்னா இருக்கட்டும்.." என்று வாழ்த்தினாள் ஜானகி. "அதே அரிசி.. அதே விலை தானே?.. "

"அதேதாம்மா.. மார்க்கெட்லே பத்து ரூபா கூடியிருக்கு.. இருந்தாலும் உங்க கிட்டே நா கேக்க முடியுமா?.. ரெண்டு மாச கணக்குப்படி தனிப்பையிலே போட்டு கொண்டாந்து இருக்கேன்.." என்று ஒரு கோணிப்பையை தொட்டுத் தூக்கி "எங்கே வைக்கட்டும், ஐயா?.." என்று என்னைப் பார்த்துக் கேட்டான்.

"உள் ஹால்லே கொண்டு வந்து வைச்சிடு.. அப்புறம் நான் எடுத்து வைச்சிக்கறேன்.. "

"ராகவையா.. காசு வாங்கிண்டு கிளம்பிடாதே.. காபி கலக்கறேன்.. சாப்பிட்டுப் போவே.." என்று ஜானகி உள்பக்கம் வந்தாள்.

ஹாலில் கொண்டு வந்து அரிசியை வைத்தான் ராகவையா. நான் கேல்குலேட்டரை எடுத்து கணக்குப் போட்டு காசு எடுத்து வர உள்பக்க பீரோவிற்கு நகர்ந்தேன்.

அதற்குள் ஜானகி காப்பியோடு வந்து விட்டாள். "உக்காந்து சாப்பிடு.." என்று காப்பியை சின்ன ஸ்டூலின் மேல் வைத்தாள்.



பீரோவினுள் லாக்கர் மாதிரியான ஒரு சின்ன தடுப்புக்குள் ஒரு சின்ன பை. அந்தப் பையினுள் ஒரு பிளாஸ்டிக் டப்பா. அந்த டப்பா தான் எனக்கு ரூபாய் நோட்டுகளை வைக்கும் கருவூலம். அதில் பாங்கிலிருந்து எடுத்து வந்திருந்த ஐநூறு ரூபாய் கட்டை எடுத்தேன். ராகவையாவுக்கு இரண்டாயிரம் ரூபா தர வேண்டும். ஐநூறு ரூபாவா நாலு

கொடுத்து விடலாம் என்ற எண்ணத்தில் ஜன்னல் வெளிச்சப்பக்கம் வந்து கட்டிலிருந்து நோட்டை எடுக்கும் போது ஒரு நோட்டில் ஏதோ கருப்பாய் திட்டாய் இருப்பது போலிருந்தது. அந்த நோட்டை மட்டும் கட்டிலிருந்து உருவி தனியே எடுத்துப் பார்த்தேன்.

நோட்டில் காந்தி தாத்தா அச்சுக்குக் கொஞ்சம் தள்ளி ஓரப் பக்கமாக தீயில் சுட்டிருந்தது. சுட்ட இடத்தில் சின்னதாய் அரக்குக் கலரில் பொத்தல். சிகரெட் பிடிச்சபடியே நோட்டை வாங்கியிருப்பானோ?.. அல்லது நோட்டை எண்ணியபடியே சிகரெட் பிடிச்சிருப்பானோ? இல்லை, டாஸ்மாக் சம்பந்தப்பட்ட பிரக்ஞையற்ற செயலாய் இருக்குமோ?.. 'அட! வங்கியில் எண்ணிப் பார்க்கும் பொழுது கண்ணுக்குத் தெரியலையே' என்று நொந்து கொண்டேன்.

'அதுக்கென்ன, யாருக்காவது நாலைந்து நோட்டாக கொடுக்கும் பொழுது நோட்டோடு நோட்டாக சேர்த்துக் கொடுத்தால் போச்சு..' என்று நினைத்த அடுத்த வினாடியே 'அதான் ராகைவையாவுக்கு இப்போ நாலு நோட்டு கொடுக்கப் போறையே.. அதோடு சேர்த்துக் கொடுத்துடு..' என்று மனசின் ஒரு மூலையிலிருந்து ஆலோசனை பிறந்தது.

ஆலோசனையை செயல்படுத்த எத்தனிக்கும் போதே, 'கூடவே, கூடாது..' என்று அதே மனசின் புனர் ஆலோசனை பிடிவாதம் பிடித்தது.. 'பாவம். சொந்த நிலத்தின் விளைச்சலை உனக்காக தூக்கிக் கொண்டு வந்திருக்கான்.. பேத்திக்கு கல்யாணம்ன்னு வேறே நல்ல சேதியோடு வந்திருக்கான்.. சொந்த பந்தத்தை அழைக்கிற மாதிரி உனக்கும் பத்திரிகை வைக்கறதா சொல்றான்.. அவனைப் போய் ஏமாத்த நினைக்கிறையே! சீ.. நீ எல்லாம் ஒரு மனுஷனா?' என்று மனசின் இன்னொரு பகுதி காறித் துப்பியது.

"என்னங்க.. ராகவையா வெயிட்டிங்.. அவனும் இன்னும் நாலு இடத்துக்குப் போகணுமிலே?" என்று ஹாலிலிருந்து ஜானகியின் குரல்..

சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தேன்.

நெருப்புச் சுட்ட அந்த நோட்டை பிளாஸ்டிக் டப்பாவிலேயே வைத்து விட்டு பார்த்து பார்த்து புதிய நோட்டுகளாக நான்கு நோட்டுகள் கட்டிலிருந்து உருவிக் கொண்டு வெளியே வந்தேன். ஜானகி, ராகவையாவிடம் அவன் பேத்தி கல்யாண நிச்சயப்பு விஷயங்களைக் கேட்டுக் கொண்டி ருந்தாள்.

நான் வந்ததும், "பாவம்.. எவ்வளவு நேரம் அவனுந்தான் நிப்பான்?" என்று அவள் கரிசனம் கூடியது. அந்த எவ்வளவு நேரத்தில் எனக்குள் எத்தனை போராட்டம் என்று நினைத்துக் கொண்டேன்.

நான் கொடுத்த நோட்டுகளை வாங்கிக் கொண்டு ஒரு கும்பிடு போட்டு விட்டு ராகவையா போய் விட்டான்.



உள்ளே போனேன். வெளியே போனால் எடுத்துச் செல்லும் பர்ஸில் கைச்செலவுக்காக ஐந்து ஐநூறு ரூபா நோட்டுகளை எடுத்து வைத்துக் கொண்டு அதன் மத்தியில் அந்த நெருப்பு பட்ட நோட்டை நுழைத்து வைத்தேன்.. யாருக்கானும் கொடுக்கும் பொழுது நோட்டோடு நோட்டாக சேர்த்துக் கொடுத்து விடலாம் என்பதற்காக இந்த ஏற்பாடு.

மாலை வந்ததும் கடைத்தெரு பக்கம் போய் இந்த செல்லா நோட்டை யாரிடமாவது தள்ளி விடலாமா என்று மனசில் நமநம. "கடைத்தெரு போறேன்.. ஏதாவது வேணுமா?" என்று ஜானகியிடம் கேட்டதற்கு "நாளைக்கு வெள்ளிக்கிழமை அல்லவா?.. பூஜைக்கு வேணும்.. வாழைப்பழம் கைவசம் இருக்கு.. பாக்கு கூட இருக்கு.. ரெண்டு ரூபாவுக்கு வெற்றிலை மட்டும் வாங்கி வாங்க.." என்றாள்.

இருநூறு, முன்னூறு செலவு வைக்கிற மாதிரி இவள் ஏதாவது சொல்லுவாள் என்று எதிர்பார்த்தால் இரண்டு ரூபாவுக்கு சொல்கிறாளே என்று எரிச்சலாக வந்தது. ஒருவழியாக ஆசுவாசப்படுத்திக் கொண்டு செருப்பை மாட்டிக் கொண்டு வெளியே வந்தேன்.

காற்று சுகமாக இருந்தது, மனசுக்கு இதமாக இருந்தது. ஒரு ஐநூறு ரூபா ஏமாந்ததற்கு இந்த அளவு மனச் சலிப்பு கூடாது என்று தோன்றியது. 'வாழ்க்கையில் சந்தோஷம் வேண்டும்; அது இருந்தால் எவ்வளவு வேணுமானாலும் சம்பாதித்துக் கொள்ளலாம்..' என்று அனுபவ ஞானம் போல ஒரு சந்நியாசி நேற்று டிவியில் சொன்னது நினைவுக்கு வந்து செயற்கையாக ஒரு சந்தோஷ வேட்கையை

மனசுக்குள் உற்பத்தி செய்து கொண்டேன். வலிய சிரிப்பை வரவழைத்துக் கொள்வது கஷ்டமான காரியம் தான். நாகேஷே அது பற்றிச் சொன்னதாக ராத்திரி மலரும் பூ பத்திரிகையில் பெட்டிச் செய்தி படித்திருக்கேன். அதை நினைத்த பொழுதே இயல்பாகவே சிரிப்பு வந்து விட்டது. அதே மூடில் கடைத்தெருவில் காசுக் கடைத் தெரு பக்கம் ஒரு உலா வந்தேன்.

எங்கள் ஊர் முரளி ஸ்வீட் பிரபலமான கடை. காசுக்கடைத் தெருவில் தான் இருக்கிறது. நகைகளுக்கும் ஸ்வீட்களுக்கும் என்ன பந்தமோ தெரியவில்லை. ஆனால் முரளிக்கு அது பற்றித் தெரிந்திருக்கிறது. அதனால் தான் காசுக்கடை தெருவில் லாலா கடை வைத்திருக்கிறார்.

இனிப்புக் கடையில் வழக்கம் போலவே செம நெரிசல். முரளி கடை இனிப்பு என்றால் அது என்னவோ பைத்தியமாக அலைகிறார்கள். தினப்படிக்கு எவ்வளவு லாபம் என்று கணக்கு போட நேரமில்லாத வியாபாரம். இந்த நோட்டுக்கு இந்த மாதிரி காசில் புரள்கிற ஆளிடம் போய்ச் சேருவது தான் சரியான இடம் என்று தீர்மானித்து விட்டேன். பத்தோடு பதினொன்று கூட இல்லை ஆயிரமாயிரத்தோடு ஒன்றாக இந்த நோட்டும் சேர்ந்தால் இதை மாற்றிக் கொள்ள அவர்களுக்கு ஆயிரம் வழிகள் இருக்கும் என்ற எண்ணம்.

கூட்ட நெரிசலில் பர்சை பறிகொடுத்து விடக்கூடாது என்ற ஜாக்கிரதை உணர்வுடனேயே படியேறினேன்.. எனக்கு முன்னால் நின்றிருந்த இரண்டு வரிசையை ஒரு வழியாக சமாளித்து விதவிதமான இனிப்புகள் நிரப்பப்பட்ட கண்ணாடி கேஸை ஒரு வழியாக நெருங்கி விட்டேன். எனக்கு வாயில் போட்டால் கரையும் நைஸ் மைசூர்பா ரொம்ப இஷ்டம். ஆனால் ஜானகியோ 'என்னங்க, எப்போ பார்த்தாலும் மைசூர்பாகு?' என்று நான் லாலா கடைகளில் மைசூர் பாகு வாங்கிக் கொண்டு வந்தால் சலித்துக் கொள்வாள். கடை ஸ்வீட்டுகளை வாங்கினால் வீட்டில் செய்வதற்கு சிரமமான ஐட்டமாக இருக்க வேண்டும் என்பது அவள் பாலிஸி; அதனால் அவள் விருப்பப்படி என்ன தேரும் என்று நோட்டமிட்டேன். ஒன்றும் பிடிபடவில்லை.

இந்த ஆள் எதையாவது சட்டுபுட்டுனு வாங்கி நகர்ந்தால் தேவலை என்று தோன்றியது போலும். கடைப்பையன் ஒருவன் எக்கு தப்பாக ஆராய்ந்து கொண்டிருந்த என்னிடம் நெருங்கி "என்ன ஸார் வேணும்?" என்றான்.



தடிமனான வெண் சுருட்டு போல ஒரு அயிட்டம்; அதன் நடு மத்தியில் பச்சையாக ஒரு வட்டம் போல உருட்டி வைக்கப்பட்டிருந்த இனிப்பு சமாச்சாரத்தைச் சுட்டிக் காட்டி, விலை கேட்டேன். அவன் கீழே குனிந்து பார்த்து விட்டு, "காஜூ பிஸ்தா ரோலா?... கிலோ 800 ரூபா" என்றான்.

சட்டென்று "அரை கிலோ கொடு.." என்றேன். குறைந்த பட்சம் மூன்று ஐந்நூறு ரூபா நோட்டாவது கவுண்ட்டரில் தருவது நல்லது என்று தோன்றியது. அப்போத்தான் 'அந்த' நோட்டையும் மூன்றில் ஒன்றாகச் சேர்த்துத் தர வாகாக இருக்கும். அந்த ஞானத்தில், "அப்புறம் ஒரு கிலோ மிக்ஸர். ரிப்பன் பக்கோடா அரை கிலோ.;" என்று ஹோட்டல் சர்வர் போல விடுவிடு வேகத்தில் அடுக்கினேன்.

"ஸ்பெஷல் மிக்ஸராவே போட்டுடட்டுமா?" என்றான் பையன்.

"அதென்ன ஸ்பெஷல்?"

"ஸ்பெஷல்ன்னா அதிலே முந்திரிப்பருப்பெல்லாம் கணிசமா போட்டிருப்போம்.."

"ஓ. அப்படியா?.. ஸ்பெஷலாகவே போட்டுடு.."

"மூணாவது அயிட்டம் என்ன சொன்னீங்க?"

"ரிப்பன் பக்கோடா..." என்று கண்ணாடி தடுப்புக்குள் இருந்ததைக் காட்டினேன்.

"ஓ.. நாடாவா?" என்று நான் குறிப்பிட்டதைத் தெரிந்து கொண்டான் பையன்.

எனக்கோ 'அந்த' கரைபடிந்த ஐநூறு ரூபாய் நோட்டை வெகு சாமார்த்தியமாக மாற்றுவதிலேயே நினைப்பு பூராவும் மண்டிக் கிடந்தது. திட்டமிட்ட ப்ளான் படி நோட்டோடு நோட்டாக சேர்த்துக் கொடுத்து விட வேண்டும் என்பதே ஜபித்தலாக இருந்தது.

ஐந்தே நிமிஷம் தான். எடை மிஷினில் நிறுத்து பைகளில் போட்டு வாய்ப் பகுதியில் லேபிள் ஒட்டி, ஒரு பில்லை மட்டும் அதோடு பின் பண்ணி இன்னொரு பில்லை என் கையில் தந்து.... நான் கேஷ் கவுண்ட்டருக்கு வந்து விட்டேன்.

மொத்தம் ஆயிரத்து முன்னூறு ரூபா பில் தொகை.. மூன்று ஐநூறில் 'அந்த' நோட்டும் ஒன்றாக இருந்தால் பாக்கி இருநூறு வாங்கிக் கொண்டு லாலா கடை விட்டு லல்லல்லா பாடிக் கொண்டே தெருவுக்கு வந்து விடலாம் என்று மனம் வெகுவாக கணக்கு போட்டு தீர்மானித்திருந்தது.

## 2

கேஷ் கவுண்ட்டர் வந்ததும் டக்கென்று பேண்ட் பின் பாக்கெட்டிலிருந்த பர்ஸை எடுத்து முன்னாடியே ஏற்பாடுடன் பக்குவமாக மடித்து வைத்திருந்த ஐநூறு கொத்தை எடுத்து பில்லுடன் சேர்த்துக் கொடுத்தேன்.

கவுண்டரில் அமர்ந்திருந்தவருக்கு ஏகப்பட்ட அவசரம். இயந்திரம் மாதிரி நோட்டுகளை வாங்குவதும் பில் பார்த்து மீதிப் பணம் கொடுப்பதும் பில்லில் சீல் அடித்துக் கொடுப்பதுமாக இருந்தார். அந்த அவரசரத்திலும் நான் கொடுத்த நோட்டுகளை அசால்ட்டாக வாங்கியவர், அடுத்த நிமிடமே "ஐநூறு ஒன்று அதிகமாகக் கொடுத்திருக்கிறீர்களே! இந்தாருங்கள்.." என்று நான் கொடுத்த நோட்டுகளில் ஒன்றை என்னிடமே தந்து விட்டு, பில்லில் சீல் அடித்து இருநூறு ரூபாய் திருப்பிக் கொடுத்தார். மூன்று ஐநூறுக்கு நான்கு ஐநூறு கொடுத்து அதில் ஒன்றை திருப்பி வாங்கிக் கொண்ட அசட்டுத்தனத்தை என்னுள்ளேயே விழுங்கிக் கொண்டு சீலடித்த பில்லைக் காட்டி பையில் இட்ட பார்ஸல்களை வாங்கிக் கொண்டு கடைப் படி இறங்கி ரோடு பக்கம் வந்தேன். வெளி ட்யூப் லைட் வெளிச்சத்தில் கேஷ் கவுண்ட்டரில் கொடுத்த நோட்டைப் பார்த்தால், என் மூஞ்சி தொங்கிப் போனது. அட, ராமா! அந்த நெருப்பு சுட்ட நோட்டு என்னை விடவே விடாதா என்று எரிச்சலாக வந்தது.



வாழ்க்கையின் பாடங்கள் விநோதமானவை. எல்லா அழுத்தங்களையும் தாண்டி வருவது தான் வெற்றிக்கான புடம் போடுதலாம். எமர்ஸனோ நம்ம ஊர் ஜே.கே.யோ யார் சொன்னது என்று சட்டென்று நினைவுக்கு வரவில்லை. 'யாராயிருந்தால் என்ன, எவர் சொன்னார் என்பது முக்கியமில்லை; என்ன சொன்னார் என்பது தான் முக்கியம்' என்று இன்னொருவர் சொன்னது நினைவுக்கு வந்தது.

'இந்த சான்ஸ் போனால் என்ன, இந்த நோட்டை எப்படியாவது தள்ளி விட அடுத்த வழி என்னவென்று மனம் தீவிர ஆய்வில் சிக்கிக் கொண்டது.

"ஐயா.. பார்க்காதது மாதிரியே போறீங்களே! அஞ்சு ரூபா தர்மம் பண்ணி விட்டுத்தான் போங்களேன்..' என்ற குரல் வித்தியாசமாகப் பட்டு டக்கென்று நின்று விட்டேன்.

தரையில் விரித்த துண்டு; அதன் மேல் கொஞ்சம் சில்லரைக் காசுகள்.

சட்டென்று பொறி தட்டியது. 'இந்த பிச்சைக்காரன் துண்டில் அந்த நெருப்பு சுட்ட நோட்டைப் போட்டு விடலாமா?'. .. 'ஐய்யயோ.. ஐநூறு ரூபாயா?.. என்னதான் செல்லாத நோட்டு என்றாலும் ஐநூறு ரூபா தானம் அதிகபட்சம்' என்று புனர் ஆலோசனை தடுத்தது. எப்பப்பார்த்தாலும் என்னுள் இந்த ஆலோசனை-- புனர் ஆலோசனை யுத்தம் தான். சலித்துக் கொள்ளாமல் இரண்டு பக்கமும் காது கொடுப்பேன். இரண்டில் எதைத் தேர்ந்தெடுத்தாலும் தங்களுக்குள் சுணங்கிக் கொள்ளாமல் அடுத்த ஆலோசனை -- புனர் ஆலோசனைக்கு ரெண்டு பக்கமும் தயாராகி விடுவது தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கும்.

"என்னய்யா, யோசிக்கிறீங்க?.. தர்மம் பண்ணலாம்னு தீர்மானிச்சிட்டீங்கள்லே.. அப்புறம் என்ன தயக்கம்?"

அவன் பிச்சைக்காரன் போல எனக்குத் தோன்றவில்லை. வேண்டுமென்றே போகிற வருகிறவர்களை.... 'ஏதாவது candid camera டிவி ஷோவாக இருக்குமோ' என்று சுற்று முற்றும் பார்த்தேன்.. அதற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை.

"என்ன பாக்குறீங்க?.." என்றான்.

என்னத்தைச் சொல்வது என்று தெரியாமல் விழித்தேன்... இவனோடு என்ன பேச்சு கொடுத்துக் கொண்டு?.. டக்கென்று கடந்து விடலாமா என்ற எண்ணம் என்னை ஆட்கொண்டது.

"ஒரு அஞ்சு ரூபா கொடுக்கறத்துக்கு என்ன யோசனை பாருங்க.." என்றான் அவன். உண்மையிலேயே அவன் அப்படிச் சொன்னது தான் என்னை வழிநடத்தியது போல உள்ளுணர்வில் ஒரு கிளர்ச்சி.

அனிச்சை செயலாய் என் கை பேண்ட் பாக்கெட்டுக்குப் போய் பர்ஸை எடுத்தது.. ஐந்து ரூபாய் நோட்டு இல்லை; பத்தாய்த் தான் இருந்தது. அதில் ஒரு நோட்டை எடுக்கும் பொழுது பர்ஸிலிருந்து இன்னொரு நோட்டு நழுவி அவன் தரையில் விரித்திருந்த துணியில் விழுந்தது.

நான் சுதாரிக்கும் முன் துணியில் விழுந்த நோட்டை அவன் பார்த்து விட்டான் போலும்.. "அட ஐநூறு!.." என்ற வியப்புடன் அவன் விழிகள் விரிந்தன... அந்த நோட்டை குனிந்து எடுத்தான். அடுத்த வினாடியே "தர்மம் என்றால் பத்து ரூபாயே அதிகம்.. எனக்கு அது போதும்.. இதை நீங்களே வைச்சிக்கங்க.." என்று தன் கைப்பட்ட ஐந்நூறு ரூபாய் நோட்டை என்னை நோக்கி நீட்டினான். மேலோட்டமான பார்வைக்கே நெருப்பு சுட்ட நோட்டு அது என்று எனக்குத் தெரிந்து விட்டது.. என்னை அறியாமல் என்னை விட்டுப் போயும் திருப்பித் திருப்பி என்னிடமே வருகிறதே அது என்று எனக்கு ஆயாசமாக இருந்தது. இந்தத் தடவை இந்த பிச்சைக்காரன் 'நீங்களே வைச்சுக்கங்க' என்று ஏதோ அவன் எனக்குக் கொடுக்கிற மாதிரி... 'அந்த' ஐநூறை என்னிடமே கொடுத்து விட்டான். பர்ஸிலிருந்து எடுத்த பத்து ரூபாயை துணியில் போட நான் எத்தனிக்கும் போது, பதறுகிற மாதிரி அவன் சொன்னான்.. "வேணாம், வேணாம்.. சாயரட்சைக்கு முதல் தர்மம்.. நீங்க தான் போணி பண்ணியிருக்கீங்க.. கையிலேயே கொடுத்திடுங்க.." என்று கேட்டு வாங்கிக் கொண்டான்.

"முதல் தர்மமா?.. அப்போ துணிலே கிடக்கற காசெல்லாம்?;"

"என்னது தான். என் காசு தான்.. என்ன செய்யறது?.. மத்தவங்க போடறதுக்கு நானே போட்டுக்கிட்டு வழிகாட்ட வேண்டியிருக்கு.." என்றான். சரியான ஆளாய் இருப்பான் போலிருக்கே....

எனக்கு அவனைப் பிடித்துப் போய் விட்டது. அதைத் தெரியப் படுத்தும் விதமாக லேசாகப் புன்னகைத்தேன்..

அவன் சிரித்ததும் அழகாய்த் தான் இருந்தது. "இதோ பாருங்க.. நீங்க கொடுத்த காசை உங்களுக்கு நேரேயே என்ன செய்கிறேன், பாருங்க.." என்று சொல்லி விட்டு அடுத்த தப்படியில் இருந்த டீக்கடைக்கு விரைந்தான்.

'என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்.. அந்த நெருப்பு சுட்ட நோட்டு தானாக வலிய அவன் துண்டில் விழுந்தும் என்னிடமே திருப்பி வந்து விட்டதே!' என்ற எண்ணமே என் மனசில் வண்டாய் குடைந்து கொண்டிருந்தது.

நான் கொடுத்த பத்து ரூபாய் நோட்டை டீக்கடைக்காரரிடம் கொடுத்து விட்டு திரும்பி என்னைப் பார்த்து அவன் கையசைப்பது தெரிந்தது.

நானும் அனிச்சையாய் அவனைப் பார்த்து கையசைத்து விட்டு நகர்ந்தேன். ஒரு பிச்சைக்காரனும் நானும் கையசைப்புகளைப் பகிர்ந்து கொள்வதை ரோடில் போகிற ஒரு ஆள் நின்று நிதானித்து பார்த்து விட்டு நகர்ந்தான். 'என்ன ஜென்மங்கள் இதுகள்!' என்று நினைத்திருப்பானோ?..

தெருவின் கோடியில் கோயில் கோபுரம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததைப் பார்த்த ஷணத்தில் பேசாமல் கோயில் உண்டியலில் 'அந்த' ஐநூறைப் போட்டு விடலாமா என்று லேசான கீற்று போல சிந்தனை எழுந்ததும் 'என்ன இருந்தாலும் இது செல்லாத நோட்டு; இருக்கிற பாவம் போதாதா, இதை வேறு உண்டியலில் போட்டு இன்னும் சேர்த்துக் கொள்ள வேண்டுமா?' என்று மாற்றுச் சிந்தனை ஒரே போடாகப் போட்டு என்னை அடக்கி விட்டது. பாண்ட் பாக்கெட்டில் நுழைந்து பர்ஸைத் தொட்ட கையை வெடுக்கென்று வெளியே இழுத்துக் கொண்டேன்.

சன்னதித் தெருவிலேயே ஜானு கேட்ட வெற்றிலையை வாங்கி கொண்டேன். பக்கத்து நாட்டு மருந்து கடையில் ஜாதிக்காய் பாக்கெட் ஒன்று வாங்கிக் கொண்டேன். ஜாதிக்காயை சின்னச் சின்ன துண்டுகளாக்கி அப்பப்போ வாயில் அதக்கி கொண்டிருப்பது மனசுக்குப் பிடித்த ஒரு பழக்கமாகவே ஆகிப் போய்விட்டது.. வெற்றிலையும் ஜாதிக்காயும் சில்லறை செலவுகள் ஆகையால் அந்த நோட்டை வெளியே எடுக்கவே வழியில்லாது போய் விட்டது.

வீடு படியேறி வெளி வாசலில் செருப்பைக் கழட்டி விடும் போதே ஜானகி வாசலுக்கு வந்து விட்டாள். "எங்கேயாவது போனீங்கன்னா, இன்ன இடத்துக்குப் போறேனுட்டு சொல்லிண்டு போக மாட்டீங்களா?.. போய் எவ்வளவு நேரமாச்சுன்னு நா கவலைலே உக்காந்திருக்கேன்.." என்று
கடுகடுத்தாள்.

தோளில் தொங்கிக் கொண்டிருந்த ஜோல்னாப் பையைப் பார்த்ததும் "இந்த வெயிட் வேறையா?.." என்று லேசான புன்னகையுடன் வாங்கிக் கொண்டாள். அந்தப் புன்னகையில் ஒரு சந்தோஷம் பளிச்சிட்டது என் கழுகுக் கண்களுக்குத் தப்பவில்லை. நடு ஹாலிலேயே பையின் உள்ளே இருந்த பார்ஸல்களைப் பார்த்த சந்தோஷத்தில், "என்னன்னா.. முரளி கடைக்குப் போயிருந்தேளா?" என்று மலர்ந்தாள்.

அந்த நெருப்பு சுட்ட நோட்டு சரித்திரத்தை இவளிடம் சொல்லலாமா என்று தோன்றியது.. 'ஏற்கனவே அவள் பார்வையில் இருக்கும் இளிச்சவாயன் அந்தஸ்த்தை இன்னும் கூட்டிக் கொள்வானேன்?' என்று பேசாமல் இருந்து விட்டேன். கடைத்தெருவில் அந்த செல்லா நோட்டை கை கழுவுகிறேன் பேர்வழி என்று ஒரு ரவுண்ட் அடித்ததும் மட்டுமல்லால் ஆயிரத்து நானூறு ரூபாய் செலவானது தான் நெட் ரிசல்ட் என்று உறைத்தது..

இத்தனை அயர்ச்சிக்கும் நடுவே 'நோட்டோடு நோட்டாக பதுக்கி வைத்து விட்டால் இதற்கென்று தனியே பிரயத்தனப்படாமல் என்னை அறியாமலேயே யாருக்காவது கொடுத்து விடுவேன்' என்ற அசாத்திய நம்பிக்கை இருந்தது தான் விசேஷம்.

பீரோ லாக்கரைத் திறந்து பிளாஸ்டிக் டப்பாவுக்குள் மற்ற ஐநூறுகளுக்கு நடுவில் 'அதையும்' செருகி வைத்தேன்.

"காஜூ பிரமாதம்ன்னா... எப்படித்தான் இவ்வளவு டேஸ்ட்டா செய்யறான்னு தெரிலே.. ?" என்று ஹால் பக்கமிருந்து ஜானகியின் குரல் கேட்டது.

'எல்லாக் கவலையும் எனக்குத் தான் போலிருக்கு. ஜானு மாதிரி எல்லாத்தையும் அனுபவித்து சந்தோஷிக்க எனக்கு ஏன் தெரிவதில்லை?' என்று யோசனை ஓடியது. 'ரொம்ப யோசிச்சையானா இதுவே இன்னொரு கவலையாகி உன்னை அரிக்க ஆரம்பித்து விடும்' என்று புனர் யோசனை ஜாக்கிரதைபடுத்த 'இயல்பாகத் தானே இருக்கிறேன்' என்று என்னை நானே உற்சாகப்படுத்திக் கொண்டு ஹாலுக்கு வந்தேன்.

"அது என்ன எப்பப் பாத்தாலும் ஒரு யோசனை?" என்று ஜானு கண்ணைச் சாய்த்து என்னை ஆராய்கிற மாதிரி பார்த்தாள். அவள் பார்வையே ஆயிரம் சேதி சொன்னது. எனக்கு ரொம்ப ரொம்ப நெருக்கமாக வந்து, இடது கையால் ஆதரவாக என் தோளில் விரல்களைப் பதித்தபடி, "ஆ திறங்கோ...." என்று காஜூவை உதட்டில் உரசினாள்.

வாய் மட்டுமில்லை, உடம்பெல்லாம் இனித்தது. எந்தக் காலத்திலோ ரசித்த பாடல் அட்சரம் பிசகாமல் மனசில் ஓடியது. 'எல்லாம் இன்ப மயம்.. புவிமேல்..,..' உடுமலை நாராயண கவி எடுத்துக் கொடுக்க, எம்எல்வி அற்புதமாய் மனசில் இசைத்தார். உடம்பில் விதவித ராகங்களின் மீட்டல் புல்லரிப்பை ஏற்படுத்தியது.

## 3

**பொழுது விடிந்து சோம பானம் உள்ளே சென்ற பிறகு எக்னாமிக் டைம்ஸ் அரை மணி நேரத்திற்கு என்னை படாத பாடு படுத்தி விடும். ஷேர் மார்க்கெட் நிலவரம் என்றாலே**

பொடி எழுத்துக்கள் தான். இதற்காகவே ஒரு பூதக்கண்ணாடி வைத்திருக்கிறேன்.. பெரும்பாலும் NSE-யில் தான் என் இன்வெஸ்ட்மெண்ட் எல்லாம்.

ஷேர் மார்க்கெட் துவங்குவதற்கான ஆரம்ப பெல் இசைக்கும் போதே டிவி முன்னாலே பேப்பர் பேடும் பேனாவுமாய் உட்கார்ந்தாச்சு. அசோக் லேலாண்ட் 15 ரூபா என்று 1000 ஷேர் வாங்கிப் போட்டிருந்தேன். இந்துஜா க்ரூப்பின் மேல் ஒரு நம்பிக்கை இருந்தாலும் 20-யைத் தாண்டாத அதன் அழிசாட்டியத்திற்கு அளவே இல்லாமல் இருந்தது. நேத்திக்கு 25 ரூபா இருந்த போது ஒழிச்சுக் கட்டிடலாம்ன்னு தோணித்து.. நல்ல வேளை, விக்கலே.

இன்னிக்கு பார்த்தா 45 ரூபா. நம்பவே முடியலே. அசோக் லேலாண்டின் சரித்திரத்தில் உட்சபட்ச ஏற்றம். விற்று விட வேண்டுமென்ற தீர்மானம் உருப்பெற்று ஃபோனை எடுத்து பாண்டி பஜார் ப்ரோக்கர் ஆபிஸைக் கூப்பிட முயன்றால் நம்பர் எங்கேஜ்டாக இருந்தது.. இன்னும் இரண்டு எண்கள் உண்டு. இன்னொரு எண்ணுக்கும் அதே நிலை. மூன்றாவது எண்ணுக்கு ரிங்கே போகவில்லை. ச்சை! பதட்டம் கூடியது.

45 ரூபா 43-க்கு இறங்கிய பொழுது எரிச்சலாக வந்தது. ஷேருக்கு இரண்டு ரூபான்னா ஆயிரம் ஷேருக்கு 2000 ரூபா. இரண்டே நிமிஷங்களில் இரண்டாயிரத்தை விட்டுக் கொடுப்பதா என்ற பதட்டத்தின் ஊடே, 43 ரூபா 40-க்குப் போன போது தொய்ந்து போனேன். சரி, வந்த வரைக்கும் லாபம் என்று ப்ரோக்கர் ஆபிஸைக் கூப்பிட்ட பொழுது தொலைபேசியில் ரிங் போய்க் கொண்டே இருந்தது.

'சீக்கிரம் எடுத்துத் தொலைங்கய்யா..' என்று மனம் அரற்றியது.. எஸ். ப்ரோக்கர் ஆபிஸில் ஃபோனை எடுத்து விட்டார்கள். தொடர்பு கிடைத்த சந்தோஷத்தில், "ஜீவி பேசறேன்.. அசோக் லேலாண்ட் 1000 ஷேர் செல்லிங்.." என்று சொல்லிக் கொண்டே இருக்கையில் தொலைக்காட்சித் திரையில் அசோக் லாண்ட் விலை 50 என்று பளிச்சிட்டு அம்புஜா சிமிண்ட்.. அப்பல்லோ என்ற சுற்றலுக்கு நடுவே... "ஜீவி சார்.. உங்க நம்பர் வி--56 தானே.. அசோக் லேலாண்ட் 52-லே இருக்கு. 1000 ஷேர் தானே, வித்துடலாமா?" என்று குமரன் குரல் கேட்டது. "எஸ். குமரன்.. கொடுத்துடுங்க.." என்று நான் சொல்லி முடிக்கும் போது, "52.50--க்கு கொடுத்தாச்சு ஸார்.." என்றார் குமரன். "தேங்க்யூ.. குமரன்.." என்று முகம் மலர ஃபோனை வைத்தேன்.

'இரண்டு வாரத்திற்கு முன் 15-க்கு வாங்கினதை 52.50-க்கு வித்தாச்சு. ப்ரோக்கரேஜூக்கு 2-50 போனாலும் ஷேருக்கு 35 ரூபா தேறியிருக்கு. இரண்டே வார இடைவெளியில் 35000 ரூபா லாபம்' என்று மனம் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கையில் கண்கள் தொலைக்காட்சி சேனலில் ஷேர் விலைகளின் ஓட்டத்தில் நிலைக்குத்தியிருந்தன. எல் அண்ட் டி என்றுமில்லாத குறைச்சல் விலையில் ரூ.700-ல் இருந்தது. டாடா ஸ்டீல் ரூ.80/- டி.ஸி.எஸ். 800/- என்று எல்லாமே இறக்க விலையில். 'என்ன ஆயிற்று

இன்றைக்கு?.. வழக்கமா ஜானகி முகத்திலே தானே முழிப்போம்?' என்ற சந்தோஷத்தினூடே உற்சாகமானேன்.

வந்த லாபம் முப்பஞ்சாயிரத்தை எல் அண்ட் டி-க்கும் டிஸிஎஸ்ஸூக்கும் பகிர்ந்தேன். அந்த வியாபாரத்தை முடித்து விட்டு, "ஜீவி ஸார்.. டாக்டர் ரெட்டி லாப் வேணுமா? இறங்கு முகத்தில் தான் இருக்கு.. லோயஸ்ட்டு ரேட் இன் தி லாஸ்ட் 24 வீக்ஸ்.." என்றார் ராவ்.

"கொஞ்ச நேரம் பாத்துட்டு சொல்றேன், ராவ்ஜி.." என்றேன். ராவ் இன்னொரு ஊழியர். பல நேரங்களில் சரியான ஆலோசனைகள் சொல்லி வழி காட்டியிருக்கிறார்.

ஒரு பிடி கிடைக்கவில்லை. ஏறுவதும் இறங்குவதுமாக மார்க்கெட் இருந்தது. 'இன்னிக்கு இது போதுமோ?' என்ற நினைப்புக்கு எதிர் குரலே உள்ளுக்குள் இல்லாமல் இருந்தது.

"போச்சு.. டிவி முன்னாடி உக்காந்தாச்சா?.. கூப்பிட்டா கூட காதுலே விழாதே?.. தட்டு போடட்டுமா?" என்று கேட்டுக் கொண்டே ஜானு என் ரூமுக்குள் வந்தாள்.

"ஜானு இன்னிக்கு 35000 லாபம்.. எவன் தருவான், சொல்லு., டிவி முன்னாடி உக்காந்தாச்சான்னு சலிச்சுக்கிறியே?" என்றேன்.

"இன்னிக்கு லாபம் சரி.. நேத்திக்கு 20000 நஷ்டம்ன்னீங்களே. இந்த முப்பஞ்சாயிரத்திலே அந்த 20000த்தை கழிச்சிக்க வேண்டாமா?" என்றாள் ஜானு.

"பங்குச் சந்தையே அப்படித்தான் ஜானு. லாபம் வரும் பொழுது சந்தோஷிக்கறதும், நஷ்டம் வரும் பொழுது அதை ஈடுகட்ட இன்னும் இன்வெஸ்ட்மெண்ட் பண்றதும்.. 'ஷேர் விலை குறைஞ்சா வாங்கு; கூடினா வித்துடு'ங்கற சுலபமான தாத்பரியம் தான். கூடினா இன்னும் கூடுமோன்னு எதிர்பார்க்கிறோம். இறங்கினா மட்டும் இன்னும் இறங்கிடுமோன்னு பயந்திண்டு வித்திடறோம். இரண்டையும் சமமா பாவிக்கிறத்துக்கு மனசு ரெடியாச்சுனா ஜெயித்துக் கொண்டே இருக்கலாம்.." என்றேன்.

"எதைச் சொல்லு.. அதுக்கு ஒரு தத்துவ விளக்கம்.. என்னிக்குத் தான் இந்த குணம் உங்களை விட்டுப் போகப் போறதோ தெரிலே.." என்று ஜானு தோளில் முகத்தாடையை இடித்துக் கொண்டு நழுவினாள். சரியான கில்லாடி.. அப்படி நழுவலேனா அந்த 35000 லாப சந்தோஷத்தில் தலை கால் புரியாமல் தான் நான் ரீ ஆக்ட் பண்ணுவேன்னு அவளுக்கு தெரிஞ்சுதான் இருக்கு.

"தட்டுப் போட்டாச்சு.." என்று ஜானுவின் அறிவிப்பு இங்கு கேட்டது. எழுந்திருந்தேன்.

மாலையில் ப்ரோக்கர் ஆபிஸிலிருந்து முத்து கூப்பிட்டார். எல் அண்ட் டி, டிஸிஎஸ் வாங்கிய கணக்கில் எவ்வளவு பணம் நான் செலுத்த வேண்டும் என்று சொன்னார். குறித்துக் கொண்டு உடனே அதற்கான தொகையை ஆன்-லைன் டிரான்ஸ்வரில் ப்ரோக்கர் ஆபிஸூக்கு அனுப்பி வைத்தேன்.

அடுத்த நாள். இன்னிக்கு எப்படியும் 'அந்த' நோட்டை செலாவணியாக்கி விடவேண்டும் என்ற உத்வேகம் காலை பல் தேய்க்கும் பொழுதே மனசில் உருக்கொண்டது.

அதனால் சோமபானம் அருந்தியதும் பீரோவைத் திறந்து பிளாஸ்டிக் டப்பாவுக்குள் நோட்டோடு நோட்டாக வைத்திருந்த 'அந்த' நோட்டை பர்ஸூக்கு மாற்றினேன். அந்த நோட்டுக்குத் துணையாக இன்னும் நான்கு ஐநூறு நோட்டுகளை எடுத்து வைத்துக் கொண்டேன். பீரோவிலிருந்து பர்ஸூக்கு பணத்தை மாற்றி விட்டேன் என்றால் அந்தப் பணம் வெளிச்செலாவணிக்கானது என்பது என்னைப் பொருத்த மட்டில் தீர்மானமான ஒன்று. வெளியே கிளம்பும் பொழுது ஞாபக மறதியில் காலி பர்ஸூடன் கிளம்பி விடாமலிருக்க இந்த முன் ஏற்பாட்டை செய்து விடுவது என் வழக்கம்.




டிவியில் மார்க்கெட் சுறுசுறுப்பாக ஆரம்பித்து விட்டது. கொஞ்ச நேரத்திலேயே அதல பாதாளத்திற்கு ஷேர்களின் விலை இறங்கிய பொழுது நேற்று வாங்கிய எல் அண்ட் டி-யை நல்ல விலை வந்தால் இன்று விற்று விடலாம் என்ற கணக்குக் கோட்டை தகர்ந்தது. டிஸிஎஸ்ஸூம் சேர்ந்து இறங்கிய பொழுது சமாளிக்க முடியாத நஷ்டம் கணக்கு போட்டுப் பார்த்த பொழுது தெரிந்தது. இதை சமாளிக்க வேண்டுமானால் இந்த இரண்டிலும் இன்னும் கொஞ்சம் வாங்கிப் போட வேண்டும்.

ஷேர் ஆபிஸைக் கூப்பிட்ட பொழுது முத்து தான் லயனில் வந்தார். விஷயத்தைச் சொன்னேன். அடுத்த ஐந்து நிமிடங்களில் எல் அண்ட் டி, டிஸிஎஸ் இரண்டிலும் தலைக்கு 50 வாங்கியாச்சு. நேற்று வாங்கிய விலையில் பாதிக்கும் குறைந்த விலையில் இன்று வேலை முடிந்தது. கைவசம் இருக்கும் மொத்த ஷேர்களின்

விலை மதிப்பை அன்றைய தேதி விலையில் கணக்கிட்டேன். கிட்டதட்ட மூன்று இலட்ச ரூபாய் மதிப்பில் இருந்தது. இந்த அளவே போதும் இதற்கு மேல் இன்வெஸ்ட் பண்ண வேண்டாம் என்று தீர்மானித்தேன்.

மாலையில் ப்ரோக்கர் ஆபிஸுக்கு பணத்தை ஆன்லைனில் அனுப்பி விட்டு ப்ரோவைத் திறந்த பொழுது தான் தோன்றியது. இன்றைக்குத் தான் வெளியே போகவில்லையே என்று பர்ஸிலிருந்த ஐந்நூறுகளை பிளாஸ்டிக் டப்பாக்குள்ளேயே வைத்தேன்.



அடுத்த நாள் நடந்தது தான் அதிசயம். என்ன மாயம் நடந்ததோ தெரியவில்லை, ஷேர்களின் விலை கிடுகிடுவென்று ஏற ஆரம்பித்தன. நாள் பூராவும் இறக்கமில்லை. மதியம் இரண்டரை மணி வாக்கில் உச்சத்தைத் தொட்டன. எனக்கு ஏற்பட்ட குஷியில் குமாருடன் தொடர்பு கொண்டு கைவசம் இருந்த அத்தனை ஷேர்களையும் விற்று விட்டேன். நல்ல லாபம். 'நகரத்தில் எங்கே நரி முகம், விழிக்க?' என்று ஆச்சரியமான ஆச்சரியம்.

அந்த நோட்டு என்னிடம் வந்த தருணத்திலிருந்து நடந்தவைகளை யோசித்துப் பார்த்தேன். வங்கியில் கொடுத்த நோட்டுகளோடு நோட்டாகத் தான் அந்த நோட்டும் என்னிடம் வந்தது. நெருப்பு சுட்ட நோட்டு என்றதும் முரளி லாலா கடையில் அதை கைகழுவப் பார்த்தேன். என் திட்டம் பலிக்கவில்லை.. என்னிடமே தான் திரும்பி வந்தது. அடுத்து அந்த பிச்சைக்காரனுக்கு பத்து ரூபா கொடுக்க பர்ஸைத் திறக்கும் பொழுது இந்த நோட்டு அவன் தரையில் விரித்திருந்த துணியில் விழுந்து.... விழுந்து?...

நடந்ததை நினைவில் புரட்டிப் பார்க்க விஷயம் புரிபட்டுப் போனது.. 'தர்மம் என்றால் பத்து ரூபாயே அதிகம்.. இதை நீங்களே வைச்சிக்கங்க..' என்று துணியில் விழுந்ததை தன் கையால் எடுத்து என்னிடமே தந்தானே..' என்று நினைவு ஓடியது... அப்படியானால்... அப்படியானால்... 'அந்த' நோட்டில் அவன் கைபதிந்த அதிர்ஷ்ட்டம் தானா இது? நிறைய ரூபாய் நோட்டுகளுடன் இது சேர்ந்து இருக்கும் பொழுது நான் வாங்கிய ஷேர்களின் விலைகள் மட்டும் ஏறி கங்கை வெள்ளம் போல நோட்டு வெள்ளமாய் பெருகுகிறது... அந்த நோட்டுக் கத்தையிலிருந்து இந்த நோட்டை

பிரித்தெடுத்து வேறு இடத்திற்கு மாற்றி விட்டால் ஷேர்களின் விலைகள் குறைந்து நஷ்டம் ஏற்படுகிறது.. 'அந்த' நோட்டை இப்படி மாற்றி மாற்றி வைப்பதின் மூலம் என்னைப் பொறுத்த மட்டில் என்னிடம் இருக்கும் ஷேர்களின் விலைகளை ஏற்றலாம்; குறைந்த விலைக்கு வாங்கவும் செய்யலாம் என்று புரிபட்டுப் போனது. இரகசியத்தை கண்டு பிடித்த ஜோரில் 'யுரேகா!..' என்று என்னை அறியாமல் கத்தி விட்டேன்.

"ஏதோ சப்தம் கேட்ட மாதிரி இல்லை?' என்ற ஜானு இங்கேயும் அங்கேயும் பார்த்தபடி உள்ளே நுழைந்தாள்.. என்னைப் பார்த்து, "நீங்களா கூவினது?" என்று ஒரு மாதிரி என்னைப் பார்த்தாள்.

ஜானுவின் நெருக்கத்தில் கை பரபரத்தது.. "என்ன சொன்னே? கூவினதா?.. இந்த பாஷைலாம் எங்கேயிருந்து கத்துக்கறே?" என்று அவள் கை பற்றினேன்.

"வயசு ஏற ஏற முரட்டுத்தனமும் கூடற மாதிரித்தான் இருக்கு..." என்று நெளிந்தாள். "அந்த ரெண்டு டப்பாவையும் ஒளிச்சு வைச்சிட்டா எல்லாம் சரியாயிடும்.." என்று நழுவப் பார்த்தாள்.

"எந்த ரெண்டு டப்பாவை?" என்று கைப்பிடியை விட்டேன்.

"அதான்.. அந்த ஜாதிக்காய் டப்பாவையும், பாதாம் பருப்பையும்... "

"நீ வைச்சிக்கிற ஜாதி மல்லிகையை விட்டுட்டையே?" என்றேன்.

"பாத்தேளா.. பூன்னதும் தான் ஞாபகம் வர்றது.. பூக்காரிக்கு காசு கொடுக்கணும்.. ஒரு இருநூறு ரூபா கொடுங்கோ.," என்றாள். ஜானுவுக்கு பணத்தை எடுத்துக் கொடுக்கும் பொழுதே ஞாபகமாக அந்த நெருப்பு சுட்ட நோட்டை யாருக்கும் கொடுத்து விடக்கூடாது என்று பிளாஸ்டிக் டப்பாவிலேயே நோட்டோடு நோட்டாக பத்திரப்படுத்தினேன்.

முகம் அலம்பித் துடைத்து என்னை அலங்கரித்துக் கொள்ளும் போதே, "எங்கே வெளிலே கிளம்பறேளா?" என்றாள் ஜானகி.

"ஆமாம். உனக்கு என்னமானும் வேணுமா?"

"அந்த முரளி கடைப்பக்கம் போனா ஏதாவது ஸ்வீட் வாங்கிண்டு வாங்கோ.." என்று பட்டும் படாதது மாதிரி சொன்னாள்.

"நான் வாங்கிண்டு வர்றது இருக்கட்டும்; உனக்கு என்ன வேணும், அதைச் சொல்லு." என்றேன்.

"சொல்றேன்.. ஆனா அதை வைச்சு வேறே ஏதானும் ப்ளான் போடக் கூடாது.. தெரிஞ்சதா?" என்று எனக்கும் அவளுக்கும் தெரிஞ்ச விஷயத்திற்கே கொக்கி போட்டாள்.

"சரி.. நீ சொல்லு.." என்று புன்முறுவலுடன் சொன்னேன்.

"காஜூலே கொஞ்சம் வாங்கிக்கோங்க.. அப்புறம் திரட்டிப்பால் கொஞ்சம்.. அப்புறம்?.."

"அப்புறம்?.."

"உங்களுக்கு எதெல்லாம் பிடிக்குமோ அதெல்லாம். நம்ம ரெண்டு பேருக்கும் பிடிச்சதெல்லாம் கலந்து இருக்கட்டும்.. என்ன?" என்று குழைவாகச் சொன்னாள்.

"நீ கேட்டு நான் வாங்கிண்டு வராம இருந்திருக்கேனா?.. சொல்லு.." என்று இணக்கமான ஒரு அஸ்திரத்தைப் பிரயோகித்து விட்டு, உடைமாற்றி, ஞாபகமாக பர்ஸை எடுத்துக் கொண்டு கிளம்பினேன்.

## 4

இனிப்புகளோடு சேர்த்து என்னத்தைத் தடவித் தருகிறானோ தெரியலே, முரளி ஸ்வீட் ஸ்டாலில் வழக்கம் போலவே நெரிசல்.

அந்த ஜெகஞ்ஜோதியில் நானும் ஐக்கியமானேன். போனதடவை வந்த பொழுது எனக்கு சப்ளை செய்த பையன் அந்தக் கூட்டத்தில் என்னைப் பார்த்ததும் அடையாளம் தெரிந்து கொண்டு புன்முறுவலுடன், "என்ன, ஐயா, வேணும்?" என்று பரிவுடன் கேட்டான்.

"காஜூ ரோல் தான்.." என்றேன். "அரைக்கிலோ கொடுத்துடு.." குனிந்து, கையுறை பூண்ட கையால் எடை மிஷினில் காஜூவை எடுத்து வைத்துக் கொண்டே, "அப்புறம், ஐயா?"

"திரட்டிப்பால் இருக்கா?"

"ஓ.. " என்று ஒரு டப்பாவை எடுத்து வைத்தான். "அரைக்கிலோ பேக்.." என்றான்.



"அப்புறம் பேரிச்சை சத்து உருண்டை வைத்திருப்பீர்களே.." என்று நான் கேட்கும் போதே, " இருக்கே.. எவ்வளவு ஐயா?"

"அதுவும் அரைக்கிலோ தான்.."

அதையும் எடை போட்டு பேக் செய்தான். "அப்புறம், ஐயா?"

'நன்றி சொல்ல வேண்டும் இறைவனுக்கு..' என்று கடை மியூஸிக் ஸிஸ்டம் எதிலிருந்தோ மனசை கிறங்கடிக்கும் பாடல் வழிந்து கொண்டிருந்தது.. 'அரை கிலோ ஸ்பெஷல் மைசூர் பாவும், அரைக்கிலோ ஸ்பெஷல் மிக்ஸரும் சேர்த்துக்கோ.. இந்த இரண்டை மட்டும் தனிப்பையில் போட்டுத் தந்தடுப்பா. ஒரு நண்பருக்குக் கொடுக்க வேண்டும்" என்றேன். திடீரென்று மனசில் உதித்த எண்ணமாய் போகிற வழியில் ஞாபகமாக தனிப்பையை அந்தப் பிச்சைக்காரரிடம் கொடுத்து விடும் என்று மனசில் தீர்மானம் உருபெற்றது.

"சரிங்க, ஐயா.. வேறே?.."

"இந்த மட்டும் போதும்.." என்று முடித்துக் கொண்டேன். பில் போட்டு பையிலிட்டு, என் கையிலும் பில்லின் பிரதி ஒன்றைக் கொடுத்தான். மொத்தம் ரூ.1400/-.

பணம் கொடுக்கக் கூட க்யூ தான். க்யூவில் என்னையும் இணைத்துக் கொண்டேன். எனக்கு முன்னால் இருப்பவர்கள் ஆறோ, ஏழோ.

போன தடவை முரளி கடைக்கு வந்த பொழுது அந்த நெருப்பு சுட்ட நோட்டை எப்படியாவது கைகழுவி விட வேண்டும் என்ற எண்ணத்தில் நோட்டோடு நோட்டாக அதையும் சேர்த்து எடுத்து வந்தது நினைவுக்கு வந்தது. இப்போதோ 'அந்த' நோட்டு என் கைவிட்டுப் போய்விடக்கூடாது என்று பத்திரப்படுத்தி வைத்திருப்பதை நினைத்து மனசில் இயல்பாக ஒரு புன்முறுவல் விகசித்தது.

டெலிவரி கவுண்ட்டரில் பைகளைப் பெற்றுக் கொள்ளும் பொழுது மைசூர்பா, மிக்ஸர் அடங்கிய சின்னப் பையை மட்டும் தனியாக எடுத்து வைத்துக் கொண்டேன்.

கடையை விட்டு வெளி வரும் பொழுது வெளிக்காற்று ஜில்லென்று சுகமாக இருந்தது.. இதோ அடுத்த தெரு தான். அந்த நல்ல ஆத்மாவிற்காக நான் கொடுக்கவிருந்த பரிசு மனசுக்கு இதமாக இருந்தது.

குறிப்பிட்ட அந்த இடத்தில் அந்தப் பிச்சைக்காரரைக் காணோம். பின்புலமாய் இருந்த அந்த டீக்கடையின் பின் பக்கத்தில் சுவரை இடித்து ஏதோ கட்டுமான வேலை நடந்து கொண்டிருந்தது.

டீக்கடைக்காரரிடம் விவரம் கேட்கலாம் என்று கடையை நெருங்கும் பொழுது, "என்னடா, எப்படியிருக்கே? " என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். பாலா!. . உள்ளூரில் தான் இருக்கிறான் என்று பேரு. பார்த்து எவ்வளவு நாளாச்சு?..

"டீ போடச் சொல்லட்டுமா?" என்றான், நான் அருகில் வந்ததும்.

"சொல்லேன்.." என்றேன்.

இரண்டு பேரும் ஒதுக்குப்புறமாக இருந்த ஒரு பெஞ்சில் அமர்ந்தோம். "ஜங்ஷனில் தானே இருக்கே?" என்றேன்.

"ஆமாம். முன்பெல்லாம் டவுனுக்கு அடிக்கடி வருவேன். அதனால் அப்பப்போ பார்த்துக் கொண்டோம். இப்போ வந்ததே இதுக்காகத் தான்." என்று அந்த டீக்கடையின் கட்டுமானப் பணிகளைச் சுட்டிக் காட்டினான்.

"என்ன சொல்றே?,, எனக்குப் புரியலே.." என்றேன்.

"இந்த டீக்கடையை பின்பக்கம் நீட்டி, ஒரு சின்ன ஹோட்டல் போல ஆக்கப் போகிறார்கள். இந்தக் கட்டுமான பணிக்கு நான் காண்ட்ராக்ட் எடுத்திருக்கிறேன். மேற்பார்வையிடுவதற்காகத் தான் வந்தேன்.." என்றான்.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்.." என்றேன். "சில நாட்களுக்கு முன் கூட நான் இந்தப் பக்கம் வந்தேன்.. அப்போ.." என்று நாங்கள் அமர்ந்திருந்த இடத்திற்கு சற்றுத் தள்ளி ஓரிடத்தைக் காட்டி, "அந்த இடத்லே பிச்சைக்காரன் ஒருத்தன் துண்டை விரித்து உட்கார்ந்திருந்தான்.. இப்போ என்னவோ அவனைக் காணோம்.." என்றேன்.

"ஓ! அப்போ அந்தப் பிச்சைக்காரனை நீ பார்த்து இருக்கே, இல்லியா?" என்று ஏதோ யோசனையுடன் இழுத்தான்.

"ஆமாம். பார்த்திருக்கிறேன். அவனை உனக்குத் தெரியுமா?" என்றேன். அவனுக்காகத் தான் கையில் ஸ்வீட் பையைச் சுமந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்லவில்லை.

"அந்தப் பிச்சைக்காரன் தான் நான் சொல்லப் போற விஷயத்துக்கு ஹீரோ.. அதை அப்புறம் சொல்றேன்.. நீ சொல்ல வந்ததைச் சொல்லு.." என்றான்.

"அன்னிக்கு அவன் என்னிடம் ஏதாவது தர்மம் பண்ணக் கேட்ட பொழுது பத்து ரூபாய் கொடுத்தேன். அதைக் கொடுத்து இதே டீக்கடையில் என் முன்னால் டீ வாங்கிச் சாப்பிட்டான்.. இப்போ டீ ஆற்றித் தருகிறரே, இவர் இல்லை, அன்னிக்கு.... தலையில் முண்டாசு கட்டிக் கொண்டு வேறு ஒருவரைப் பார்த்ததாக ஞாபகம்.." என்றேன்.

"இவர் அவரோட மைத்துனர்.. அதை விட்டுத் தள்ளு.. நான் இப்போ சொல்லப்போறதைக் கேட்டா இன்னும் உனக்கு ஆச்சரியமாக இருக்கும்.." என்றான் பாலா.

"சுவாரஸ்யமா இருக்கே.., சொல்லு.." என்றேன். அவன் சொல்லப் போறதை ஓரளவு என்னாலும் யூகிக்கற மாதிரி இருந்தாலும், என் யூகம் சரியான்னு தெரிஞ்சிக்கற ஆர்வத்தில் கேட்டேன்.

"கொஞ்ச நாளைக்கு முன்னாடி அன்னிக்கு நீ கொடுத்த மாதிரியே அந்தப் பிச்சைக்காரனுக்கு யாரோ தர்மம் செய்திருக்கிறார்கள். அதுவும் நீ கொடுத்த மாதிரியே பத்து ரூபா தர்மம் போலிருக்கு. அவன் கொடுத்ததை வாங்கி கல்லாப்பெட்டிலே போட்டு விட்டு டீ கொடுத்திருக்கிறார் இந்தக் கடைக்காரர். அந்த நோட்டு இவர் கல்லாப் பெட்டிலே போய்ச் சேர்ந்த நேரத்திலேந்து இவர் டீக்கடைலே கூட்டமான கூட்டம் அம்முது.. அன்னிலேந்து கல்லாப் பெட்டிலே போட்ட அந்த பத்து ரூபா நோட்டை இவர் எடுக்கறதே இல்லை. தவறி யாருக்கானும் கொடுத்துடக் கூடாதுன்னு அந்த நோட்டுக்கு ஒரு பிளாஸ்டிக் உறையும் போட்டு வைச்சிருக்கார்ன்னா, பாரேன்!.. தினமும் கொழிக்கற லாபத்திலே தான் இந்தக் கடையையே இடிச்சுக் கட்டி ஹோட்டலாக்கப் போறான்னா, பாத்துக்கோயேன்.." என்றான் பாலா.

'ஆக, என் யூகமும் சரி தான்.. நான் வைச்சிருக்கும் நெருப்பு சுட்ட நோட்டுக்கும் இவன் சொல்றத்துக்கும் பொருந்தி வருகிறதே!" என்ற வியப்பில் "அதைச் சொல்லுப்பா. அந்தப் பிச்சைக்காரர் என்ன ஆனார்ன்னு உனக்குத் தெரியுமா?' என்று கேட்டேன்.

"இந்த டீக்கடைக்காரர் எங்க தெரு தான்.. நானும் அவர் கிட்டே அதைத் தான் கேட்டேன். அடுத்த நாளே அந்தப் பிச்சைக்காரர் அந்த இடத்திலே இல்லையாம். எங்கே போனார்ன்னு தெரிலே. அவரைப் பிச்சைக்காரர்ன்னு சொன்னாலே டீக்கடைக்காரருக்கு ஏகப்பட்ட கோபம் வருது. அவரைக் குறிப்பிட்டுப் பேசும் போது 'எங்க சாமி' என்கிறார். அவர் மட்டும் திரும்பி வந்தார்ன்னா, இவங்க வீட்டோடு

வைச்சிகிட்டு அவருக்கு வேண்டிய பணிவிடைகள் செய்ய இந்தக் குடும்பமே தயாராயிருக்கு. தெரிஞ்சிக்கோ.." என்றான் பாலா.

பாலா சொல்றதைப் பார்த்தா நானும் இருக்கேனே என்று தான் நினைக்கத் தோன்றியது. பாலாவை வீட்டுக்குக் கூப்பிட்டேன். "இன்னைக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. அதான் உன் வீடு தான் எனக்குத் தெரியுமே, இன்னொரு நாளைக்கு போன் பண்ணிட்டு வரேன்'ன்னு சொல்லிட்டான். மிக்ஸர் பாக்கெட்டை மட்டும் எடுத்து 'குழந்தைகளுக்குக் கொடு' என்று அவனிடம் தந்தேன். 'எதுக்குடா, இதெல்லாம்' என்றான்.. 'குழந்தைகளுக்குத் தானே தர்றேன்.. வாங்கிக்கோடா' என்றேன். ரொம்ப வற்புறுத்த வாங்கிக் கொண்டான்.

'நான் யூகித்தபடியே எல்லாம் நடக்கிறதே' என்று நினைப்பு மனசு பூராவும் மண்டியது. பிச்சைக்காரர் ரூபத்திலே ஒரு மகானின் ஆசி தான் நமக்குக் கிடைத்திருக்கிறது என்று நினைத்துக் கொண்டே வீடு வந்து சேர்ந்தேன்.

உள்ளே நுழையும் போதே ஜானகி ஹாலில் இருப்பது தெரிந்தது. டிவி பார்த்துக் கொண்டிருந்தாள். முரளி கடை ஸ்வீட் பையை அவள் மடியில் வைத்த போது, "சொன்னபடியே வாங்கிண்டு வந்துட்டேளே.." என்று மலர்ந்தாள்.

கிணற்றடிக்குப் போய் கைகால் அலம்பிக் கொண்டு ஹாலுக்கு வந்தேன்.

"நான் கூட ஒண்ணு வாங்கி வைச்சிருக்கேன், பாருங்கோ.." என்று சமையலறைப் பக்கம் என்னைக் கூட்டிப் போனாள்.ஒரு பெரிய எவர்சில்வர் அடுக்கில் நீரில் அமுக்கப்பட்டிருந்த மாவடுகளைக் காட்டினாள்.. "கொள்ளை மலிவு.. ஒரேயடியா அஞ்சு கிலோ வாங்கிட்டேன்.. ஏன் அவ்வளவுன்னு கோவிச்சிக்காதீங்கோ.." என்று விண்ணப்பம் வைத்தாள்.

'நான் எதுக்குக் கோவிச்சிக்கறேன்?.. நீ செய்யறது எதுவுமே எனக்குப் பிடிச்சுத் தான் இருக்கும்ன்னு உனக்குத் தான் தெரியுமே!"

"தெரியும் தான்.. இருந்தாலும் நீங்கள் வீட்டிலில்லாத போது காசு எடுத்து எதுவும் வாங்கினது இல்லைங்கறதாலே ஒரு பயம்.. அதான்.." என்றாள்.

அவள் முகத்தில் சட்டென்று தோன்றி மறைந்த பயபாவம் எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

"பூக்காரி வந்திருந்தா.. உங்ககிட்டே வாங்கி வைச்சிருந்தேன், இல்லையா?.. அந்த இருநூறு ரூபாயைப் பூக்காரிக்குக் கொடுத்துட்டேன்.."

"ம்....."

"மாவடுக்கு கொடுக்க வேண்டிய காசுக்கு என்ன செஞ்சேன்னு நீங்க கேக்கலியே!.." என்றாள்.

"ஆமாம்லே.. என்ன செஞ்சே?"

"வடுவுக்கு ஐநூறு ஆச்சு. பீரோவைத் திறந்து காசு டப்பாலே இருந்து எடுத்துக் கொடுத்தேன்.." என்றாள்..

"அதான் வேணும்.. இதெல்லாம் நீயும் தெரிஞ்சிக்க வேண்டியது தானே!" என்று பாராட்டுகிற தோரணையில் சொன்னவனுக்கு சட்டென்று உறுத்தியது. அதை நிச்சயம் பண்ணிக் கொள்ள வேண்டிய அவசரத்தில் எழுந்திருந்தேன்.

பீரோவைத் திறந்து பிளாஸ்டிக் டப்பா எடுத்து நோட்டுக் கற்றைக்குள் ஆராய்ந்தேன்..

அந்த நெருப்பு சுட்ட ஐநூறைக் காணோம்.

"ஜானு.. இங்கே வா.. இந்த டப்பாலேந்து தானே எடுத்துக் கொடுத்தே?.." என்று படபடத்தேன்.

ஜானு உள்ளே வந்து தான் எடுத்துக் கொடுத்ததை நிச்சயம் பண்ணினாள். ஒரு நோட்டிலே ஏதோ கறுப்பா அழுக்கு போல இருந்தது.. அதையே செலவழிச்சுடலாம்ன்னு தள்ளி விட்டுட்டேன்.. " என்று புன்னகைத்தாள்.

ஜானுவை கொஞ்சமே கோபித்தாலும் அவள் நொறுங்கிப் போய் விடுவாள். அவ்வளவு மென்மையான மனசு.. அதனால் தேள் கொட்டிய திருடன் போல பேசாமலிருந்தேன்.

"ஏன்னா?.. ஏதாவது தப்பு செஞ்சுட்டேனா?" என்று என் பக்கத்தில் நெருங்கி வந்து முகம் தூக்கி என்னைப் பார்த்து அவள் கேட்ட போதே லேசா கண்கள் கலங்கியது மாதிரி இருந்தது.

"சேச்சே.. அதெல்லாம் ஒண்ணுமில்லை ஜானு.." என்று அவள் தோள் தொட்டு ஆசுவாசப்படுத்திய பொழுது, ஜானுவுக்காக எதையும் இழக்கலாம் என்று தீர்மானம் கொண்ட மனசு தன்னையே இழந்து போனது.

[ நிறைந்தது ]



பசு காயத்ரி மந்திரம்
ஓம் பசுபதியே வித்மஹே மகா தேவாய தீமஹி தந்நோ பசுதேவி ப்ரசோதயாத்
தங்களது தேவைகள்
எங்களது சேவைகள்
கறந்த பசு மாட்டுப்பால்,
சுத்தமான பசு மாட்டு கோமியம்,
பசு சாண விராட்டியும் கிடைக்கும்.
கோபூஜை, கோதானம்,
பசு பராமரிப்பு
மற்றும் தீவனத்திற்கு
அணுகவும்
ஸ்ரீ
பத்மம்
கோசாலை
Contact: 9841290610 , 7418468717
Chennai City
GST Road
TVH
Sripadmam Gosalai
KEYPLAN
SRIPADMAM GOSALAI
(SRI MADURAKAVI TRUST)
P/No.4401, Sri Ganesha Nagar, Mannivakkam, Chennai - 600048. Mobile : 9841290610, 7418468717

श्रीः

**SRIPADMAM GOSALAI** was started during **Sri Ramanuja Sahasrabdi Year 1000th Star Birthday on 01.05.2017 at Mannivakkam, Chennai-600 048** to start with to accomadate 108 cows in a hygienic environment.



Cow is the greatest blessing of human race, lands grow rich, home flourish and civilization advances where the cow is protected and cared for.

The protection and maintenance of cows are the greatest Dharma. Taking care of cow is taking care of one's own mother.

Let us join hands together in this divine cause.



"தாய்க்கு நிகரான தெய்வம்" என்ற பட்டம் பசுவிற்கு மட்டுமே தரப்பட்டு இருக்கின்றது. பசு தனது கன்றுகுட்டிக்கு தர வேண்டிய உணவை நமக்கு அளித்து நம் உயிரைக் காப்பதால்தான் இரண்டாவது தாயாக வணங்கப்படுகின்றது.

அத்தகைய புனிதமான பசுக்களை வளர்த்து, பாதுகாத்து தொடர்ந்து உணவு அளித்துவர குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகி, திருமண தடையின்றி நல்ல பண்பும், அறிவியல் தெளிவும், ஞானமும் உள்ள குழந்தைகள் பிறந்து வாழையடி வாழையாக குடும்ப விருத்தி அடையப்பெறுவது உறுதி என்பது மிகையில்லை.



எனவே முடிந்தவரை எல்லோரும் (ஒவ்வொருவரும்) இக் கோசம்ரக்ஷணத்தில் பங்கு கொள்வது என்பது நமக்கு நம் வாழ்நாளில் கிடையா வரமானாலும் கிடைக்கப் ப்ராப்தி என்பதே மெய்.

காமதேனு காயத்ரி மந்திரம்

ஓம் சுபகாயை வித்மஹே காமதாத்ரியை தீமஹி தந்நோ தேனு: ப்ரசோதயாத்

## YOU CAN DO IT

**Sripadmam Gosalai** gives an opportunity to all Philanthropists and those who believe in this noble cause to contribute liberally and seek the blessings of Holy Kamadhenu for a bright, prosperous and healthy life.



**Gopuja** : **Rs.3,600/-** per puja. Cow puja on your wish day or Your Birthday /Wedding Anniversary / Kids Birthday / Ancestor's Death Anniversary.

**Godhanam (Cow Donation)** : **Rs.27,000/-** and above or you can donate the cow and calf

**Gosamrakshan (Cow Maintenance)** : As you wish

**Cow Feeding** : Per day per cow **Rs.108/-** | Per day for all cows **Rs.1008/-** | Per month per cow **Rs.3000/-**

*All donations & contributions can be sent in the name of*

**"SRI MADURAKAVI TRUST"**

To

**Sripadmam Gosalai**
P.No.4401, Sri Ganesha Nagar,
Manivakkam
Chennai - 600 048

(or)

**Karur Vysya Bank**
Nanganallur Branch
Chennai - 600 061
SB A/c No : 1255155000007898
IFSC : KVBL0001255



**J. Gopalan**
Founder & Co-ordinator
98412 90610

உங்களைப்பற்றி நீங்கள் ...

வாரம் ஒரு வலைப்பதிவர்/ வாசகர் என்ற தலைப்பில், எங்கள் ப்ளாக் வாசகர்கள் எழுதுகின்ற வலைப்பூக்கள் பற்றி மின் நிலாவில் அடுத்த வாரத்திலிருந்து எழுத இருக்கிறோம்.

வலைப்பூவர்களும், வலைப்பூவையர்களும், வலைமொட்டுகளும் வாசகர்களும் தங்கள் பெயர், வலைப்பூ பெயர், வலைப்பூ சுட்டி ஆகிய விவரங்களுடன், தங்கள் வலைப்பூவில் எந்த விஷயங்களுக்கு அவர்கள் முன் உரிமை கொடுத்து எழுதுகிறார்கள் , என்பதையும், அவர்களை எழுத வைப்பது எது - அல்லது 'நான் ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் அவர்களைப் பற்றிய ஒரு சுயபுராணமும் எழுதி, அதை

engalblog@gmail.com

என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

வலைப்பூ நடத்தாத எங்கள் ப்ளாக் வாசகர்கள், அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படிக்கும் ஆர்வம் மற்றும் எழுதும் ஆர்வம் குறித்தும் எழுதி அனுப்பலாம்.

எங்களுக்கு வந்து சேரும் அதே வரிசையில், வாரம் ஒருவர் பற்றிய விவரங்களை வெளியிடுகிறோம்.
எங்கள் ப்ளாக் ஆசிரியர்கள் குழு.

இந்த மின்நிலா இதழ் பற்றிய உங்கள் கருத்துகளை,
engalblog@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் !


KGY Raman